வள்ளுவர் வாய்மொழி

VALLUVAR VĀYMOLI

[பேரறிஞர் கட்டுரைகள்]

தொகுப்பாசிரியர்:

வித்துவான். சி. மீனாட்சிசுந்தர சிவை.

By
Turaicamippillai (Avvaicu).
Comp by
Minatcicuntara Civai (Ci)

பதிப்புரிமை:

கீ. இராமலிங்கம் எம். ஏ.,

தருமபுரம், மாயூரம்.

1955.

முதற் பதிப்பு 1953
இரண்டாம் பதிப்பு 1954
மூன்றும் பதிப்பு 1955

விலை ரூபாய் இரண்டு

கிடைக்குமிடம்:

கி. இராமலிங்கம் எம். ஏ.
தருமபுரம், மாயூரம்.

ஞானசம்பந்தம், அச்சகம், தருமபுரம்.

13 AUG 195
MADRAS

முன்னுரை

அறிவு வளர்ச்சிக்கு என்னென்னவோ வகையான பல ஏற்பாடுகள் செய்து வருகிறோம். அவற்றின் பயனாய் முன்னிலும் அறிவுத்துறையில் இன்று நாம் முன்னேறி யிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால், அன்பு வளர்ச்சிக்கும் அற வளர்ச்சிக்கும் பெரிதும் நாம் ஏதும் செய்யவில்லை. செய்துவரும் சிறு முயற்சியுங்கூட, முயற்சிக்குத்தக்க அளவாவது அன்பையும் அறத்தையும் வளர்த்திருப்பதாகத் தெரியவில்லை.

அறிவு என்பது அன்போடும் அறத்தோடும் கூடிய ஒருபொருள் என்பதை நாம் மறந்தோம். அன்பும் அறமும் வளர்ந்தால்தான், உண்மையில் அறிவு வளர்ந்தது என்று சொல்லலாம். அன்பற்ற செயல்களையும் அறமற்ற செயல்களையும் திறமையோடு செய்தற்குத் துணையாக இருக்கும் ஒன்றை அறிவு என்று கூறக் கூடாது. ஆனால், இன்று நாம் வளர்த்துள்ள 'அறிவு' என்று நாம் நினைக்கும் ஒன்று, அன்பையும் அறத்தையும் புறக்கணித்த செயல்களையே, பல துறைகளிலுள்ள பெருவாரியானவர்களும், செய்ய உதவுவதை அன்றாட வாழ்க்கையில் கண்கூடாக நாம்கண்டு வருகிறோம்.

இனி அறிவு அறிவாக உருக்கொள்ள வேண்டுமானால் அன்பும் அறமும் மக்கள் உள்ளங்களில் ஊன்றி இடங்கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்ள, பெருந்துணை புரியவல்லது வள்ளுவர் வகுத்த வாய்மொழியே யாகும். மக்களின் மனக்கோணலை மாற்றுவதற்கு அதனினும் மேலான அறநெறி நூல் வேறு எதுவும் உலகினில் இல்லை.

திருக்குறளையும் அதனை யருளிய வள்ளுவனாரையும் பற்றிநாடறிந்த நற்றமிழ் அறிஞர்கள் ஆராய்ந்து எழுதி

யுள்ள செய்திகளை முதற்கண் படித்தல், குறள்நூலைப் பயிலுதற்கும் அதிற் கூறும் நெறியில் ஒழுகுவதற்கும் வழிகோலுஞ் செயலாகும். அத்தகைய அறிவின் செல்வர்கள் பதின்மர், பல கோணங்களில் கண்டு வரைந்துள்ள பத்து ஆராய்ச்சிக் கட்டுரைகளை இத் தொகுப்புநூல் உலகுக்கு அளிக்க முன்வந்திருக்கின்றது. பொதுவாகக் கற்பார் அனைவர்க்கும் பயன்படக் கூடிய இந்நூல், கல்லூரி மாணவர்களது கல்வியறிவை வளம்படுத்தி, அன்புநெறி அறநெறிகளில் அவர்கள் தலைப்பட்டு ஒழுகுதற்குத் துணையாகுமாறு, திருக்குறட் பனுவலைத் துருவிப் படிக்க வேண்டுமே என்னும் ஆர்வத்தை, அவர்கள் உள்ளங்களில் எழுப்பிவிடும் என்பது திண்ணம்.

இக்கட்டுரை நூலைத்தொகுத்தவர் வித்துவான் திருமதி. கி. மீனாட்சிசுந்தர சிவையாவர். கூட்டுறவுத் துறையின் தலைவராக விளங்கி, சென்னையில் தமிழ் மாநிலச்சங்கம் அமைத்து, அதன் வாயிலாகத் தமிழும் தமிழரும் வளர்வதற்கான பெருத்த ஏற்பாடுகளைச்செய்துவரும் நேரத்தில் கதுமென மறைந்துவிட்ட எனது அண்ணார் உயர்திருவாளர்: திவான்பகதூர் தீ. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் மகளார். இவருடைய அருமைத் தந்தையாரைப் போன்றே இவரும் நம்மொழியில் பற்று நனியார்ந்தவராதலோடு, சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் சிறப்புறத்தேறி, தமிழ்க்கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர். இவர் படித்துச் சுவைத்த பகுதிகள், அறிஞர் எவரும் சுவைத்துப் பயனடையக்கூடிய பகுதிகளாகவே அமைந்திருக்கின்றன. வாழ்க இவரது அரும்பணி!

கீ. இராமலிங்கம்,
நகராட்சி ஆணையர்
(முனிசிபல் கமிஷனர்)

திருச்சிராப்பள்ளி
26—2—1953.

உள்ளுறை

வள்ளுவர் வரலாறு ... 1
வித்துவான் திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ்ப் பேராசிரியர். தியாகராசர் கல்லூரி, மதுரை.

வள்ளுவர் - தெய்வ ஒளி ... 15
இராவ்சாகிப் சு. வையாபுரிப் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்., தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

வள்ளுவர் வான் சிறப்பு ... 28
டாக்டர் திரு. மு. வரதராசனார் அவர்கள், எம். ஏ, எம் ஓ. எல்., தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

வள்ளுவர் மாண்பு ... 44
தமிழ்ப்பெரியார் திரு. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள், சென்னை.

வள்ளுவரும் பாரதியாரும் ... 58
திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்., தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

வள்ளுவர் பொதுநெறி ... 64
வித்துவான், திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள், எம். ஏ, பி. ஓ. எல். எல் டி., தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

வள்ளுவரின் பொன்னுரைகள் ... 77
டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ., தமிழ்ப் பேராசிரியர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

வள்ளுவர் அறம் ... 89
வித்துவான்; திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள், தமிழத்துறைத் தலைவர், தருமபுர ஆதீனம் கீழ்த்திசைப்பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வள்ளுவரும் அயல்நாட்டவரும் ... 103
திரு. கி. இராமலிங்கம் அவர்கள், எம். ஏ., நகராட்சி ஆணையர், திருச்சிராப்பள்ளி.

வள்ளுவர் வாய்மொழி ... 111
நாவலர், பண்டித. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

நன்றியுரை

திருக்குறள் நூலோடு பல நூல்களையும் பலகாலம் பயின்று, நுணுகி ஆராய்ந்ததன் பயனாக அவரவர்கள் அரிதின் எழுதிய சுவை மிக்க பகுதிகளை இக்கட்டுரை நூலில் தொகுத்து அச்சிட்டுக் கொள்வதற்கு அன்பு கூர்ந்து, கைம்மாறு ஏதும் கருதாது, இசைவளித்த அறிவுப் பெருந்தகையாளர்கட்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இசைவு பெறும் வகையிலும் பிற வகையிலும் பெரிதும் உதவிபுரிந்த எனது சிற்றத்தனார், திருச்சி நகராட்சி ஆணையர் திரு. கீ. இராமலிங்கமுதலியார் எம்.ஏ. அவர்கட்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? என் அன்பார்ந்த வணக்கங்கள் அவர்கட்கு உரியனவாகும்.

சி. மீனாட்சிசுந்தர சிவை

1. *வள்ளுவர் வரலாறு

[வித்துவான், திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்]

I. பெற்றோர்

புலவர் புராணமும், கேள்விவழிச் செய்தியும், சிறப்புப்பாயிரங்களும், ஒருமுகமாகத் திருவள்ளுவருடைய தந்தை பெயர் பகவன் என்றும், தாய் பெயர் ஆதி யென்றும் கூறுகின்றன. ஞானமிர்தமென்னும் நூலுரைமட்டில் திருவள்ளுவருடைய தந்தை பெயர் யாளிதத்தன் என்றும், தாய் ஆதிப்புலைச்சி யென்றும் கூறுகின்றது. புலவர் புராண முதலியவற்றை நோக்க, ஞானமிர்த உரை பழமையானது; ஆயினும், அது கூறும் செய்தி நாட்டில் பயில வழங்கவில்லை. மேலும், யாளிதத்தன் கதை. ஏனை வரருசி, இந்திர தத்தன் முதலியோர் கதைகளோடு விரவியே ஞானமிர் தத்துட் காணப்படுகிறது. இக்கதைகள், குணட்டியர் என்பவரால் பைசாச மொழியில் எழுதப்பெற்ற பிருகற் கதையெனப்படும் பெருங்கதையில் அடங்கிய **புனைந்துரைக் கதை**களாம் என்பது அதன் வடநூல் மொழிபெயர்ப்பால் விளக்கமுறுகின்றது. அன்றியும், ஞானமிர்தம் கூறும், "யாளி, கூவற்றூண்டும் ஆதிப் புலைச்சி காதற்காசனி யாகி மேதினி, இன்னிசை

---

* 'தெய்வப் புலவர் திருவள்ளுவர்' என்ற நூலில் இருந்து தொகுத்தது. அந்நூல் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு.

யெழுவர்ப் பயந்தோள்" என்ற அடிகளும் யாளிதத் தன் ஆதிப்புலைச்சியைக் கூடித் திருவள்ளுவரைப் பயந்தான் என்று கூறுகின்றில. அதன் பழையவுரை யொடு கூடிய ஏடுகள், "எழுவரென்றது சுநந்தர் முதலிய எழுவரை"யென்று குறிக்கின்றன. ஞானமிர்த அச்சுப்படியில் காணப்படும் உரைதான், "எழுவர் கபிலரையுள்ளிட்ட எழுவர்" என்று உரைக்கிறது. இதற்குரிய உரை வேறுபாடு, சுநந்தர் முதலிய எழுவ ரென்பது. இந்த ஞானமிர்தத்துக்கும் திருவள்ளுவ ருக்கும் யாதோர் இயைபுமில்லை யென்றதற்குப் போதிய சான்றாகிறது.

இனி, திருவள்ளுவருடைய பெற்றோர் பகவனும் ஆதியுமாவர் எனக் கூறும் பிற செய்திகட்கு ஆதரவு ஒன்றும் இதுகாறும் கிடைத்திலது. திருக்குறளில் முதற்குறள், உலகிற்கு முதல் இது வென்றதற்கு "ஆதி பகவன்" என்று கூறுவதுகொண்டு, ஆதியென்பது தாயது பெயரென்றும், பகவனென்பது தந்தையது பெயரென்றும் கொள்ளப்படுகின்றன என்பர் சிலர். இவ்வாறு தம்மைப்பெற்ற தாய்தந்தையர் பெயர் களைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ குறித் தோதிய தமிழ் நூலாசிரியர் ஒருவரும் இலர். எனவே, அவ்வாறு ஓதுவது தமிழ்ச் சான்றோர் மரபன்று என்பது தெளிவாகிறது. அதனால், திருவள்ளுவரைப் பெற்ற தாய் ஆதியெனவும், தந்தை பகவன் எனவும் கொள்வது ஆராய்ச்சி யறிஞர் கொள்ளத் தகுவ தன்றாம்.

இனி, கபிலரகவலும், புலவர் புராணமும், பிறவும் ஒருமுகமாகக் கூறுதல்கொண்டு, திருவள்ளுவருடைய

பெற்றோர் பகவனும் ஆதியாருமாவர் என்று கொள்வதாயின், அஃது ஆராய்தற்குரியதேயாம். திருவள்ளுவர் காலத்தே ஆடவர் ஆதன் என்று பெயர் பெற்று வாழ்ந்ததுபோல, மகளிர் ஆதியென்னும் பெயருடன், "ஆதிமந்தியார்" என்றாற்போல இருந்ததுண்டேயன்றி, பகவன் என்ற பெயர் தாங்கியிருந்ததில்லை, முக்கோலேந்தித் திரிந்த முனிவரைப் பகவர் என வழங்கியதுண்டு. இதனால், திருவள்ளுவருடைய தாய் பெயர் ஆதியார் எனல் பொருந்துமென்பதும் தந்தை பெயர் பகவனெனல் இயற்பெயராக அமையாதென்பதும் விளங்குகின்றன.

இனி ஆதியாரைப் புலைச்சியெனவும், பகவனைப் பார்ப்பன அந்தணரெனவும் திருவள்ளுவர் வரலாறு பற்றிய குறிப்புக்கள் கூறக் காண்கின்றோம். முக்கோலேந்தித் திரிந்த துறவிகளாகிய அந்தணர்களைப் பகவரென்பது ப்ண்டைநாளை வழக்கு. அதனால், பகவனை அந்தணரென்றல் ஒருவாறு அமையும். அரசர், வணிகர், வேளாளர், பார்ப்பனர் என்பாருள் யாவரும் துறவிகளாகியபோது அந்தணர் எனப்படுவர். "அந்தணர் என்போர் அறவோர்" எனத் திருவள்ளுவரே குறிப்பது காண்க. ஆகவே, பகவனாகிய அந்தணர் பார்ப்பனராகத்தான் இருக்க வேண்டுமென வரைந்து கூறல் குற்றமாம். கபிலர் முதலிய சான்றோராகிய பார்ப்பனர் அந்தணராதலின், அவரைப் பயந்தவர் பகவன் எனப்படுதலின், பகவனை அந்தணன் எனப் பிற்காலத்தவர் கருதியிருக்கலாம். கபிலர் அந்தணரெனப் படற்கேற்ப, மணமும் மகப்பேறுமின்றித் துறவு வாழ்வு வாழ்ந்தவர். பகவனாகிய பார்ப்பனரும் அந்தண

ராயின், அவர் ஆதியை மணந்தார் என்றும், திரு வள்ளுவர் முதலியோரைப் பெற்ருர் என்றும், அருள் என்பது சிறிதுமின்றித் தாம் பெற்ற மக்களை ஆங் காங்குக் கைவிட்டு ஏகினரென்றும் கூறப்படுவன அனைத்தும் பொய்யுரைகளாம்.

இனி, புலாலுண்போர் அனைவரும் முற்காலத்தே நூலோரால் புலையரெனப்பட்டனர். புலாலுண்ணும் ஒருவனைப் புலையன் எனவும், புலாலுண்ணும் ஒருத்தி யைப் புலைச்சியெனவும் வழங்குவர். "பொல்லாப் புலாலை நுகரும் புலையரை" எனத் திருமூலர் கூறுவது காண்க. பண்டைநாளில் பலரும் புலால் உண்டன ரென்பது ஆராய்ச்சியாளர்க்குத் தெரிந்த செய்தியாகும். அங்ஙனமாக, ஆதியாரை மட்டில் புலைச்சியென்று கூறுவது பொய்யாம், இவ்வாற்ருல், ஆதியாகிய புலைச் சியைத் திருவள்ளுவர் வரலாற்றில் இணைத்துரைப்பது பெருங் குற்றமாம்.

II. உடன் பிறந்தார்

இனி, திருவள்ளுவரையுள்ளிட்ட எழுவர் இத் தாய் தந்தையர்க்குப் பிறந்த மக்கள் என்பது திருவள் ளுவர் வரலாற்றிற் காணப்படும் குறிப்பாகும். அவ்வெழு வரையும் நோக்குங்கால், இக்குறிப்பைப் படைத்து மொழிந்தோர், இலக்கிய அறிவோ கால வுணர்வோ சிறிதுமில்லாத வெளிற்றறிவினர் என்பது தெளிவா கிறது. ஔவை, வள்ளி, அதிகமான், கபிலர் என்போர் சங்க இலக்கியங்களிற் காணப்படும் சான்ருேராவர். இவர்களது வரலாறும், ஓரளவு கற்ருேர் அனைவர்க்கும் இனிது தெரிந்திருக்கிறது. அது காண்போர், இவர்களை

ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்கள் என ஒருகாலும் உடன்படார்.

III. ஊர்

இனி, திருவள்ளுவனாரது ஊர் திருமயிலை (மயிலாப்பூர்) என்பது பெரும்பான்மையான வழக்கு. சைன சமயத்தவர் இடையில் வழங்கும் கதையும் திருமயிலையைக் குறிக்கிறது; திருவள்ளுவமாலை யொன்றுமே இவரது இடம் மதுரையெனக் குறிக்கின்றது. இதற்கேற்பவே, திருவள்ளுவர் நூற்கு உரைகண்ட பரிமேலழகர் தொண்டை நாட்டினரெனக் கண்ட தொண்டை மண்டல சதகம், "திருக்காஞ்சி வாழ் பரிமேலழகன் வள்ளுவனார்க்கு வழி காட்டினான் தொண்டை மண்டலமே" என்று கூறியது, வள்ளுவனார்க்கும் இடம் இத்தொண்டைநாடே என எடுத்தோதுகின்றிலது.

திருமயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலும் பிற்காலத்தே கட்டப்பெற்றது. இவ்வாற்றால், திருவள்ளுவர்க்கு ஊர் திருமயிலை எனக் கூறுவது ஒருதலையாகத் துணிதற்கில்லாமையும், எனவே, திருவள்ளுவமாலை கூறுவதே வலியுறுவதும் காணப்படுகின்றன.

IV, மனை வாழ்வு

மனைவி

இனி, திருவள்ளுவர் வாசுகி யென்பவரை மணந்து இல்லறம் புரிந்து வந்தனரென்ற செய்தி, மேற்கூறிய கேள்வி வழி வரலாற்றிலும் ஏனைப் புராண முதலியவற்றிலும் ஒப்பக் கூறப்படுகிறது. ஆதியார் பகவனார் என்னும் பெயர்களை நோக்க, வாசுகியென்னும் பெயர்

ஆராய்ச்சிக்குரிய தொன்றுகிறது. வாசுகி யென்னும் வடமொழிப் பெயர், அந்நாளில் தமிழ்நாட்டில் வழங்கிய தமிழர் பெயராகத் தோன்றவில்லை. வடவரும் அவரது வடமொழியும் விரவியிருந்த காலத்தே திருவள்ளுவர் வாழ்ந்தாராயினும் வடமொழிப் பெயருள் வாசுகி யென்பதுபோலும் பெயர் மக்கட்கு வழங்கியதில்லை.

ஆகவே, திருவள்ளுவர்க்கு மனைவியார் ஒருவர் இருந்தனரென்பது உண்மையாயினும், அவர் பெயர் வாசுகி யென வழங்கிற்றென்பது பொருத்தமன்றென்று காண்கின்றோம். இவ்வாறே, வாசுகியார் தந்தை பெயர் மார்க்கசகாய முதலியார் என்பதும் முழுத்த பொய்யுரையாகிறது. காவிரிப் பாக்கத்துக்கு மேற்கில், பாலாற்றின் கரையில் இருக்கும் விரிஞ்சிபுரத்துக் கோயிலிலுள்ள இறைவனை, அங்குள்ள பழங் கல்வெட்டுக்கள் வழித்துணை நாயனாரென்றும், பிற்காலக் கல்வெட்டுக்கள் மார்க்கசகாயீச்சுரரென்றும் குறிக்கின்றன. மார்க்கசகாயனென்ற இறைவன் பெயர் நாட்டில் வழங்கிய பிற்காலத்தே மக்கள் தமக்கும் மார்க்கசகாயனெனப் பெயர் கொண்டிருந்தனராதலால், அப்பெயருடையார் ஒருவர், திருவள்ளுவர் காலத்தே இருந்தாரென்பது பொருந்தாது.

தொழில்

திருவள்ளுவர் கற்புடைய மனைவியாருடன் கூடி வாழ்ந்து வருகையில் நெசவுத் தொழில் புரிந்துவந்தாரென்று கூறி, "இழைநக்கி நூல் நெருடும் ஏழையறிவேனோ" என அவர் தம்மைக் கூறுவதாகச் சொல்லும் வெண்பாவை அதற்குச் சான்றாகக் காட்டுவது உண்டு. ஆனால், அத்தொழில்பற்றிய குறிப்பொன்றும்

அவரது நூலிற் காணப்படவில்லை. உழவு, வாணிபம், அரசியல், அமைச்சியல், தூதுபோதல், போர் செய்தல் மறையோதுதல் முதலிய தொழில்களை ஆங்காங்குக் கூறுவதுபோலவேனும் தமது நெய்தற்றொழிலை அவர் குறித்திலர். ஆதலால், அவர் நெய்தற்றொழிலைத்தான் தமது தொழிலாகக் கொண்டிருந்தாரெனக் கூறுதற்கு இடமில்லை.

V. நூலியற்றல்

உலகியற்குப் பொருளாவன அறமும் பொருளும் இன்பமும் எனப் பண்டையோர் உரைத்த உறுதிப் பொருள்களையே மீளவும் எடுத்துத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் உரைக்கவேண்டிய கடமை அறிவுடைய சான்றோர்க்கு உளதாவதை நன்கு உணர்ந்தார். உலகியலில் செய்யும் நல்வாழ்வே வீடுபேற்றுக்கு வாயிலாம் என்பதை வற்புறுத்த விழைந்தார்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது வானுறையும் தெய்வ வாழ்வாம் என்பது பழந்தமிழரது வாழ்க்கைக் குறிக்கோள். இதனையே பல்லாற்றானும் எத்திறத்தோரும் விழைந்தேற்கும் வண்ணம் நூல் செய்வாராயினர். இவ்வுண்மையினை நன்கு ஆராய்ந்து கண்டே கல்லாடனார் என்பார், ''சமயக் கணக்கர் மதிவழி கூறாது. உலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவன்'' என்று விளக்கினர். ஏனையோரெல்லாம் இவ்வுலகியலைக் கருவியாகக்கொண்டு தத்தம் சமயக் கருத்தினையே வற்புறுத்த முயன்றனர்.

உலகியலை, அறம், பொருள், இன்பம் என்ற மூன்று குறிக்கோளின்கண் வைத்து ஆராய்ந்த மூதன்மை

தொல்காப்பியர்க்குரித்து. அதனைப் பயன்படவுணர்ந்து, உண்மை யுணர்வால் மக்கட்கு வகுத்தும் விரித்தும் உரைத்த உயர்நிலைப் பெருமை திருவள்ளுவர்க்கே யுரியது. இவர்போல் உலகியற் பொருளை இவ்வண்ணம் வகுத்தும் விரித்தும் உரைத்த அறிஞர், இப்பரந்த மண்ணுலகில் எவருமே இலர் என்பதை யாவரும் ஒப்பு வுரைக்கின்றனர்.

VI. திருக்குறள் தனித்தமிழ் முதனூல்

இத்திருக்குறள் நூல் அமைந்துள்ள முறை வேறே எம்மொழியிலும் காணப்படவில்லை; ஆகவே, இதன் அமைப்புத் திருவள்ளுவர் தாமே படைத்துக்கொண்ட தொரு தனித்த உண்மை முறையாகும். நிலவுலகில் அறிவுடை மக்கள் காணும் உயிர்க்கொள்கை பலவும் இதன்கட் காணப்படும்: ஆனால், இத் திருக்குறளின் கண்ணுள்ள கொள்கைகள் பல பிற எந்நாட்டு எம்மொழி நூலிலும் காணப்படுவதில்லை. இதுவே, இதற்குள்ள தனிமை நலமும் பெருமை நலமுமாகும்.

தமிழ் வாழ்வின் தனிப்பயனாய்த் தோன்றித் தமிழ்ப் புலமை சிறந்து தமிழ் நினைவு தமிழ்ச் செயல் களைத் தமிழுள்ளத்திற் கண்டுரைத்த தமிழ்த் தனி மகனரான திருவள்ளுவர், தங்காலத்து வழக்கும் செய்யுளும் ஆகிய இரு பெருந் தமிழ்க் கடல்களையும் நுண்மாண்புலமை யென்னும் மத்தினைக் கொண்டு கடைந்து எடுத்த தனிப் பெருந் தமிழ் அமுதம் இத் தண்டமிழ்த் திருக்குறள் என்பது யாவரும் உள்ளக் கிழியில் உருவுபெறப் பொறித்துக் கொள்ள்வேண்டிய உண்மையாகும்.

திருக்குறள் என்னும் அரிய அறநூல் உலகியலுக்குரிய பெரு நூலாகும். உலகியலில் கூறுதற்குரிய பெரிய பொருள்கள் பலவற்றினும், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினும் பெருமைமிக்க பொருள் வேறே கிடையாது. வீடுபேறும் இம்மூன்றன் ஏதுவாகப் பெறப்படுவதே யன்றி, இம் மூன்றனுமே எய்தப்படுவதுமாகலின், பெருமை யென்பது இம் மூன்றுக்குமே உரியதென்பது தேற்றம். ஆகவே எவ்வகையினும் அற முதலிய மூன்றுமே பெருமைக்கு உரிமைகொண்டு நிற்றலின், அம் மூன்றனையும் விளக்கும் நூலது பெருமைக்கு வேறே எம்மொழி எந்நூலும் இணையாகாதாகலின், இதுவே எல்லாப் பெருமைக்கும் உரித்தாய்ப் பெருநூல் எனப்படுவதாயிற்று.

பெருநூல்களை யாத்தற்குப் பெருமை மிக்க வழிகள் பல உண்டு, பெருமையைப் பெரிதாய்க் காட்டுவதை விட, அப் பெருமை நலம் சிறிதும் குன்றாதவகையில் சிறுமைக்கண் அடக்கிப் பலர்க்கும் தெரியப் பண்ணுவதுதான் புலவரது சீர்த்த பெருமைச் செயலாகும். மேலும் பெருமைப் பொருளைப் பெருநெறிபற்றி உணர்த்தலுறின், அப்பெருநெறி தேறி நுனித் துணரும் அறிவுப் பெருமை உடையார்க்கே அந்நூல் உரியதாய் விடும். நூற பொருள், பெரியோர் சிறியோர் அனைவோர்க்கும் பொதுவாதலால், சிறுமை யறிவினரான மக்கள் பலரும் அறிதற்காகவே, பாக்களுட் சிறுகியதும் குறுகியதுமான குறட்பாக்களால் இந்நூலை ஆசிரியர் திருவள்ளுவர் யாத்திருக்கின்றார்.

VII. நூற்பெயர்

இவ்வாறு, குறும்பாவாகிய குறட்பாவால் பெரும் பொருளை உணர்த்த வந்தவர், குறள் என்றே நூலுக்

கும் பெயர் குறித்திருக்கின்றனர். நூற்பெயர் விளங் கப் பெயர் குறித்திலர். உலகில் நிலவும் பெரும் பொருளை எல்லாம் ஒரு வழியால் இனிது எளிது விளங்கக் கூறுவதால், நூற்பொருளை யுள்ளடக்கிய பொதுப் பெயர் ஒன்றால் சுட்டிக்கூறல் அமையாமை பற்றி, கருவியாகிய குறட்பாவின் பெயரால் நூலைக் குறித்திருப்பது நோக்கத்தக்கது. இதன்கட் கூறப்படும் அறம் முதலிய பொருள்கள் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் இயைந்து பிரிப்பற நிற்றலால், இம்மூன்றை யும் தொகுத்துச் சுட்ட வல்லதொரு பொதுப்பெயர் இதற்கு எய்தாதாயிற்று. அறநூல் என்று பெயர் குறித் தால், அது பொருளையும் இன்பத்தையும். சொன்ன மாத்திரத்தே கேட்டார் மனத்துட் கிளர்ந்து எழுவிக் கும் வன்மை யுடையதாகாது; ஏனைப் பொருளால், இன்பநூல் என்று குறித்த வழியும் அதுவே முடிவா கும். இனி, ஒழுக்கநூல் என்ற வழி, அது, வழக்கு, தண்டம் என்பனவற்றையும் சுட்டாதாகின்றது; இந் நூற்கண், வழக்கும் தண்டமும் ஆங்காங்குப் பொது வகையில் கூறப்படுகின்றன. உலகியல் நூல் என்றக் கால், அதனோடியைத்துக் காணப்படும் அறிவு நூல் என்பதனின் நீங்கித் தனிமையுறும்; இஃது அறிவு நூலுமாதலின், சிறப்புடைய ஒன்றன் பெயரால் வரைந்து கூறுவதும் குன்றக் கூறலாகின்றது. இவ்வாறு எல்லாமாய் அல்லதுமாய் உள்ள பொருள்வகை எல்லாவற்றையும் சுட்டிவரும் இந்நூற்குப் பொரு ளியல்பு காட்டும் பெயர் ஒன்று கிடைத்தல் அரிதாதல் கண்டே, ஆசிரியர், குறட்பாவாகிய கருவியினலேயே குறள் என்னும் பெயரால் வழங்கினரெனக் கொள்ளல்

வேண்டும். திருவள்ளுவரது தெய்வப் புலமையின் விளைவாகத் தோன்றிய சிறப்புப்பற்றிச் சான்றோர் இக்குறணூலைத் திருக்குறள் என்று பாராட்டுவாராயினர்.

இனி, இத் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் (காமத்துப்பால்) என்று மூவகைப்படுத்து, ஒவ்வொன்றினையும் சில பல அதிகாரங்களாக வகுத்து, அதிகாரம் ஒவ்வொன்றினையும் பப்பத்துக் குறட்பாக்களால் கூறிச்செல்கின்றார். பப்பத்தாக நிற்கும் குறள்களும், எடுத்துக்கொண்ட பொருட்கு இலக்கணம் கூறுவதும், ஏதுவும் பயனும் கூறுவதும், பொருளியல்பு உரைப்பதும், விதிப்பதும், மறுப்பதும், சில பொருள்களைத் துணை யென்பதும் சிலவற்றை அணி யென்பதும், சிலவற்றைப் படை யென்பதும், முறை செய்வதும், முன்பின் நோக்கி வலியுறுத்துவதும், நூலோர் முடிபென்பதும், சான்றோர் மேல்வைத்துக் கோடற்பான்மை காட்டுவதும், உவமை வகையாற் சிலவற்றை விளக்கலுற்று, பொருளையே உவமம் செய்வதும், ஏனையவற்றை உவமம் செய்வதும், உருபு விரித்து உவமிப்பதும், உவமையும் பொருளும் ஒருங்கு வைத்து உருவகம் செய்வதும், ஓட்டு, வஞ்சப் புகழ்ச்சி முதலிய அணியுறக் கூறுவதும், வியப்பு, வெகுளி முதலிய மெய்ப்பாடு தோன்றக் கூறுவதுமாகிய பல வகையால் இயன்றுள்ளன.

இனி, அறத்துப்பாலுள் அடங்கிய அதிகாரங்களுட் சிலவற்றைத் தொகுத்துப் பாயிரமெனவும், இல்லறவியல், துறவறவியல் எனவும், பொருட்பால் அதிகாரங்களை வகுத்து, அரசியல், அங்கவியல், ஒழிபியல் எனவும், இன்பத்துப்பாலிற் காணப்படும் அதிகாரங்

களை, களவியல், கற்பியல் எனவும் வகுத்தடக்கிக் கூறினர் என்பர். இவ்வியல் வகுப்புக்கள் ஒரு நெறியாகவன்றி வேறு வேறு வகையாக வகுத்துக் கூறப் பட்டுள்ளன எனத் திருவள்ளுவமாலை தெரிவிக்கிறது. மணக்குடவர் உரையில் இவ்வியல் வகுப்பு வேறு படுகிறது. இதனால், இயல் வகுப்பு மட்டில் ஆசிரியர் திருவள்ளுவனார் கொண்டதன்று என்பது தெளிய விளங்குகிறது. அதிகாரங்களின் வைப்புமுறை மட்டில், பரிமேலழகர், மணக்குடவர் முதலியோரது தொகுப்பில் வேறுபாடின்றி ஒப்ப நிலவுவதால், அம்முறை ஆசிரியரே கண்டுரைத்ததெனக் கொள்ளலாம்.

அறிவு, விழைவு, செயல் என்ற மூன்றும் உயிர்கட்குரிய பண்புகளாகும். அவற்றுள் அறிவு பொருட் பேற்றுக்கும், விழைவு இன்ப நுகர்ச்சிக்கும், செயல் அறஞ்செய்தற்கும் பயனாகும். இப்பண்பும் பயனும் கொண்டு இன்பமே நாடி நிற்பதுபற்றி, பொருளதிகாரத்து இன்பத்திணையின் இயல்பு கூறப்புகுந்த தொல்காப்பியர், "இன்பமும் பொருளும் அறனும்" என முறை செய்து கூறினர். அறத்தான் வருவதே இன்பம்; பொருளிலார்க்கு இவ்வுலகில் இன்பமில்லை என அறமும் பொருளும் இன்பப் பேற்றுக்கு ஏதுவாதலைத் திருவள்ளுவர் செயல்முறையிற் கூறுகின்றார்; அதனால், அறத்துப்பாலை முதற்கண்ணும், பொருட்பாலை இடையிலும், இன்பத்துப்பாலை முடிவிலும் முறை செய்து வைத்து, முப்பாலாகிய திருக்குறளை உரைத்துள்ளார். இனி, பரிமேலழகர், இம்மை மறுமை வீடு என்ற மூன்றையும் பயப்பதுபற்றி அறம் முதலிலும், இம்மை மறுமை என்ற இரண்டையும் பயப்பதுபற்றிப்

பொருள் இடையிலும் இம்மை யொன்றே பயப்பது பற்றி இன்பம் இறுதியிலும் வைக்கப்பட்டன என்பர்.

VIII. அரங்கேற்றம்

இனி, இத்திருக்குறள் நூல், மதுரையில் இருந்த சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதென்றும், அக்காலத்தே இந் நூலை ஏற்க மறுத்த சங்கப்புலவர், இத் திருக்குறட்கு இடந்தருமுகத்தால் சங்கப்பலகையால் தெருட்டப் பட்டனரென்றும் கூறப்படும் செய்தியும் பிற்காலத்தோர் புனைந்துவிட்ட பொய்யுரையே. நல்ல தன் நலத்தை உள்ளவாறு காணும் உரவோரே புலவரெனப் படுவராகையால், அவர் கூடிய பேரவையில் திருவள்ளுவர் முதற்கண் புறக்கணிக்கப்பட்டா ரென்றற்கு. அச்சங்கச் சான்றோர் செய்துள்ள பாட்டுக்களின் தொகுதிகளாகக் காணப்படும் தொகை நூல்கள் ஆதரவு தருவனவாக இல்லை.

IX. இறுதிநிலை

முப்பால் வழங்கி முழுதுலகும் தொழுதேத்தும் மூவாப் புகழ்பெற்ற முதற் புலவரான திருவள்ளுவனார், பின்பு. ஏலேலசிங்கர் என்னும் செல்வர் தொடர்புபெற்று மனையறம் புரிந்து வந்தனர் என்ற செய்தி பொதுவாகக் கூறப்படுகிறது. அவன் இவர் பால் மாணவனாய் அறங்கேட்டான் என்பாரும், இவர் அவன்பால் நூல்பெற்று நெசவுத் தொழில் புரிந்தார் என்பாரும் பல திறத்தர் உளர், இவை எத்துணை யுண்மையானவை என்பது அறியக்கூடாததாயினும், இருவர்க்கும் தொடர்பு இருந்ததெனக் கொள்வதில் குற்றமில்லை. திருவள்ளுவர்க்கு மக்கட்பேறு உண்டோ இல்லையோ என்று கூறத்தக்க வகையில் அவர்

வரலாறு விளக்கமின்றியுளது. திருக்குறளை நோக்கு மிடத்து அவர்க்கு மக்கட்பேறு உண்டெனத் தெளி தற்கு இடமிருக்கிறது. அவர்கள் திருவள்ளுவர் போல் பொன்றுப் புகழ் பெறும் பேறு இலராக இருக்கலாம்.

திருவள்ளுவர் விண்புகுவதற்கு முன்பே அவர் மனைவியார் தம் பூதவுடம்பு நீத்தனரென அவர் வரலாறு கூறுகிறது. அவர் பிரிவாற்ருது வள்ளுவர் வருந்திப் பாடியதாகப் பாட்டொன்றும் காட்டப்படு கிறது. சின்னுள் கழித்துத் திருவள்ளுவரும் இறைவன் திருவடி சேர்ந்தாரென்றும், அவருடைய மாணவ ராகிய ஏலேலசிங்கரே இறுதிக்கடன் ஆற்றினுரென் றும் கூறுகின்றனர். யாதோர் ஆடம்பரமுமின்றி மிக்க எளிய நிலையில் திருவள்ளுவர் தமது வாழ்க்கை யை நடத்தி, இறைவன் திருவடி நீழலெய்தினுரென்று கொள்வதே இவரது இறுதிபற்றிக் கூறப்படும் நிகழ்ச்சிகளின் உண்மைக் கருத்தாகும்.

X. பிறநூல்கள்

'தூங்கினவன் தொடையில் திரித்தது கயிறு' என்றுற்போல, திருவள்ளுவர் பேரால் ஞானவெட்டி யான், திருவள்ளுவர் ஞானம் என்பன முதலிய சிறு நூல்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவற் றிற்கும் திருக்குறட்கும் எத்துணைப் பொருந்தாமை யுண்டோ, அத்துணைப் பொருந்தாமை அவர்க்கும் அந் நூல்களுக்கும் உண்டென்பது கண்டு அறிவுடை உலகம் அமைந்தொழுகுகின்றது. வாழ்க திருவள்ளுவர்! வாழ்க திருக்குறள் ! !

2. *வள்ளுவர் - தெய்வ ஒளி

[இராவ் சாகிப் சு. வையாபுரிப் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.]

தமிழ்நாடும் தமிழ்மொழியும் முயன்ற அருந்தவப் பயன் காரணமாக, ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர், நமது நாட்டில் திருவவதாரம் செய்தருளிய வள்ளுவரென்னும் புண்ணிய மூர்த்தியை நினைவுகூரும் பொருட்டு நாம் இன்று கூடியிருக்கின்றோம். இவரது அவதார நிகழ்ச்சியைப் போன்று அத்துணைச் சிறப்புடையதாகப் பிறிதொரு நிகழ்ச்சி தமிழ்மொழிச் சரிதத்தில் உளதென்று கருதுவார் பெரும்பாலும் இல்லை. தமிழணங்கு தலையெடுத்து அவள் புதல்வர்களாகிய நமக்கு இன்முகம் காட்டி நிற்பது இத் திருவவதாரத்தின் பயன் கொண்டேயாகும். தமிழ்நாடு புண்ணிய பூமியாகக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது இவ்வவதாரத்தின் பெருமை பற்றியேயாகும். தமிழ் மக்களாகிய நாம் கௌரவமுடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களென்று எண்ணிடப்பெற்று வருவதற்கும் இவ்வவதாரமே காரணமாகும்.

இங்ஙனமாகத் திருவவதாரம் செய்தருளிய மஹாபுருஷனை அடிக்கடி ஞாபகத்தில் வைத்துப் போற்றிப்

---

*வள்ளுவர் திருநாளன்று நெல்லை மாணவர் சங்கத்தில் செய்த பிரசங்கத்தின் குறிப்பினின்றும் எழுதியது.

பாராட்ட வேண்டுவது தமிழ்மக்களாகிய நமக்கு உரிமையும் கடமையும் ஆகின்றது. தமிழ்மொழியோடு பிறந்த நமக்கன்றிப் பிறமொழிகளைப் பயிலும் அந்நியர்க்கு இப்பேருரிமை இல்லாது போயிற்று. இவ்வுரிமையொன்றினாலேயே நாம் இறுமாந்து தலைநிமிர்ந்து நடப்பதற்குத் தகுதியுடையராயினோம். நம் தமிழ்மக்கள் மீதும் நம் தமிழ்மொழிமீதும் பிறர் அழுக்காறு கொள்ளும்படி அத்துணைப் பெருமை அளித்தது இப்பேருரிமையென்றே கருதுகின்றேன். இங்ஙனம் சிறப்பும் பெருமையும் நமக்கு அருள்செய்த புண்ணிய மூர்த்திக்கு நாம் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடு உடையராயிருக்கின்றோம். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை-செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதன்றோ தமிழ் வேத விதி?

ஆனால், நமது உரிமையைப் பாராட்டி மகிழ்தற்கும் நமது நன்றியறிதலை வெளிக்காட்டிக்கொள்ளுதற்கும் மாத்திரமன்று நாம் இன்றைக்குக் கூடியிருப்பது. பூர்வத்தில் நாமிருந்த உன்னத நிலைமையினின்றும் தவறிவிட்டோம். நமது பண்டைப் பெருமை நம்மினின்றும் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டது. நாம் அதோகதியில் வீழ்ந்து கிடக்கின்றோம். இப்போது முழுவதும் அடிமைகளாகிவிட்டோம். அறிவிலும் ஆண்மையிலும் அன்பிலும் நாம் அடிமைகளாய் உழலுகின்றோம். அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டென்பது இப்போது அறியலானோம். 'கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும் ஆற்ற' லுடையராயிருந்தோம் என்பது பண்டைப் பழங்கதையாய்ப் போயிற்று.

ஒரு காலத்தே நம் தமிழ் மக்கள் எங்கணும் சென்றுலவி வாணிகம் செய்து தமிழ் நாட்டுப் பொருள்களை உலகிற்கெல்லாம் உதவி வந்தனர். நுகர்ச்சிப் பொருள்களேயன்றி அறிவுப் பொருளும் உலகம் அனைத்திற்கும் கொடுத்துதவும் அத்துணையளவாக நம்மிடமிருந்தது. அவ்வறிவுப் பொருளை மேன் மேலும் விருத்தி செய்யாது வறிதே வாழ்ந்து எல்லாவற்றையும் இழந்தோம், 'அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்' என்ற உண்மையை மறந்துவிட்டோம். பிற நாடுகளில், அறிவு நாடோறும் பெருகி வளர, நம் நாட்டில் அறிவு வறுமை குடிகொண்டு விட்டது. மேலை நாடுகளினின்றும் அறிவுப் பொருள் பெறவேண்டி நாம் இரந்து நிற்கின்றோம். தமிழ்நாட்டில் அஞ்ஞான இருள் பரந்து நிலைத்திருக்கின்றது.

இவ்வஞ்ஞான இருளில் உழன்று தத்தளிக்கும் நமக்கும் உய்தியுண்டென்று உணர்த்தி நம்மை நன்னெறியுய்க்கும் ஒரு **தெய்வவொளி**யை நாம் அடிக்கடி நோக்கி நெறிப்படுதல் வேண்டுமன்றோ? இவ்வியல்புடைய **தெய்வவொளி** யொன்றை நோக்கி நெறிப்படுதற்கே நாம் இன்று ஒருங்கு கூடியிருக்கின்றோம். தமிழ் நாடனைத்தும் இத் **தெய்வவொளி**யை இன்று தரிசித்து உய்தி கூடும்படி இறைவன் அருள்புரிவாராக!

இத் **தெய்வப்பேரொளி** யானது தோன்றியகாலம் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் என்று கூறுவர். தமிழ் இலக்கிய சரித்திர ஆராய்ச்சியாளரில் ஒரு சிலர் இதனை ஒப்புக் கொள்

ளாமலிருத்தல் கூடும். ஆனுல், சில நூறு வருஷங்கள் முன்பின்னுகக் கூறிக்கொள்வதில் எனது நோக்கம் பழுதுபடுவதில்லை. எனது கருத்தெல்லாம், பெருமக்களது அருந் தோற்றத்தால் விசேஷித்து விளங்கும் பிரகாசமின்றித் தமிழ்ச் சரித்திர மண்டலம் வறிதேயிருந்த காலத்து, 'வள்ளுவர்' என்று நாம் கொண்டாடும் இத் தெய்வவொளி தோன்றியது என்பதே.

அங்கங்கே சிறு சிறு நக்ஷத்திரங்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாக விளங்கியிருந்தன. சங்கப் புலவர்கள் என்று நாம் கருதும் நக்கீரர், கபிலர், மாங்குடி மருதனுர் முதலானேர் ஒருங்கு கூடிச் சிற்றெளி நல்கித் திகழ்ந்து வந்தனர். சிலப்பதிகாரம் இயற்றிய சேரர்பெருமானுகிய பெரு நக்ஷத்திரம் இன்னும் விண்ணில் ஒளிரவில்லை. தண்ணிய அருளொடு மிளிரும் தேவார ஆசிரியர்களும் ஆழ்வாராதியர்களும் இன்னும் இன்னெளி நல்கவில்லை. சிந்தாமணியை உதவியருளிய திருத்தக்கதேவர் என்னும் செவ்விய நல்லொளி இன்னும் முகஞ் செய்து திகழவில்லை. திருத்தொண்டர் புராணம் என்னும் சைவ மெய்ந் நூல் அருளிய சேக்கிழார் எனப்படும் விடிவெள்ளி விண்ணில் இன்னும் அரும்பவில்லை. விண்ணையும் மண்ணையும் தன்னிடமாகக் கொண்டு தனது பேரொளிப் பெருவெள்ளத்தால் இரு பேருலகையும் ஜோதி ஸ்வரூபமாக்கிய கம்பர் என்னும் கவிகுல பாஸ்கரன் இன்னும் உதயஞ் செய்யவில்லை. பேரொளி மண்டிலங்கள் ஒன்றுமின்றிச் சிறு வெள்ளிகள் சிற்றெளி செய்து விளங்கிய தமிழ்ச் சரித்திர

மண்டலத்தே நாம் இன்று போற்றித் தொழுகின்
தெய்வவொளி யாகிய திங்கள் உதயம் ஆயிற்று.

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்' (சிலப்பதிகாரம்)

என இயற்கைத் திங்களை வணங்கும் மரபுடைய நா
அறிவுநலந் திகழ்ந்தொளிரும் வள்ளுவரென்னும் செய
கைத் திங்களையும் வணங்கி வாழ்த்துவோமாக!

இப்பூலகில் உள்ளவர்க்கு நிலவும் மகிழ்ச்சியு
ஒருங்கு தந்து விளங்கும் இயற்கைத் திங்கள் பூமி
னின்றும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்
லுள்ளது. எவ்வாறு, எப்பொழுது அது தோற்
யது? அதன் சரித்திரம் யாது? இவைபோன்ற கேள்
களுக்கெல்லாம் நமக்கு விடை கிடைப்பது அரி
திங்களின் தண்ணிய ஒளிமண்டலத்தின் அழகி
இன்புறுவதோடு நமது மனம் அமைதியுறுகின்ற
அதன் சரித்திரம்பற்றிய கேள்விகள் யாவும் நம் அக
காரத்தாலும் ஆசைப் பரபரப்பினாலும் எழுகின்ற
சில சில விடைகளை அனுமானிக்கின்றோம். சில சி
விஷயங்களை நமது மனோபாவனையால் பாவ
செய்கின்றோம் சிறு குழந்தைகள், கூனக் கிழ
அதில் வசித்து வருவதாகப் பாவிக்கின்றார்கள். வய
முதிர்ந்துவிடின் குழந்தை மதியும் நம்மைவிட்டு அற
ஒழிந்து விடுதலுண்டோ? கவிதா கற்பனை யென்ப
இக்குழந்தை மதியோடு ஏகதேசவொற்றுமை யுடை
தென்பது பெரியதோர் உண்மையேயன்றோ? ஆக
நாமும் பாற்கடலில் அம்புலி தோன்றியதாகப் பா

டிசைக்கின்றோம்; அதன் கண் முயல் இருப்பதாக வியந்து உரைக்கின்றோம்; அதனை ராகு கேதுக்கள் விழுங்கி யுமிழ்வதாகக் கதை விளம்புகின்றோம். இங்ஙனமாகப் புனைந்து உரைத்துக் கொள்வதன்றி உண்மை புணர்ந்து கொள்ளுதல் கஷ்ட சாத்திய மாகின்றது.

இதுபோலவே இன்று நாம் தொழுது வாழ்த்தும் வள்ளுவர்' என்னும் **தெய்வவொளி** வீசும் திங்களின் சரித்திரமும் நம்மால் அறிதற் கரிதாயிருக்கின்றது. எத்தனையோ கட்டுக் கதைகள் புனையப்பட்டுள்ளன! வள்ளுவர்' என்ற பெயரால் அவர் 'புலைச்சி மகன்' என்ற கதை பிறந்தது. புலைக் குலத்தானுக்கு இத் துணைப் பேரறிவும் பெருங் கல்வியும் இருத்தல் அசம்பா விதம் என்றெண்ணிப் புலைச்சிக்கும் பிராமண னொருவ னுக்கும் அவர் பிறந்துள்ளதாகக் கதை யெழுந்தது. சிலர் 'வள்ளுவர்' என்ற சொல்லுக்கு வன்மை யுடையார் என்ற பொருள்கூறி, இவ்விடர்க் கடலைக் கடக்கத் தலைப்பட்டனர்.

சீத்தலைச் சாத்தனார்க்குத் திருவள்ளுவரது திருக் குறளால் தலைக்குத்துத் தீர்ந்த கதை பன்முறையும் கேள்விப் பட்டிருக்கின்றோம். இக்கதை முழுவதும், தலைக்குத்து என்னுந் தொடருக்கு இரண்டு பொருள் இருப்பதனாலும், சீத்தலை என்பது ஓரூர் என அறியாமற் போனமையினாலும் ஏற்பட்டதாகும்.

'சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்-காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.'

இச் செய்யுளில் தலையிடி மருந்து கூறப்பட்டிருக்கின்றது. இம்மருந்தின் மோந்த மாத்திரையில் தலையிடி தீர்ந்து விடும். குற்றம் நிரம்பிய நூல்களைத் தினந்தோறும் செவிமடுத்து என்றுந் தீராத தலையிடியுடையராயிருந்த சாத்தற்கு, வள்ளுவரது முப்பாலால் அந்நோய் தீர்வெய்திற்று என்பதே இதன் கருத்து. இச் செய்யுளகத்து 'தலைக்குத்து' என்ற சொல் பயின்று வந்திருத்தலால் குற்றமுள்ள நூல்களைக் கேட்குந்தொறும், கேட்குந் தொறும் சாத்தர் எழுத்தாணியைக் கொண்டு தம் தலையிற் குத்தித் தமது விதியை நொந்துகொள்ளுவ ரென்றும், சீத்தலைச் சாத்தனுர் என்ற பெயர் வழங்குண்மையால், எழுத்தாணியாற் குத்துண்ட அவர் தலையிற் சீழ் எப்போதும் வடிந்து கொண்டிருந்த தென்றும், இச்சீழ்வடிதலும் எழுத்தாணிக்குத்தும் வள்ளுவரது முப்பால் மருந்தினுல் அறவே இல்லாது போயினவென்றும் கட்டுக் கதைகள் கிளைக்கத் தலைப்பட்டன.

இதுபோன்றதொரு தப்புணர்ச்சியின் காரணமாக வள்ளுவர்க்குக் கற்பிற் சிறந்த இல்லறத் தலைவியொருத்தியை அடையும் பாக்கியமும் கிடைத்திருக்கின்றது.

> 'அடிசிற் கினியாளே அன்புடையாளேப்
> படிசொற் பழிநாணு வாளே — அடிவருடிப்
> பின் தூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
> என் தூங்கும் என்கண் எனக்கு?'

என்ற செய்யுள் வள்ளுவர் தம் பத்தினியாரைக் குறித்துப் பாடியதாகக் கருதப்பட்டது! இதனின்று

ற்புமாட்சி தெரிக்கவல்ல அழகிய பல கதைகள் புறப் ட்டுவிட்டன! ஆனால் இச்செய்யுள் வள்ளுவர் ாக்கன்றென்பதற்கு இச் செய்யுளகத்தே பொய்யாத வார் சான்று நிலைபெற்றிருக்கின்றது. தூங்குதல் ன்ற சொல்லுக்கு, உறங்குதல் என்ற பொருள் ள்ளுவர் காலத்தில் இல்லை. சங்கநூல்களில் ஓரிடத் தனும் இப்பொருளில் இச் சொல்லைக் காணுதல் டாது. வள்ளுவர் தாமும் இச் சொல்லைப் பலமுறை ரயோகித்திருக்கின்றார்; பொருள் இதுவன்று. தூங்கா ல் தூங்கிச் சுகம்பெற்றுச் சோம்பியிருந்த பிற்காலத்தே தந்த வழக்காகும் இது. பிற்காலத்துப் பிறந்த சய்யுளை வள்ளுவர்பால் ஏற்றி அவர்க்குத் திருமணம் கழ்த்தப்பட்டிருக்கின்றது.

மேற்குறித்தன போன்ற கட்டுக்கதைகளால் ருண்மையை நாம் உணர்கிறோம். வள்ளுவரது திரு மனிக்குத் தமிழ்மக்கள் பண்டுதொட்டு இன்றுவரை டையறாத அன்பு பூண்டு வந்திருக்கின்றார்களென் துவே அது. அநேக நூற்றாண்டுகளாகத் தமிழ் க்களது உள்ளத்தை வள்ளுவர் கொள்ளை கொண்டு லவி வருகின்றார். நம்மோடொப்ப நம் மூதாதையர் நடைய சிந்தைக்கும் செவிக்கும் அவரது திருநாமம் னிதாயுள்ளது. அவரது சரிதம் எனப் பெயரிட் ழுந்தனவெல்லாம் புண்ணியம் பயப்பனவாக மவரால் கருதப்பட்டுள்ளன. கரையில்லாது பொங்கி ழுந்த அன்பின் பெருக்கத்தால் முற்கூறியனபோன்ற தைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தனவென்று ம் உணர்ந்தவளவில், நமது மனம் பக்தியாற்

கனிவெய்துகின்றதே யன்றி அவற்றின் பொய்ம்மை மெய்ம்மைகளைத் தெரிதற்கு ஒருப்படுவதில்லை.

அன்றியும், அழகுள்ள கதைகளில் யார்தாம் ஈடுபடமாட்டார்கள்! யார்தாம் மயங்கிவிடமாட்டார்கள்! குணத்தாலும் செயலாலும் பெரியராயுள்ளவர்களைப் பற்றிய அழகிய கதைகள் நம்மை வசீகரித்து விட்டன என்று நாம் ஒப்புக்கொள்ளுதலிற் குற்றம் சிறிதேனும் உண்டோ? இல்லை. எனினும். ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடலாகாது. சந்திரனது ஒளிமண்டலத்தைக் கடந்து அதன் இயற்கையைக் கண்டறிதற்குக் கண் கூசி வலியற்று நிற்பதுபோல, திருவள்ளுவரது புகழ் மண்டலத்தைக் கடந்து அவரது உண்மைச் சரித்திரத்தை யுணர்தற்கு நம் அறிவு வலியற்று நிற்கின்றது. இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் பெரிதும் ஆவசியகம்,

வள்ளுவரது சரித்திரத்தில் ஒருண்மை மாத்திரம் நம் அறிவை விட்டு எவ்வகையானும் தப்பிச்செல்ல முடியாதபடி அகப்பட்டுக்கொண்டது. அறிவில் அகப்பட்டது என்று கூடச் சொல்லுதல் தவறு. நமது பார்வையிலேயே மிக எளிதில் அது சிக்கிக்கொண்டது. அவ்வுண்மை யாது எனின், திருவள்ளுவனார் திருக்குறள் செய்தருளினார் என்பதேயாகும். இதனை அறியாதார் இல்லை.

ஆனால், இதன் பொருண்மையும் பயனும் உணர்ந்தோர் மிகச் சிலரேயாவர். ஒரு நூல் சிறப்பு வாய்ந்ததெனின், அதன் ஆசிரியனது இதயத்தினின்றும்— அறிவினின்றும் அது—பிறந்திருத்தல் வேண்டும். • ஆசிரி

யன் தன்னையே தனது நூலில் அமைத்துவிடுகின்றான். ஆசிரியனது ஜீவநாடி அவனது நூலிலேயே துடி துடித்துக் கொண்டிருப்பதாகும். ஆசிரியனுக்குரிய விசேஷ ஆத்ம குணமெல்லாம் நூலினகத்துங் காணப்படுதல் நிச்சயம். நூலிற் கூறுகின்ற வாழ்க்கை நிலையில், ஆசிரியன் தானே வாழ்கின்றான், தனது கூரிய கட்புலன் கொண்டு அந்நிலைகளை நோக்குகின்றான். தனது நுண்மாணுழைபுலங் கொண்டு விஷயங்களின் உண்மையை நுனித்து உணருகின்றான். தனது பேராற்றலால் அவ்விஷயங்களின் பொருளைக் கூர்ந்துணர்ந்து தனது அரிய புலமைத் திறத்தால் அவற்றைப் பிறரும் கூர்ந்து உணரச் செய்கின்றான். சுருங்கக்கூறின், ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே அவனியற்றிய பெருநூலெனத் தகும்.

இக்காரணம்பற்றியே, **மில்டன்** என்னும் ஆங்கில மகாகவி, 'அறிவிற் சிறந்த பெரியோனொருவன், அநித்தியமாகிய தனது பூதவுடம்பு நீங்கியபின் என்றும் அழியாத புகழுடம்போடு நித்ய வாழ்வு எய்துதற் பொருட்டு, தனது இனிய ஆருயிரை வாசனையூட்டித் தைலத்தோணியில் ளெர்த்திட்டு வைப்பது போன்றதாகும் அப்பெரியோனியற்றிய பெருநூல்' என்னுங் கருத்துப்பட வரைந்திருக்கின்றார். இதன் உண்மை அருஞ் சிறப்புவாய்ந்த பெருநூல்களோடு மாத்திரமே பொருந்துவதாகும்.

ஓர் உயரிய நூல் எல்லாவகையானும் உயர்ந்தோனொருவனது உள்ளத்தினின்றே தோன்றுதல் கூடும். நூலை நன்கு உணர்வதன் மூலமாகத்தான் ஆசிரியனை நாம் அறிதல் இயலும். தினந்தோறும் நம்முடன்

பழகி வருபவரது குணகுணங்களும், நோக்கமுறையும், பெருமையும் சிறுமையும், அவர்கள் பேசும் குரலும் நமக்குத் தெரிவதுபோலவே, சிறந்த ஓர் நூலாசிரியனது நூலை நாம் கற்கக் கற்க, அவ்வாசிரியனது குணப் பெருமை, அவன் உலகினை நோக்கும் முறை. அவனது குறை குற்றங்கள், அவன் சொல்லாடும் முறை—இவை யெல்லாம் நமக்குப் புலப்படுகின்றன.

இவ்வண்ணமாக வள்ளுவரைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்துகொள்ளுதல் ஏலும். அவரது ஜீவிய சரித்திரம் அவர் இயற்றியுள்ள ஒப்பற்ற திருக்குறள் நூலில் விரிவாய் அமைந்திருக்கின்றது. திங்கள் வேறு அதன் ஒளி மண்டலம் வேறு என்று நாம் கருதுவ தில்லை. இங்ஙனமே, வள்ளுவர் வேறு, அவரது தெய்வத் திருக்குறள் வேறு என்பது இல்லை. திருக் குறள் என்பதுதான் வள்ளுவர். ஆகவே விரிவான சரித்திரம் ஒன்று வேண்டும் என்னும் ஆவசியகமே இலதாயொழிகின்றது. வள்ளுவரது வாழ்க்கையில், பிற மக்களோடொப்ப அவர் செய்திருக்கக்கூடும் சிறு செயல்களால் நமது மனம் அலைப்புண்டு உழலாதபடி, அவரது வாழ்வின் தனிப்பெரு நோக்கமாகக் கொண் டியற்றிய நூலின்கண் மாத்திரம் நம் அறிவைச் செலுத்திப் பயன் பெறுமாறு ஆணையிடுவித்த ஊழ் விதிக்கு ஒரு முறையில் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இவ்வாறாகத் தம்மை வேறென்று கொள்ளாது தமது ஆருயிர் நிலைத்து வாழ்வதற்கென்றே அரிதின் அமைத்து வைத்த உடல் போன்று உள்ளதாகும் வள்ளுவர் என்னும் தண்மதி அருளிய அருமைத்

திருக்குறள். அழகிய இப் பெருநூலின் இயல்பினை ஒருவாறு சுட்டிக் கூறுவதோடு இப்போது அமைகின் றேன். அங்கண் விசும்பில் ஒளிரும் திங்களின் நிலவினை இன்னார் தாம் நுகர்தற்குரியார் என்பதில்லை. எளி யார்க்கும், வலியார்க்கும், செல்வர்க்கும், வறிஞர்க்கும், சந்திரன் ஒன்றுபோல ஒளி நல்குகின்றது. பகை நண்பு என்பதும் இனத்தர் அந்நியர் என்பதும் நிலவுக்கில்லை. இதுபோன்றே இன்று நாம் போற்றுதற்கமைந்த வள்ளுவர் என்னும் **தெய்வவொளி** யானது யாவர்க்கும் வேறுபாடு இன்றி ஒன்றுபோல நெறிகாட்டி உதவுந் தகைமையது.

வள்ளுவர் தாமே ஓரழகிய செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்:

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'

என்பது அச்செய்யுள். நீர்நிறைந்த ஊருணி தன்னை யடைந்தார்க்கெல்லாம் வேற்றுமையின்றி நீரையுதவி இன்பமளிக்கின்றது; இவ்வண்ணமே பேரறிவாள னது பெருஞ்செல்வமும், நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவி இன்பம் அளிக்கின்றது என்பது செய்யுளின் கருத்து. உலகத்திற் பேரறி வாளன் என்றழைப்பதற்கு வள்ளுவரைக் காட்டிலும் சிறந்த உரிமையுடையார் அரியர். இவர் தந்தருளிய திருக்குறள் நூலைக் காட்டிலும் பெரியதொரு செல்வம் உளதெனல் அரிதாம். செல்வத்துட் செல்வமாகிய இத்திருக்குறள், நீர் நிறைந்த ஊருணியை யொத்து நலம் பயக்கின்றது. அறிவுத் தாகத்தால் வருந்துவோ ரனைவரும் திருக்குறள் நூலால் அறிவுதவப்பெற்று

இன்பமெய்துதல் கூடும் இல்லற நெறியில் நிற்கும் அவர்கள், துறவிகள், அரசர்கள், குடிகள், பகைவர்கள், நண்பர்கள் இவ்வனைவர்க்கும் அறிவுப் பொருளை இப் பெருநூல் உதவுகின்றது. சுருங்க உரைக்குமிடத்துப் பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை நிலையிலுள்ளவர்க்கும் சிறந்த அறிவுரைக் களஞ்சியமாக விளங்குவது நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அருளிய தெய்விகப் பெருநூல்.

வள்ளுவரை வானில் நிலவிட்டொளிரும் தண்மதி யத்திற்கு ஒப்பாகக் கூறிவந்தேன். எல்லார்க்கும் ஒப்ப வுதவி உய்ந்நெறி காட்டுதலில் இது பொருந்தும், ஆனால் நம் முதற்பாவலர்க்கே தனித்துரிய வேறொரு பெருமையும் இருக்கின்றது: நிலவுப்பயன் கொள்ளுதல் வெளி முற்றத்தும் மேல் மாடத்துந்தான் இயலும். பலகணி யில்லாத வீட்டினுள்ளே நிலவொளி பரவுவ தில்லை. வள்ளுவரது தெய்வவொளியோ பரவிச் செல்லக் கூடாத இடமே இல்லை. விண்மதியம்போலக் காலத் தால் அதிதூரத்தில் ஒளிவிட்டுத் திகழ்ந்தபோதிலும், யாவரும் எவ்விடத்தும் கொண்டு செல்லத்தகும் கைவிளக்குப்போல அடுத்து நின்றுதவும் தன்மை, நாம் இன்று தொழுது வணங்கும் தெய்வவொளிக்கு உளதாகின்றது. இத் தெய்வவொளியால் தமிழ் மக்க ளாகிய நாம் இருள் நீங்கி உய்திபெறுவோமாக!

நின்று சுடரெரித்து நெஞ்சத் திருளகற்றி
இன்றுபோல் என்றும் இலங்கிடுக–துன்றுபுகழ்த்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்என்னும்
மெய்வைத்த வேத விளக்கு.

3. *வள்ளுவர் வான்சிறப்பு

[திரு. டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் எம், ஏ., எம். ஓ. எல்.]

இயற்கையில் கடவுள் தன்மையைக் கண்டு போற்றுவது உயர்ந்த நெறி. இயற்கையில் அமைந்துள்ள பலவற்றிலும் மழை மிகச் சிறந்தது. நீரெல்லாம் ஆவியாகி மேலே கிளம்பி முகில்களாய்த் திரண்டு இயங்குதலும், பருவம் வந்தவுடன் காற்றின் துணையால் குளிர்ந்து மழையாய்ப் பெய்தலும், மழைநீர் மண்ணில் ஊறியும் பரந்தும் பாய்தலும், ஆறுய்ப் பெருகிக் கிணறு குளமெல்லாம் நிரம்பிக் கடலில் கலத்தலும், மீண்டும் சூரிய வெப்பத்தால் ஆவியாகி முகிலாய்த் திரளுதலும் ஆகியவை இவ்வாறு திரும்பத் திரும்ப நடைபெறுதலால் உலகம் அழியாமலிருத்தலைக் காணக் காண வியப்பு மிகுகின்றது. உயிர்களும் இவ்வாறே பலவேறு உடல் தாங்கிப் பிறத்தலும் வாழ்தலும் இறத்தலும் மாறி மாறி வருகின்றன என்பதையும் இந்தக் காட்சி நினைவூட்டுகின்றது. இவ்வாறு மாறி மாறி இடைவிடாமல் ஒழுங்குபெற நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளை நினைக்க நினைக்க அறிவில் தெளிவு பிறக்கின்றது. உலக வாழ்க்கை இடையறுமல் நடக்க வேண்டிய வகையில் இயற்கையை இயக்கி வரும் ஒரு பெரிய சக்தியை நினைந்து உருகுவதற்கும் இது

---

* ஆசிரியரது திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலில் ஒரு சிறு பகுதி.

காரணமாக உள்ளது. மழைக்கு இந்தப் பெருமை மிகுதியாக இருத்தலால் திருவள்ளுவர் அந்த ஒன்றை மட்டும் இங்கே விளக்குகின்றார்.

திருவள்ளுவரின் உள்ளத்தை மழை மிகப் பெரிதும் கவர்ந்திருக்கின்றது. அவர் பலமுறை உவமையாக எடுத்தாண்டிருப்பது மழையே ஆகும். ஒப்புரவாளரின் கைம்மாறு வேண்டாத கடப்பாட்டை எண்ணும்போது "மழைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?" என்று நினைந்து வியக்கின்றார். அறநெறி தவறாமல் ஆளும் தலைவனுடைய செங்கோலை நோக்கிக் குடிமக்கள் வாழ்வார்கள் என்று செங்கோன்மை கூறும் போது உலகமெல்லாம் மழையை நோக்கி வாழும் சிறப்பை உவமையாகக் கூறுகின்றார். ஆட்சித் தலைவன் அருள் அற்றவனாக உள்ள காரணத்தால் குடிமக்கள் துன்புறுவதை எடுத்துரைக்கும்போதும், மழைத் துளி காணாமல் உலகம் வருந்தும் நிலையைக் கூறி விளக்கு கின்றார். பிறர்க்கு உதவியாக வாழும் நல்ல செல் வர்க்கு நேரும் வறுமை, மழையின் வறட்சி போன்றது என்று கூறுகின்றார். காதல்கொண்ட மகளிர்க்குப் பிரிந்து மீண்டும் வந்த காதலர் செய்யும் தலையளி யைக் காதலி நினைக்கும்போது, உயிர் வாழும் மக்க ளுக்கு மழை பயன் பெருகப் பொழிதலை நினைந்து உருகச் செய்கின்றார். நாட்டில் நல்ல ஆட்சி உள்ள போது மழை பொழிந்து உதவும் என்றும், ஆட்சி முறை தவறினால் மழை உதவாது என்றும், நம்பும் நம்பிக்கையும் திருவள்ளுவர்க்கு உண்டு. இவ்வாறு மழையின் அருளிலும் சிறப்பிலும் ஈடுபட்ட திரு வள்ளுவர், அதுவே நிலம் கடல் மக்களின் மனம் ஆகிய

எல்லாம் செழிப்பதற்கும் காரணம், கெடுவதற்கும் காரணம் என்று விளக்குகின்றார்.

மழை மாறாமல் நிற்பதனால் உலகம் இயங்கி வருகின்றது; அதனால் மழை என்பது உலகம் அழியாமல் காக்கும் அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும். மழை பெய்யாமல் நின்று பொய்த்துவிடுமானால், மிகப் பெரிய நீர் நிலையாகிய கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளுக்குள் நிலையாக இருந்து உயிர்களை வாட்டும், மழை என்னும் வருவாய் வளம் குன்றிப் போகுமானால், பசி தீர்க்கும் உணவுப் பொருளை விளைக்கும் உழவர்களும் ஏர்கொண்டு நிலத்தை உழ மாட்டார்கள். பெய்யாமல் நின்று கெடுக்க வல்லதும் மழையே; அவ்வாறு கெட்டவர்களுக்கு உதவியாய் நின்று கெடுத்ததுபோல் காப்பாற்ற வல்லதும் மழையே; எல்லாம் மழையின் உதவியைப் பொறுத்து நிற்பனவே. விசும்பில் இருந்து மழைத் துளி வீழ்ந்தால் அல்லாமல், இந்த நிலவுலகத்தில் பசிய புல்லின் தலையையும் காண்பது அரிதாக உள்ளது. மழை இல்லையானால் இவ்வாறு நிலம் பயனற்றுக் கெடுவதுபோலவே, கடலும் பயனற்றுப்போகும். கடல் நீரை ஆவியாக்கிக் குறைத்து மறுபடியும் மேகம் அதற்கே மழை நீராகத் தராவிட்டால், மிகப் பெரிய கடலும் தன் இயல்பு குன்றிவிடும்,

மழை இல்லையானால் மண்வளம் சுருங்கும்; நீர் வடிவான கடலின் வளமும் சுருங்கும்; இவை மட்டும் அல்லாமல், உலகில் வாழும் மக்களின் மனத்தின் வளமும் சுருங்கும். மழை வறண்டால், இந்த உலகத்தில்

தேவர்க்காக மக்கள் செய்யும் திருவிழாவும் நடக்காது; பூசையும் நடக்காது. மக்கள் பிறர்க்கு உதவியாகச் செய்கின்ற தானமும் இருக்காது; தமக்கு நன்மை நாடிச் செய்கின்ற தவமும் இருக்காது.

கடல் வளம் சுரக்கவில்லையே என்று கடலைப் பழிப்பதால் பயனில்லை; மழை பெய்யவில்லையே என்று தான் வருந்த வேண்டும், நிலம் பயன் தரவில்லையே என்று நிலத்தைப் பழிப்பதால் பயனில்லை; மழைபெய்து நிலத்தைப் பயனுள்ளதாகச் செய்யவில்லையே என்று தான் வருந்த வேண்டும். மக்கள் மனம் பண்பட வில்லையே என்று பழிப்பதாலும் பயனில்லை; மழை வளம் பொழிந்து வாழ்க்கையில் உள்ள வறட்சியை – வறுமையைப் – போக்கவில்லையே என்று தான் வருந்த வேண்டும்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றம் என நான்கு வகையாலும் தன் கடமையைச் செய்து, ஐந் தாவதாகத் தன்னையும் காத்துக்கொள்வது இல்வாழ் வான் கடமை; ஆனால் தன்னையும் தன் மனைவி மக்களை யும் உயிர்போகாமல் காத்துக்கொள்ளக் கால் வயிற்றுக் கஞ்சிக்கே போராடுகின்றவன் எவ்வாறு மற்றக் கடமைகளைச் செய்ய முடியும்?

கணவனுடைய பொருள் வளத்திற்குத் தக்கவாறு மனைவி வாழ்க்கையை நடத்த வேண்டும், ஆனால் பொருள் வளம் என்ற பேச்சிற்கு இடம் இல்லாத வாறு வீட்டில் வறுமை நிலைத்திருக்கும்போது மனைவி எவ்வாறு தன்னையும் காத்துத் தன் கணவனையும்

போற்ற முடியும்? வறுமையால் வாடி நைந்து சாகும் துணிவு எளிதில் அமைவதா?

தம் மக்கள் கற்றவரின் கூட்டத்தில் முந்தியிருக்குமாறு அறிவுடையவர்களாகச் செய்வது பெற்றோர் கடமை; ஆனால் மக்களின் சிறு கை அளாவுதற்கே கூழ் இல்லாமல் பட்டினியால் வாடும் குடும்பத்தில் அவர்களுடைய பசிப் பிணியைப் போக்குவதற்கே ஏங்கி நிற்கும்போது கல்வியறிவு ஊட்டுவதற்குவாய்ப்பு ஏது?

அன்புடையவர் தம் எலும்பும் பிறர்க்கு உரியன வாய்ப் பயன்படுமாறு வாழ்வார்கள்; ஆனால் உடம்பில் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு கஞ்சிக்கே நாள் தோறும் போராடிக் காலம் கழிக்கின்றவர்கள் அன்பை வளர்ப்பது எங்கே?

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து வாழ்வது விருந்தினரைப் போற்றி உதவுவதற்கே ஆகும்; ஆனால் இருக்க வீடும் இல்லாமல், போற்றப் பொருளும் இல்லாமல், கணவனும் மனைவியுமாக வாழ்வோர் செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பது எவ்வாறு?

எல்லோரிடத்திலும் இன்பம் பயக்கும் இன்சொல்லை வழங்கினால் துன்பத்திற்குக் காரணமான வறுமை இல்லாமல் வாழலாம்; ஆனால். "உனக்கு இந்த உலகத்தில் வாழ்வு இல்லை; நீ அழிய வேண்டும்" என்று சொல்லுவதுபோல் உலகமெல்லாம் ஒருவனைப் பட்டினியால் வாட்டும்போது, அந்த உலகத்தில் அவன் உள்ளம் குளிர்ந்து வாழ முடியுமோ? உள்ளத்தில் குளிர்ச்சி இல்லாதபோது வாய்ச் சொல்லில் இனிமை ஊறுமோ?

நன்மையே தருவதானாலும் நடுநிலைமை தவறிப் பெறக் கூடிய ஆக்கத்தை ஒழிய விடுவதே அறம்; ஆனால் நடுநிலைமை கெட்டுக் கையூட்டு (லஞ்சம்) ஏராளமாகப் பெற்றுச் செல்வம் குவித்து உடம்பெல்லாம் பட்டும் பொன்னுமாய் நிறைத்தபோது அவர்களை அரசாங்கம் தக்கார் என மதித்தலையும், அறிஞர்கள் அவர்களைச் செப்பம் உடையவர்கள் எனப் பாராட்டுதலையும், அவர்களுடைய மக்கள் மேன்மேலும் கல்வி முதலியவை பெற்றுச் சிறப்படைதலையும் கண்ட பிறகும்; இத்தகைய ஆக்கம் வேண்டா என்று ஒதுக்கி வாழ்தல் யாரால் இயலும்? அறமே உருவாக விளங்கும் சான்றோர் ஒரு சிலரால் தான் இயலும். அத்தகைய சான்றோர்க்கு அறத்தின் பெற்றியை எடுத்துரைக்க வேண்டியதே இல்லை. மற்றவர்கள் திருந்துவதற்கு வழி என்ன?

ஒருவன் தன் நெஞ்சில் அழுக்காறு இல்லாத தன்மையை ஒழுக்கமாகப் போற்றவேண்டும்; ஆனால் ஒழுக்க நெறியில் தவறாமல் நின்று நேர்மையான வழியில் உழைக்கும் ஒருவன் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளையும் பெறாமல் வருந்தும்போது, நேர்மை தவறி அறம் மறந்து உழைப்பே இல்லாமல் வாழ்வோர் எல்லா நலமும் பெற்றுச் சீரும் சிறப்புமாய் வாழ்வதைக் காணின், உள்ளம் புழுங்காதிருத்தல் எளிதோ? அவனை அழுக்காறு இல்லாமல் வாழச் செய்தல் எவ்வாறு?

நிலையான இன்பத்தை விரும்புகின்றவர்கள் நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்யமாட்டார்கள்; ஆனால் அந்தச் சிறிய

இன்பத்தையே எட்ட முடியாமல் வாழ்க்கையில் போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த அறவுரையைக் கூற முடியுமோ?

வறுமை காரணமாகவும் பிறர்பொருள் வெளவுதல் கூடாது; ஆனால் வறுமையில் செம்மை உடைய சான்றோர்க்குத் தவிர, அடுத்த வேளை உணவைப்பற்றி ஏங்கி நிற்பவர்களுக்கு இது பயன்படுமோ?

பிறர்பொருள் வெளவுதலால் நாளைய விளைவு பெருந் துன்பமாக இருக்கும்; ஆனால் இன்றைய வாழ்க்கைக்கே எண்ணி எண்ணி ஏங்கி மெலிவோர் நாளைய துன்பத்திற்கு அஞ்சி இன்றைய இன்பத்தைக் கைவிடும் ஆற்றலுடையவராக இருக்க முடியுமோ? பசிவந்தால் பத்தும் பறந்துபோகும் நிலையில் உள்ளவர்க்கு இந்த அறத்தை எவ்வாறு அறிவுறுத்துவது?

புறங்கூறிப் பொய்யாக உயிர் வாழ்வதைவிடச் சாதலே அறத்தின் நன்மையைத் தரும்; ஆனால் வயிற்று நிலை கடந்து அறிவு நிலைபெற முடியாமல் எண்ணிப் பார்க்கவும் வழி இல்லாமல் வாடுவோர், அறத்தை இழப்பதைவிட உயிரை இழப்பது மேல் என்பதை எவ்வாறு உணர்ந்து துணிவுகொள்ள முடியும்? வாழ்க்கையில் செல்வம் பெற்றுக் குறைவில்லாமல் வாழ்வோரும் போதும் என்று அமையாமல் மேன்மேலும் செல்வம் சேர்க்க எண்ணி அலைந்து அறநெறி தவறுவதைக் கண்ணால் காணும் எளியவர்கள் எவ்வாறு திருந்த முடியும்?

வறுமை தீர்க்க உதவும் என்று எண்ணியும் தீயவை செய்யக்கூடாது; ஆனால், மிகப் பலர் தீயவை செய்து

செய்து பொருள்திரட்டி வாழ்க்கையில் முன்னேறக் கண்டால், வறியவன் மனமும் கெடும் அன்றோ? நாளை வரும் வறுமையை நினைந்து அஞ்சாமல் இன்றுள்ள வறுமை தீர்தலைக்கண்டு மகிழவே அவன் விழைவான் அல்லனோ?

வறியவர்க்கு ஈவதே ஈகை எனத்தகும்; ஆனால் அவர்களுக்கு ஈவதால் பொருள் சுருங்கும் என்றும், ஆடம்பரச் செயல்களிலும் நன்கொடை வகைகளிலும் புகழ் தரும் முறைகளிலும் பொருளைச் செலவு செய்வது ஒரு வகையில் வாணிகம்போல் அமைந்து மேன்மேலும் பொருளைப் பெருக்க உதவும் என்றும், செல்வர் பலருடைய வாழ்க்கை எடுத்துக்காட்டும்போது பெரும்பாலோர் மனம் மாறுவது இயல்பே அன்றோ? அவர்களைத் திருத்த வழி என்ன? சேர்த்து உவக்கும் வாழ்வை இன்ப வாழ்வு என்று பலரும் கருதும்போது, சேர்த்து உவக்கும் செல்வரையே கற்றவர் கவி பாடி நிற்கும்போது, எளியவரின் மனம் ஈத்துவக்கும் இன்பத்தை உணர முடியுமோ? பொருளாதாரத் தாழ்வு இல்லாமல் வாழும் ஒருவன் பலரோடும் பகுத்துண்டு வாழத் தொடங்கி, அதனால் செல்வம் இழந்து வறுமை உற்று ஒருமுறை வீழ்ச்சி அடைந்தால், மீண்டும் தலையெடுக்க முடியாமல் அழிவதைக் கண்ணால் கண்டவர்கள், பகுத்துண்ணும் வாழ்வு பொருந்தியவனைப் பசிநோய் அணுகாது என்னும் உண்மையை நம்புவார்களோ? பொருளாதார நெருக்கடி ஒருமுறை நேர்ந்தால் இந்த உலகத்தில் தப்பிப் பிழைப்பது அருமை என்னும் நம்பிக்கை அவர்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்போது, அறத்திற்கு இடம் ஏது? ஒருவர்க்கும் உதவாமல்

உலோபியாய்ச் செல்வம் சேர்த்து இறந்த ஒருவனுடைய பிணத்தைச் சுற்றித் தேவார திருவாசக பிரபந்த நல்லிசைகள் முழங்குதலையும், பலர்க்கும் உதவி உதவி வறுமையுற்று வாடி இறந்த ஒருவன் பிணம் எடுப்பாரின்றிக் கிடத்தலையும் கண்டால், எளிய மக்கள் மேலுலகம் இல்லை என்றாலும் ஈதலே நன்று என்னும் உண்மையை உணர்வது எவ்வாறு? வறியவர்க்குக் கொடுக்காமல் பொருளைச் சேர்த்துத் தாமே உண்ணும் வாழ்க்கை, பிச்சை எடுப்பதைவிடத் தீயது என்னும் உண்மையை அவர்கள் எவ்வாறு உணர முடியும்?

பலவகையால் ஆராய்ந்தாலும் அருளே உண்மையாக வாழ்க்கைக்குத் துணையாக நிற்பது; ஆனால் பணம் ஒன்றே வாழ்க்கைத்துணை என்று நம்பி மயங்கியவரே பலராக உள்ள உலகத்தைத் திருத்த வழி என்ன? அருளில்லாதவர்கள் வாழ்க்கையில் அழிந்தவர்களே என்றும், ஈடேற முடியாது என்றும் அறநூல் கூறுகின்றது; ஆனால் வாழ்க்கையில் அருளைப்போற்றிப் பொருளைப் போற்றாமல் வாழ்கின்றவர்கள் என்றும் தலையெடுக்க முடியாமல் சிதைவதைக் கண்டு அஞ்சி, அருளைப் பிற்காலத்தில் கொள்ளலாம் என்று ஒதுக்குகின்றவர்களைத் திருத்துவது எவ்வாறு?

ஒன்னாரைத் தெறலும் உவந்தாரை ஆக்கலும் பணத்தால் ஆகும் என்றும், வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் பணமே முயன்று சேர்க்கத் தக்கது என்றும், பணம் மிக்கவர்க்கே சிறந்த மருத்துவ நிலையங்களின் உதவியும் தேர்ந்த மருத்துவர்களின் துணையும் உயர்ந்த மருந்துகளின் பயனும் கிடைப்பதால், எமனிட

மிருந்து தப்புவதும் அவர்களுக்கே கைகூடும் என்றும் மயங்கியுள்ள பலர்க்கும் தவத்தின் பெருமையை உரைத்துத் திருத்தல் எளிதோ ?

வஞ்ச மனத்தானுடைய பொய்யொழுக்கத்தை அவனுடம்பில் உள்ள ஐந்து பூதங்களும் எள்ளும்; அவனுடைய உயர்ந்த தோற்றத்தை அவன் நெஞ்சமே மதிக்காமல் குற்றஞ் சாட்டும்; ஆனால் அந்த ஐந்து பூதங்களும் நெஞ்சமும் தெளியாமல் மயங்கி நிற்கும்படி கள் முதலிய போதைப் பொருள்களாலும் சூது தீய நாடகம் முதலிய போதைக் கலைகளாலும் மயக்கி, ஒவ்வொரு நாளையும் கழித்துவிடப் பழகிவிட்டவர்களை அறம் உரைத்துத் திருத்துவது எவ்வாறு ?

களவினால் வரும் ஆக்கம் அளவு கடந்து அழியும்; பயன் விளையும் போதும் பெருந்துன்பம் தரும்; ஆனால் சிறு சிறு களவையும் வெளிப்படைக் களவையுமே உலகம் தூற்றித் தண்டிக்கின்றது என்றும், வாணிகம் முதலிய வேறு பெயர்களால் பெருங் களவு மேற்கொள்ளுதல் புகழும் பயனும் தரும் என்றும் உணர்ந்தவர்களைத் திருத்தும் அறிவுரை யாது ?

மனத்தில் துன்பமானது என்று அறிந்தவைகளை எவ்வளவு சிறிதாயினும் எப்போதும் யார்க்கும் செய்யாமலிருப்பதே அறம்; ஆனால் கட்சி முதலிய அமைப்புக்களை வளர்த்துச் செல்வாக்குப் பெறுவதற்கு வழி, மற்றவர்களுக்குத் துன்பம் செய்து ஒறுத்து அவர்களைத் தலையெடுக்கவொட்டாமல் செய்வதே என்று வரலாற்றில் சான்று கண்டு, நாட்டுப்பற்று முதலிய

நல்ல பெயர்களைச் சொல்லி மயக்கிப் பிறர்க்குத் தீமை செய்து பழகுவோரைத் திருத்தும் முறை யாது?

வறுமைக்கே அஞ்சி அஞ்சி வாழ்நாளைக் கழிப்போர் கொலைக்கு அஞ்சிக் கொல்லா அறத்தை மறவாது போற்றுவது எவ்வாறு? போர் வீரம், நாட்டுப் பற்று, கட்சிப்பற்று முதலியவற்றின் பெயரால் பெருங் கொலைகள் செய்வதைக் கடமை என்று போற்றுகின்றவர்களைத் திருத்துவது எவ்வாறு?

செல்வம் நிலைபேறு அல்லாதது. ஆகையால் செல்வம் பெற்றபோதே அறச் செயல்களைச் செய்துவிட வேண்டும் என்று அறநூல்கள் கூறும்; ஆனால் நிதி நிலையம் (பாங்கி) முதலியவை இல்லாத காலம் அது என்றும், காக்கும் முறையும் திறனும் அறிந்து நிதிநிலையம் முதலியவற்றில் வைப்பதால் முப்பது ஆண்டுகள் மட்டும் அல்லாமல் முந்நூறு ஆண்டுகளும் அழியாமல் செல்வத்தைக் காக்க முடியும் என்றும், செல்வம் அழியும் என்று பழங்காலத்து மக்கள் கவலையுற்றதுபோல் இப்போது அறிவுள்ள ஒருவன் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் துணிந்துள்ள மனங்களை அறநெறிக்கு ஈர்த்தல் எவ்வாறு?

தனக்கென்று ஒரு பொருளும் இல்லாதிருத்தலே தவத்திற்கு உரிய இயல்பு என்று அறம் கூறும்: ஆனால் துறவறமே ஆயினும் அதற்கென்று தனி நிலையமும் சூழலும் அமைத்துச் செல்வம் சேர்ப்பதே சிறப்புறுவதற்கு வழி என்று காணும் காட்சி உள்ளபோது, அவா அற்ற தன்மையே சிறந்த செல்வம் என்னும் உண்மையைப் பலரும் போற்றுமாறு செய்வது

இயலுமோ ? இவை எல்லாம் செல்வ வறுமைப் போராட்டத்தினுல் நேர்ந்துள்ள கொடிய விளைவு களாகும். இவை தீர்ந்தாலன்றி ஒழுக்கம் உயர்வது எங்கே ? அறம் செழிப்பது எங்கே ?

அறம் கூறப் புகுந்த திருவள்ளுவர். மக்களின் வாழ்க்கை யமைப்பை இவைபோல் பல வகையாக எண்ணியுள்ளார். வாழ்க்கையைக் கெடுக்க வல்ல வறுமையின் கொடுமையைப் பலமுறை எண்ணி எண் ணியே கடவுள் வாழ்த்தை அடுத்து வான்சிறப்பைக் கூறியுள்ளார். மழை இல்லையேல் நிலவளம் சுருங்கும். கடல்வளம் குன்றும், மக்களின் மன வளமும் கெடும். என்று கூறியுள்ளார். பசும்புல் தலை காணு நிலத்தை யும் நீர்மை குன்றிய கடலையும் காணும்போது மழை இல்லையே என்று வருந்துமாறு கூறியிருக்கின்ருர்; அவ்வாறே மக்களின் மன வளம் குன்றிய போதும், விழா பூசை தானம் தவம் என்பவை காணுதபோதும், மக்களைப் பழித்திடாமல், மழை இல்லையே என்று வருந்துமாறு அறிவுறுத்தியுள்ளார். இதுவே வான் சிறப்பில் அவர் வற்புறுத்தும் கருத்தாகும்.

திருவள்ளுவர் காலத்தில் மழை இல்லையானல் வாழ்வு இல்லை ; இக்காலத்தில் பணம் இல்லையானல் வாழ்வு இல்லை ; இதுவே காலத்தால் நேர்ந்துள்ள வேறுபாடு. இந்த வேறுபாடு உணர்ந்தே திருவள்ளு வரின் கருத்தை உணர முற்பட வேண்டும். பண்டைக் காலத்தில் நாணய மாற்று அருகியிருந்த நிலைமையால். ஒரு நாட்டில் மழை பெய்தபோது. நல்ல விளைவு பெருகி, உரியவர்கள் பல பொருளும் பெற்று மகிழ்ந் தார்கள். பொருள் இல்லாமல் இரப்பவர்களுக்கும்

கொடுத்து மகிழ்ந்தார்கள். அளவுக்கு மீறி உணவுப் பொருள் குவிந்தாலும், அதை நெடுங்காலம் வைத்துப் போற்ற முடியாத காரணத்தால், வைத்திழக்கும் துன்பமே கண்டார்கள். ஒருவனிடம் பதினுயிரம் கலம் நெல் இருந்து, அவன் அதைச் செல்வம் என்று எண்ணிச் சேர்த்து வைத்தால், இரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு நெல் முழுதும் கெட்டு அழிய, அதனுல் அவன் மதிப்பும் கெடும். ஆனுல் இக் காலத்திலோ அந்தப் பதினுயிரம் கலம் நெல்லையும் விற்றுப் பண மாக்கி நிதிநிலையத்தில் சேர்த்து அழியாச் செல்வ மாக்கி, அந்தச் செல்வப் பெருக்கால் ஒருவன் தன் மதிப்பை உயர்த்திக்கொள்ள முடியும். பழங்காலத் தில் இதற்கு இடம் இல்லை. இருந்த நல்வழி ஒன்றே. அதாவது பதினுயிரம் கலம் நெல்லும் இரண்டாண் டில் அழியுமே என்பதைத் தெளிந்து, அழிவதற்கு முன்னரே பசித்தவர்களை நாடி அதை அவர்களின் வயிற்றுக்கு உணவாக்கி உதவி செய்வதே அப்போது இருந்த வழி. ஒருவன் அக்காலத்தில் தன் மதிப்பை உயர்த்திக் கொள்வதற்கும் இது ஒன்றே வழியாக இருந்தது, அதனுல்தான் திருவள்ளுவர், வறியவர் களின் கடும் பசியைத் தீர்ப்பது அறம் என்றும், பொன் பெற்றவன் சேமித்துப் பயனடையும் வழி அதுவே என்றும் விளக்கியுள்ளார் ;

அற்ருர் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி.

ஆகையால், அக்காலத்தில் பொருளுடையவர்கள் இல் லாதவர்களுக்கு 'ஈத்துவக்கும் இன்பத்தையே நாடி ஞர்கள். ஒரு கோடி உடையவர். நூறுகோடி உடை

யவர் என்று மதிப்பை உயர்த்திக்கொள்ளுமாறு சேர்த்து உவக்கும் இன்பம் அவர்களுக்கு இல்லை. மழை வளம் இருந்தால் எல்லார்க்கும் உணவு உண்டு என்றும், வாழ்க்கைக்குக் குறைவு இல்லை என்றும் வறியவர்களும் நம்பி வாழ்ந்து மகிழ்ந்த காலம் அது. அதனால் மழை இல்லாத குறை ஒன்றே அக்காலத்தில் மக்கள் எல்லோரையும் தாக்கித் துன்புறுத்தி வந்தது. ஆகவே. எல்லோருடைய வாழ்க்கைப் போராட்டமும் மழையை ஒட்டிப் பொதுவாக இருந்து வந்தது. வாழ்க்கைத் தேவைகளும் மிகக் குறைவாகவே இருந்தன. உணவிற்கு அடுத்தபடி, உடை, வீடு முதலிய சில தேவைகளே இருந்தன. இக்காலத்தில் தேவைகள் பெருகிவிட்டன. ஒருவன் பெறும் வருவாயில் சிறு பங்கையே உணவுக்காகச் செலவு செய்து மற்றப் பல தேவைகளை நாடி நிற்கும் காலம் இது. நாடு முழுதும் மழை பெய்தாலும் நிலம் உடையவர்களிடமே உணவுப் பொருள் குவிகின்றது; அவர்களும் வணிகரிடத்தில் விற்றுப் பணமாக்கி வைத்துக் கொள்கின்றார்கள்; நிதி நிலையம் முதலியவற்றால் பணத்திற்கு நெடுங்காலம் நிலைபெறும் வாழ்வு வாய்த்துள்ளது. ஆகவே நாட்டில் மழைபெய்யும் காலத்திலும் ஒரு சிலரே அதன் நன்மையைப் பெற முடிகின்றது; மழை பெய்யாக் காலத்திலும் பணம் மிகுந்த சிலர் வெளிநாடுகளிலிருந்து மிகுந்த விலை கொடுத்தேனும் உணவுப் பொருள் பெற்று மழையில்லாத் துன்பம் தம்மைமட்டும் தாக்காதபடி காத்துக் கொள்ள முடிகின்றது.

பணம் இல்லாதவர்களோ மழைபெய்யும் காலத்திலும் உணவுப்பொருளை விலைகொடுத்து வாங்க

முடியாமல் வருந்துகின்றார்கள்; பெய்யாக் காலத்திலும் விலை மிக்க உணவுப்பொருளை வாங்காமல் வாடுகின்றார்கள்; அரசாங்கம் செய்யும் சிறு உதவியை எதிர்பார்த்து ஏங்குவதிலேயே நாட்களைக் கழிக்கின்றார்கள். இந்த நிலைமையை ஆராய்ந்தால், திருவள்ளுவர் காலத்தில் மழையே பொதுவாக மக்கள் வாழ்க்கையை எடுத்தும் கெடுத்தும் வந்தது என்பதும், இப்போது பணம் தனித்தனியாக மக்கள் வாழ்க்கையை எடுத்தும் கெடுத்தும் வருகின்றது என்பதும் தெளிவாகும். அக்காலத்தில் வாழ்க்கைப்போர் பொதுவாக இருந்தது. உலகத்திற்குப் பொதுவாகப் பெய்யும் மழையே காரணமாக இருந்தது. இக்காலத்து வாழ்க்கைப்போர் பெரும்பான்மையான மக்களுடையதாக இருந்தாலும் தனித்தனியாக அமைந்திருக்கின்றது: சிலரிடமே குவியும் பணம் காரணமாக இருக்கின்றது. இப்போது திருவள்ளுவர் வாழ்ந்து, வாழ்க்கையை விளக்குவாரானால், பணமே மக்களின் மனவளத்தை எடுக்கவும் கெடுக்கவும் ஆற்றல் பெற்றிருக்கின்றது என்பதையும், பணப்போராட்டத்தால் அறநெறியை மறந்தவர்களைப் பழித்துப் பயனில்லை என்பதையும் தெளிவாக்கியிருப்பார். அவர் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப, நிலம், கடல், மனம் எல்லாவற்றையும் கெடுக்கவும் எடுக்கவும் மழை ஆற்றல் பெற்றிருத்தலையும், மழை இல்லாமையால் வறுமை மிகுந்து வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்குண்டு மக்கள் வருந்தும்போது ஒழுக்கத்திற்கு இடம் இல்லை என்பதையும் விளக்கிக் கூறுகின்றார். உலக வாழ்க்கை மழைநீர் இல்லாமல் அமையாது ஆகையால் எப்படிப்

பட்டவர்களுக்கும் மழை இல்லாமல் ஒழுக்கம் அமை யாது என்கின்றார்;

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

யார்யார்க்கும் என்று கூறும்போது, வாழ்க்கைப் போராட்டம் யாரையும் விடாது என்பதை நினைவூட்டி, அதனால்தான் ஒழுக்கத்தைக் கைவிடும் நிலைமை நேர்கின் றது என்பதையும் புலப்படுத்தி, அவ்வாறு போராட்டத் திற்கு இரையாகி ஒழுக்கத்தைக் கைவிட்டவர்களைப் பழிக்காமல் இரக்கம்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் தோன்ற வைத்துள்ளார்.

4. *வள்ளுவர் மாண்பு

[திரு. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்]

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்று தற்குக் காரணமென்னை? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.

திருக்குறளை ஆராய்ந்தால் அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர், உலகையே திருக்குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார்; உலகுக்கென்றே வாழ்ந்தார். அவர் உலகமாயினார்; உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவை யூட்டும்? அஃது உலக நினைவை யூட்டுதல் இயல்பே. ஆகவே திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது, உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லை யென்க.

உலகம் எது? இவ்வினாவிற்குச் செவ்வனிறை இறுத்தல் அரிது. உலகம் இதுவே என்று அறுதி

* ஆசிரியர் அவர்கள் திருக்குறள் பாயிரத்திற்கு எழுதியுள்ள விரிவுரை 'நூலின் முகப்பிலுள்ள 'தோற்றுவாய்'. 'நூல்', என்ற தலைப்புக்களிலிருந்து தொகுத்தது.

யிட்டுக் கூறல் இயலாது. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் உண்டு, ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது ஒவ்வோர் உலகம் உண்டு என்று கூறல் மிகப் பொருத்தம்.

ஒருவர் தம் வாழ்வில் எத்துணையோ முறை பிறக்கிறார்; எத்துணையோ முறை இறக்கிறார். நொடிக்கு நொடி பிறப்பும் இறப்பும் உறுகின்றன, இந்நிகழ்ச்சியை உணர்ந்து நடப்போர் சிலரே.

ஒருவர் ஒன்றைப்பற்றி ஒருபோது ஒருவித எண்ணங்கொள்கிறார். அவரே அதைப்பற்றி வேறுபோது வேறுவித எண்ணங் கொள்வோராகிறார். இவ்வாறு எண்ணங்கள் தோன்றி நின்று மறைந்து வருகின்றன. தோற்றம் மறைவு என்றால் என்ன? பிறப்பு இறப்பு என்றால் என்ன? இரண்டும் ஒன்றே. "நாளுநாள் சாகின் றாமால் நமக்கு நாம் அழாத தென்னே" என்றார் வளையாபதியாரும்.

பருவுடல் தோன்றுவதும் மறைவதும் மட்டும் பிறப்பிறப்பாகா, எண்ணங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பிறப்பிறப்பின் பாற்பட்டனவே. இப்பிறப்பு, மெய்யுணர்வு தோன்றும்வரை நிகழ்ந்துகொண்டே போகும், முகிழ்க்கும் ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வோர் உலக மென்க. ஆதலால் உலகம் எது என்று எங்ஙனம் அறுதியிட்டுக் கூறுவது?

எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம். எண்ணத்தின்படியே எல்லாம் உருக்கொள்ளும். எண்ணம் நுண்மை; உரு பருமை.

உலகைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. அவர்தங் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப் இங்கே முக் கூறுபடுத்திக் கொள்கிறேன். ஒன்று, உலகம் பூதங் களால் ஆக்கப்பட்ட தென்பது; இன்னொன்று, உலகம் நாடுகளால் (Nations) ஆக்கப்பட்ட தென்பது; வேறொன்று. உலகம் கலைகளால் ஆக்கப்பட்டதென் பது. இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு, நாடு ஒரு வகையில் முன்னையதிலும். மற்றொருவகையில் பின்னையதிலும் ஒன்றும். நாட்டை வெறும் பௌதிக மாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.

நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலிய வற்றையுங் கொண்டது நாடு, நிலப்பரப்பு பூதகாரியம், கல்வி, நாகரிகம், வாழ்வு முதலியன கலையின் பாகு பாடுகள். இவ்விரண்டையுங்கொண்ட ஒன்றே நாடு என்பது.

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட் டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப்பெயர்கள் பெரி தும் அவ்வந்நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ் மொழியில் நூல் செய்தவர். அவர் நினைவு தோன்றும் போது தமிழ்நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ்நாடென்றது இப்போதுள்ள 'தமிழ் நாட்'டைக் குறிப்பதன்று. அது பழந்தமிழ். நாட்டைக் குறிப்பது. தமிழ் நாட்டுக்கு அடிகோலி, அதை ஆக்கிய

பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை நன்குணர்ந்தவர். உலகியலில் இருவிதச் சிறப்புக்களுண்டு. ஒன்று சிறியது; மற்றொன்று பெரியது. உலகியல், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றிற் கலந்தும் இவைகளைக் கடந்தும் விளங்குவது. சாதி மதம் மொழி நிறம் நாடு முதலியன கலந்தநிலை சிறியது; இவைகளைக் கடந்த நிலை பெரியது. சிறியநிலை பன்மை; பெரிய நிலை ஒருமை. **பன்மையில் ஒருமைகாண முயல்வது அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையர்க்குவது அறியாமை.**

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படியவில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை; ஒற்றுமையே அவர்க்குப் புலனாகியது. அவர் நடாத்திய வாழ்வு அத்தகையது.

பழந்தமிழரது பரந்த நோக்கு என்னே! என்னே! அப்பழந் தமிழர் நாடு எங்கே? தமிழ் நாடே! உலகாக விளங்கிய தமிழ் நாடே! நீ யாண்டுச் சென்றனை? மீண்டும் எழுவையோ? பழந் தமிழே! உன் நாடு சிறு மண்ணாய்க் கிடக்கிறது; பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாகிறது. அஃது உலகாக மீண்டும் விளங்குதல் வேண்டும்; திருவள்ளுவர் நாடாதல் வேண்டும்; 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்னும் உனது விழுமிய கொள்கைக்கோர் இலக்கியமாக நிற்றல் வேண்டும். 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்னும் உனது உள்ளுறையன்றோ இந்நாளில் 'சமதர்மம்' 'சமதர்மம்' (Socialism) என்று விரித்துப் பேசப்படுகிறது?

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நீ சமதர்மம் பேசினை; சமதர்மத்தில் நின்றனை; வாழ்ந்தனை. இந் நாளில் உன்னிலை இரங்கத் தக்கதாயிருக்கிறது. உனது பழமையைக் குறிக்கோளாகக் கொண்டு இக்காலத்தவர் வாழ்வு நடாத்துவாராக.

•

திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னுஞ் சீரிய கொள்கை பிறந்த பெருந் தமிழ்க்குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் நாடு மொழி முதலிய சிறுமைக் கட்டுகளில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது. அது திருக்குறள் என்னும் நூலாக உருக்கொண்டது. இத்தகை நூல் ஓர் இனத்துக் குரிய தாகுமா? உலகுக் குரியதாகுமா? இப்பெரு நூலை யருளிய ஒருவர் ஓர் இனத்துக்குரியராவரா? உலகுக் குரியராவரா? எனவே, திருவள்ளுவர் நினைவு தோன் றும்போது உலகமும் உடன் தோன்றுதல் இயல்பே. இதில் வியப்பொன்றுமில்லை,

திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்தவர். அவர்தந் தாய்மொழி தமிழ். அவர் தமிழில் நூல் செய்தனர். **நூலின்மொழி தமிழ்: பொருளோ உலகுக்குரிய ஒன்று.** இது வெள்ளிடைமலை, இவ்வாறு நூல் செய் தோர் அரியர்; செய்வோரும் அரியர். இதுபற்றியே தமிழ்நாட்டுச் சமதர்மப் புலவராய் இற்றைஞான்று நமது நடுவண் வாழ்ந்த **பாரதியார்**, 'வள்ளுவன் தன்னை **உலகினுக்கே** தந்து வான்புகழ் கொண்ட **தமிழ் நாடு**, என்று வீறுகொண்டு மகிழ்ச்சியுடன் ஓதி யருளினர்.

உலகத்துக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. *இப்போது வழங்கிவரூஉம் அவர்தம் வரலாறு பின்னே புனையப் பட்டது. பல தமிழாசிரியரது வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை. இது நாடுசெய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந்துரைகளே நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக் கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணர முயல வேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த **திருக்குறள் என்னும் தமிழ்ப் பொதுநிலையம்** எல்லார்க்குங் காட்சி வழங்குகிறது. அந் நிலையத்தைப் பார்ப்போம்; அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டாரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார். உலகீர்! அவரைக் காண எழுக; எழுக.

---

* இப்பொழுது வழங்கப்படும் திருவள்ளுவர் வரலாறு 'கபில ரகவ'லை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. இக்கபிலரகவல், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் வாழ்ந்த திருத்தணிகை வீரசைவப் புலவர் சரவணப் பெருமாள் ஐயராலும் விசாகப்பெருமாள் ஐயராலும் செப்பஞ் செய்யப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இதை முதல் முதல் எனக்குச் சொன்னவர் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். சுவாமிகள் அருளிய "செவியறிவுறூஉ" என்னும் நூலில் 67-ம்பக்கத்தில் இதைப்பற்றிய குறிப்புச் சுருங்கிய முறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரகிரியாரால் குறிக்கப்பெற்ற 'கபில காவியம்' வேறு; இங்கே குறிக்கப்பெற்ற 'கபில ரகவல்' வேறு.

ஒரு நிலையத்தில் புகுந்து, அதன்கண் வாழ்வோரைக் காணுதற்குப் பல வாயில்களைக் கடத்தல் வேண்டும். திருக்குறள் நிலையத்துக்கும் பல வாயில்களுண்டு. அவைகளே திருக்குறளிலுள்ள வைப்புகள். அவைகளைப் பார்ப்பதால், போற்றுவதால், அல்லது ஓதுவதால் மட்டும் அவைகள் திறந்து வழிகாட்டா. அவைகளைப் பயின்று பயின்று, அவைகளின் பொருளை உணர்ந்து உணர்ந்து, அவைகளின்படி வாழ்வு நடாத்தல் வேண்டும். இவ்வாழ்வினரை வரவேற்க வாயில்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. வாயில்கள் வழிகாட்டும்; திருவள்ளுவரிடஞ் சேர்க்கும்,

திருவள்ளுவரைத் தாங் காணவும், பிறர்க்குக் காட்டவும் முயன்றவர் பலர். பலருள் குறிக்கத்தக்கவர் பதின்மர். அப்பதின்மர் பெயர்களை,

> "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
> பரிமே லழகர் பரிதி—திருமலையர்
> மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
> கெல்லை யுரையெழுதி னோர்"

எனவரூஉம் வெண்பா தெரிவிக்கிறது.

பதின்மருள் முதல் முதல் உரை கண்டவர் தருமர். அவர்க்கே எல்லா வாழ்த்தும் வணக்கமும் உரியன.

இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ள உரைகள் இரண்டு; ஒன்று மணக்குடவருடையது; மற்றொன்று பரிமேலழகருடையது.

பழைய உரைகளுள் இறுதியது **பரிமேலழகருடையது**. இதுவே பெரிதும் போற்றப்படுவது. பரிமேலழகர் பெருங் கல்வியாளர்; வடமொழி தென்மொழிப்

புலவர். அவர் தம் உரையில் அவரது காலத்துக்கேற்ற பொருள்களும் எக்காலத்துக்கு முரிய பொருள்களுமாக இரண்டுஞ் செறிந்து கிடக்கின்றன.

வேறு மொழிப் புலவர், சிலரும் திருவள்ளுவரைக் காண முயன்றுள்ளனர். இன்னும் பலர் முயலுதல் வேண்டும். திருவள்ளுவர் ஒளி, உலகம் முழுவதும் காலும்நாளே நன்னாளாகும். அந்நாள், யாதும் ஊராக வும் யாவருங் கேளிராகவும் பொலியுந் திருநாளாகும்.

திருக்குறளை யான் இளமையில் ஒருவாறு பயின்றேன். பின்னே **மணக்குடவரும் பரிமேலழகரும்** உதவியுள்ள உரைகளைத் துணையாகக்கொண்டு ஆய்ந்து ஆய்ந்து பார்த்தேன். இவ்விருவருந் தமிழ்த் தாய்க்கு ஆற்றியுள்ள தொண்டை எம்மொழியால் வழுத்த வல்லேன்; மனமொழி மெய்களால் இருவரையும் போற்றுகிறேன்.

திருக்குறள் முப்பாலுடையது. முப்பால், அறம் - பொருள் - இன்பம் என்பன. வீடு எங்கே? வீட்டைத் திருவள்ளுவர் தனியே வகுத்துக் கூறாது விடுத்த தென்னை? இதற்குக் கூறப்படுங் காரணம் பலப்பல. திருவள்ளுவர் வீட்டையுங் கூறினார் என்பதை நிறுவிக் காட்டுதற்கு, 'வீட்டுப் புலவோர்' படும்பாடு என்னே! அவர், 'கடவுள் வாழ்த்து' 'துறவு' 'நிலையாமை' 'மெய்யுணர்வு' 'அவாவறுத்தல்' முதலிய அதிகாரங்களை எடுத்துக் காட்டுவார்; மூலை முடுக்குகளிலுள்ள சில குறட்பாக்களையும் சொற்றொடர்களையும் சொற்களையும் எடுத்துக் காட்டுவார். திருவள்ளுவர்மீது அவர் கொண்டுள்ள அன்பு பாராட்டற்குரியது. அவர் எடுத்

68140 O3L,1B6T,T:9 95

துக் காட்டும் அகச் சான்றுகளெல்லாம் திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதை வலி யுறுத்துவனவாகவே யிருக்கின்றன. திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதை மறுப்பார் யார்? 'திருவள்ளுவர் வீட்டுக்கெனத் தனிப்பால் வகுத் துக் கூறாமைக்குக் காரணமென்னை' என்னும் வினு விற்கு எடுத்துக் காட்டுக்களில் யாண்டாயினும் விடை யிருக்கிறதா என்பது சிந்திக்கத் தக்கது.

வீடு, வாக்கு மனங்கட்கு எட்டாதது. அத்தகைய ஒன்றை எவ்வாக்கால் விளம்புதல் கூடும்? இதுபற்றியே பரிமேலழகரும், "* * * வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையான், நூல்களாற் கூறப் படுவன ஏனை மூன்றுமேயாம்" என்று ஒருவாறு விளக்கிப் போந்தனர்.

அறவழி நின்று, பொருளாக்கி, இன்பம் நுகர்வோர் வீடு அடைதல் ஒருதலை. அறம் பொருள் இன்பவாழ்வின் பயன் வீடு. அடைவாகவும் பயனுகவுமுள்ள ஒன்றை எப்படிச் சொல்லால் அறுதியிட்டுச் சொல்வது? வீடு, அறம் பொருள் இன்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று. அது மூன்றிலும் விராவி நிற்பது. திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விராவி நிற்கிறது,

வீடு, விடு என்னும் அடியினின்றும் பிறந்தது, விடுதலை வீடு. கட்டினின்றும் விடுதலையடைவது வீடு. வீடு எங்கிருப்பது? அதற்கென ஒரு தனியிடம் உண்டோ? கட்டுடையார்க்கு அது புலனுகாமையால்,

அவர் அதற்கென ஒரு தனியிடம் வகுத்தனர் போலும்! வீட்டை மறைத்திருப்பது கட்டு. கட்டு அறுந்ததும் வீடு பொருளாகும்.

கட்டும், கட்டின் பாகுபாடுகளும் திருக்குறளில் சில இடங்களில் புகுந்திருக்கின்றன. 'இருள்சேர் இருவினை', 'அழுக்காறவா வெகுளி 'இன்னாச் சொல்', 'பிறப்பென்னும் பேதைமை', 'சார்புகெட', காமம் வெகுளி மயக்கம்', 'பற்றுவிடற்கு', எனவரூஉந்திருக் குறள் மொழிகளை நோக்குக.

கட்டறுந்தால் மனம் மாசிலதாகும். மாசற்ற இடம் வீடாய்ப் பொலியும். இந்நிலையுற்றார்க்கு எல் லாம் வீடே. 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று அப்பரும், 'அருநரகவையும் நீ' என்று நம்மாழ் வாரும், 'பரலோகராச்சியம் உம்முடைய உள்ளத்தி லிருக்கிறது' என்று கிறிஸ்து பெருமானும், அருளிய செம் மொழிகளை யுன்னுக. இம்மொழிகளை இப்பெரியார் யாண்டிருந்து அருளினர்? இவ்வுலகத்திலிருந்தே அரு ளினர். இவருக்கு இவ்வுலகம் எவ்வாறு தோன்றிற்று? வீடாகவே தோன்றிற்று. ஆதலால் வீடு என்பது ஓரிடத்தில் தனியே இருப்பதன்றென்க.

கட்டையறுத்தற்கு அறவழியில் நின்று, கல்வி பயின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பம் நுகர்தல் வேண்டும். இச்செந்நெறியே வாழ்வுக் குரியது. இதுவே இயற்கை வாழ்வு. இந்நுட்ப முணர்ந்த அறிஞர், அறம் பொருள் இன்ப வாழ் வையே உலகுக்கு அறிவுறுத்தினர். இம்மூன்றிற் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்

குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனிவிளங்கிற்று, உண்மை கண்டவர் உண்மை உரைத்தல் இயல்பு.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றில் வீடும் விரவி வருமாறு கூறுவது பழைய முறை. பழைய நூல்கள் யாவும் இம்முறை வழியே பிறந்தன. இடைக் காலத்தில் தோன்றிய நூல்களும் உரைகளும் பழங் கொள்கையைக் கலக்கிவிட்டன. இதற்குக் காரணம் காலப் போக்கென்று கூறுவது பொருத்தம். திரு வள்ளுவர் முப்பாலே வகுத்தருளினர்.

நாளடைவில் வீட்டைப் பற்றிய தனி நூல்கள் பெருகின. இவைகளுள் மிகச் சிலவே பழங் கொள் கைக்குத் துணை போவன. பல, அறம் பொருள் இன்ப வாழ்வில் பொருளற்ற நிலையாமையையும், இயற்கையை வெறுத்தல் - பெண்ணை வெறுத்தல் - என்னும் போலித்துறவையும், நுழைத்து நல்வாழ்வுக்கு இடர் செய்தன, இந்நூற் பெருக்கால். அறம் - பொருள் - இன்ப வாழ்வு அருகுவதாயிற்று. மக்கள் எண்ணம். அறம் பொருள் இன்பக் கலப்பற்ற போலி வீட்டில் - வெறும் பாழில் - படிந்தது. அதனால் மன்பதையில் தீயொழுக்கம் புகுந்தது. இந்நாளில் உலகம் எக்காட்சி வழங்குகிறது? கொலையுங் களவுங் கள்ளுங் காமமும் பொய்யுந் தாண்டவம் புரியாத இடமும் உளதோ?

தனித்த வீடென்று அறம் பொருளின்ப வாழ்வை வெறுக்க ஏவும் நூல்களை இயற்றுவது பாவம். அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடாயிருத்தலான், வீட்டைத் தனியே பிரித்துக் கூறுவது எற்றுக்கு?

இது வெறும் பாழைக் கூறுவதாக வாக்கு மனமுடைய மக்களால் கொள்ளப்படும். அறம் பொருள் இன்ப வாழ்வுக்குரிய நூல் செய்வோரே உலகுக்கு நலஞ் செய்வோராவர்.

அறம் - பொருள் - இன்பம் - அற்ற தனித்த வீட்டு நூல்களால் உலகம் உற்ற அல்லல் போதும்; போதும். அறம் பொருள் இன்ப வாழ்வு, வீட்டை உணர்த்த வல்லது. ஆதலால் இந்நாளில் அறம் பொருள் இன்ப வாழ்வு, அதாவது இயற்கை வாழ்வு பெருகுதல் வேண்டும். இதற்கு உறுகருவியாகத் துணைபுரிய வல்லது திருவள்ளுவரது முப்பால் நூல்.

திருவள்ளுவர் அருளியது முப்பால் நூல். (முப்பால், அறம் - பொருள் - இன்பம் என்பன). அறமும் பொருளும் புறத்தில் அடங்குவன ; இன்பம் அகத்தில் அடங்குவது. அகம் புறம என்னும் இரண்டும், அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக விரிந்தன.

'அகம் புறம்' தமிழ் மரபென்றும், 'அறம் பொருள் இன்பம்' வடமொழி மரபென்றும் சொல்வோரும் உளர். 'எதனினின்றும் எது பிறந்தது? எது முன்னையது ? எது பின்னையது ?'' என்று போரிடுவோரும உளர். போராட்டத்துக்கும் திருவள்ளுவர் நூலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது எனது கருத்து. திருவள்ளுவர் நூல் மரபு கடந்தது. அது மன்பதைக்குரியது. அதை 'மரபு' என்னுஞ் சிறையில் புகுத்த முயல்வது அறமாகாது.

உண்மை எவருடைமை ? அது தமிழருடையதா ? மற்றவருடையதா ? ஓர்க. தமிழறிஞரிடை 'அகம்

புறம்' என்று தோன்றிய உண்மை, மற்றவரிடை 'அறம் பொருள் இன்ப'மாகத் தோன்றியிருக்கலாம். இவரிடை 'அறம் பொருளின்ப'மாகத் தோன்றிய உண்மை. அவரிடை 'அகம் புற'மாகத் தோன்றியிருக் கலாம். ஒவ்வொரு நாட்டறிஞரிடை ஒவ்வொருவித உண்மை தோன்றும். அஃது அவ்வந் நாட்டா ருடைமை என்று நினைப்பது தவறு. அறிஞர் எந் நாட்டவராயினும் அவர் காணும் உண்மை உலகுக்கு உரியதாகும். அதை மரபின்பாற்படுத்திப் போரிடுவது அறியாமை. அறிஞர் உலகுக்கு உரியவர்; அவர் பிறந்த நாட்டுக்கு மட்டும் உரியவராகார்.

திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்தவர்; தாய் மொழியை நன்கு பயின்றவர். அவர் அந்நாளில் தமிழ் நாட்டிற் புகுந்த பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் பயின்றிருப்பர். திருவள்ளுவர் தாம் பெற்ற கலைப்புலமையளவில் நின்று திருக்குறளை யாத்தனர் என்று சொல்வதற்கில்லை. இதனை அவர்தம் நூலை ஆராய்வதால் தெளிதல் கூடும்.

திருக்குறளை ஆய்ந்து பார்த்தால், அது கலைப் புலமை கடந்த இயற்கைப் புலமையால் முகிழ்த்த தெள்ளறிவினின்றும் பிறந்ததென்பது விளங்கும். ஆராய்ச்சியாளர் சாதிவெறி மதவெறி முதலிய வெறியற்றவரா யிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர், கற்பன கற்றார்; கேட்பன கேட்டார். அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப்பெறுதற்கு இல்வாழ்க்கை யேற்று. இயற்

கையோ டியைந்த வாழ்வு நடாத்தி, அறவழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந்துய்த்து, நன் மக்களைப் பெற்று, அன்பாய், விருந்தோம்பி, எவ்வுயிர்க் குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை யெய்தி, மனமா சகன்ற அறவோராய், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் திருக்குறள் என்னுந் தனி நூலை அருளினர்.

நாடு, தனது பழங் கொள்கையினின்றும் வீழ்ந்து, சாதிவெறி, மதவெறி மொழிவெறி முதலிய சிறுமை கட்கு இரையானபோது, அவ்வவ் வெறியர் திரு வள்ளுவரைப்பற்றிப் பலப்பலவாறு கூறலாயினர். வெறி ஏறிய மதியில் உண்மை விளங்குங்கொல்? வெறியற்ற மதிகொண்டு திருக்குறள் ஆராய்க; ஆராய்ந் தால் திருக்குறள், மரபு கடந்த ஒரு நூலாகவே விளங்கும்.

5. *வள்ளுவரும் பாரதியாரும்

[திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்.
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.]

திருக்குறள் ஓதற்கு எளிது; உணர்தற்கு அரிது என்பது கற்றறிந்தோர் கொள்கை. உணர்தற்கு அரிதா யுள்ள திருக்குறளை ஒல்லும் வகையால் விளக்கி யருளினர் நல்லியற் கவிஞரும் உரையாசிரியரும். சிலப்பின் திறமுரைத்த இளங்கோ வடிகள் முதலாக வீர சுதந் திரம் வேண்டிப் பாடிய பாரதியார் ஈறாகத் தமிழகத்தில் தோன்றிய பெருங்கவிஞர் அனைவரும் திருக்குறளின் கருத்துக்களைத் தமது கவிதையில் அழைத்து அழகுக்கு அழகு செய்துள்ளனர்.

இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமை யாதது என்பது திருக்குறளின் அடிப்படையான கருத் துக்களில் ஒன்று. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்று தெள்ளத் தெளிய உணர்த்துகின்றார் திருவள்ளுவர். இதன் பொருளை விரித்துரைத்த கவிஞர் பலராவர். "இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன் றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாதவன் வாயிற் சொல்" என்று விளக்கினர் ஒரு கவிஞர். இவ்வுலகில் பொருளற்றவர் அடையும் சிறுமையை அனுபவ வாயிலாக அறிந்த பாரதியார் திருவள்ளுவரை மன மாரப் புகழ்ந்து போற்றுகின்றார்.

பொருளி லார்க்கிலை இவ்வுலக கென்ற நம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளிலார்க்கு இனமில்லை, துணையிலை
பொழுதெ லாம்இடர் வெள்ளம்வந் தெற்றுமால்
பொருளி லார்பொருள் செய்தல் முதற்கடன்

என்பது பாரதியார் பாட்டு.

பொருளில்லார்க்கு உற்றார் இல்லை; உறவினர் இல்லை. எந்நாளும் அவர்க்கு ஓயாத தொல்லை. ஆதலால் "பொருளில்லார் பொருள் செய்தல் முதற்கடன்" என்று வற்புறுத்தினர் பாரதியார். "செய்க பொருளை" என்று பணித்த திருவள்ளுவர் வாக்கைத் தழுவி எழுந்தது பாரதியார் கட்டுரை.

பொருள் செய்து வாழும் மாந்தரிடம் பண்பாடு வளர்ந்து ஓங்குதல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றார் திருவள்ளுவர். மாந்தர் மனம் செம்மையுற்றால் மாநிலம் செம்மையுறும் என்பது அவர் கொள்கை, செம்மையை அழிக்கும் திறம் வாய்ந்தது வெம்மையான சினம் என்று திருக்குறள் பாடிற்று.

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

என்றார் வள்ளுவர். சேர்ந்தாரைக் கொல்லி என்பது நெருப்பின் பெயர்களுள் ஒன்று. தான் சேர்ந்த இடத்தை அழிக்கும் தொழிலுடையதாதலால் அப் பெயர் அதற்கு அமைந்தது. சினம் என்னும் நெருப்பு உள்ளத்தில் மூளுமாயின் செம்மை என்னும் பண்பாடு

எரிந்து அழிந்துவிடும் என்பது ஆன்றோர் கருத்து. ஆதலால் "உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கு சினங் காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க" என்று பாடினார் ஒரு கவிஞர். இவ்வாறு கவிஞர் பலரும் அறிவுறுத்திய உண்மையை விஞ்ஞானப் புலவர் வாயிலாக விளக்குகின்றார் பாரதியார். பாரதநாட்டு விஞ்ஞான வித்தகருள் சாலச் சிறந்த பெருமை வாய்ந்தவர் செகதீச சந்திர போஸ் என்பவர். அவர் ஆராய்ந்து கண்ட உண்மையை ஆதாரமாகக் கொண்டு திருக்குறளின் கருத்தைத் தெளிவுறுத்துகின்றார் பாரதியார்.

"கோணுகிச் சாத்திரத்தை ஆளும் மாண்பார்
ஜகதீச சந்திர வசு கூறுகின்றான்;
'ஞானுனுபவத்தில் இது முடிவாம் கண்டீர்'
"நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்" என்றான்,
கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்.
... ...
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத் தான்
கொல்வதற்கு வழியென நான் குறித்திட்டேனே"

என்பது அவர் பாட்டு. மேலை நாட்டு முறையில் 'வசு' என்னும் விஞ்ஞானப் புலவர் கண்ட முடிபும், இந்நாட்டு மெய்ஞ்ஞான மேதையர் கொண்ட கொள்கையும் ஒத்திருத்தலை எடுத்துரைக்கின்றார் கவிஞர்.

எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருத்தமான அரசியல் உண்மைகளைத் திருவள்ளுவர் திருத்தமாகக் கூறுகின்றார். ஏழையர் வடிக்கும் கண்ணீர் செல்வச் செருக்குடைய வல்லரசையும் அழித்துவிடும் என்பது அத்தகைய உண்மைகளுள் ஒன்று.

அல்லற்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்பது வள்ளுவர் வாக்கு. கண்ணீரின் ஆற்றலைக் காவியங்களிற் காணலாம். பாண்டியன் அரசு வீற்றிருந்த மதுரைமாநகரில் கண்ணகி அல்லலுற்று அழுதாள். "காய்கதிர்ச் செல்வனே! கள்வனே என் கணவன்!" என்று கதறினுள். இவ்வாறு

அல்லலுற்று ஆற்ருது அழுவாளைக் கண்டு ஏங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும் தாமயங்கி

என்ன தீங்கு வருமோ என்று ஏங்கினுர்கள். கண்ணகியின் கண்ணீர் மன்னனை மாய்த்தது; மதுரையை எரித்தது. சீதையின் கண்ணீர் இலங்கைமாநகரில் விழுந்தது. அதனுல். வீர மன்னனுகிய இராவணன் விழுந்துபட்டான். வீரமகேந்திரத்தில் சிறையிருந்து வருந்திய சயந்தன் வடித்த கண்ணீர் சூரனை மடித்தது; அவன் வல்லரசை ஒடித்தது. செருக்குற்ற துரியோதனன் சபையில் பாஞ்சாலியின் கண்ணீர் பாய்ந்தது. ஆடவர் நிறைந்திருந்த சபையில் அம் மங்கையைக் கொணர்ந்து மானபங்கம் செய்யத் தலைப்பட்டபொழுது

பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்
பெண் பாவமன்ருே? பெரிய வசை கொள்வீரோ

கண்பார்க்க வேண்டும் என்று கையெடுத்துக் கும்பிட்டாள் அவள். இரக்கமற்ற துரியோதனன் அம் மொழிகளைச் செவியில் ஏற்ருனல்லன், பாஞ்சாலி வடித்த கண்ணீரோ அவன் குலத்தை வேரறுக்கும் படைக்கலமாயிற்று.

பாரதநாட்டு மக்கள் கடல்சூழ்ந்த அயல்நாடுகளில் கடும்பணி புரிந்து கண்ணீர் வடிக்கக்கண்ட பாரதியார் நெஞ்சம் துடித்தது. பெருங்கடலின் நடுவேயுள்ள தீவகத்தில் கல்நெஞ்சர்க்குரிய கரும்புத் தோட்டத்திலே இந்திய மாதர் படும் துயரம் அவர் உள்ளத்தை உருக்கியது.

—தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே அங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்ருர்—அந்தக்
கரும்புத் தோட்டத்திலே

அங்கே மாதர்கள் கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றனரே! மனங் கொதித்துக் கொதித்து மேனி சுருங்குகின்றனரே! மானங்குலைந்து மயங்குகின்றனரே! அன்னார் கதறி வடிக்கும் கண்ணீர் வெறு மண்ணிற்கலந்து மறைந்திடுமோ? என்று தெய்வத்தை நோக்கி முறையிடுகின்ருர் பாரதியார்.

பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயும் இரங்கும் என்பார் தெய்வமே!—நினது
எண்ணம் இரங்காதோ—அந்த
ஏழைகள் அங்குச் சொரியும் கண்ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ?

என்ற பாட்டு வள்ளுவர் வாய்மொழியைத் தழுவி எழுந்ததாகும். ஏழைகள் வருந்தி வடிக்கும் கண்ணீர் செல்வர் செருக்கறுக்கும் படை என்று வள்ளுவர் சொல்லியது பொய்யா மொழியன்ருே? கண்ணற்ற கரும்புத் தோட்டத்திலே ஏழை மாதர் சொரியும் கண்ணீர் மண்ணிற்கலந்து ஒருநாளும் மறைந்திடாது!

காற்றிற் கலந்து ஒருகாலும் கரைந்திடாது! அரும் படையாக நின்று ஆதிக்கம் செலுத்துவோரை அறுத்தே தீரும் என்பது பாரதியார் கருத்து.

வள்ளுவர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்து வாழ்தலே மாந்தர்க்கு நலந்தரும் என்பதைத் தமது அனுபவத்தால் அறுதியிட்டுக் கூறுகின்றார் பாரதியார். இன்பம் பெறுதற்குரிய வழி யாது என்னும் வினாவிற்குப் பலர் பலவாறு விடை கூறுவர். வள்ளுவர் கூறும் விடையாவது; அறத்தால் வருவதே இன்பம் என்பது.

"அறத்தால் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்ற அருமைத் திருக்குறள் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தது. தாம் மெய்யாக் கண்ட வள்ளுவர் வாக்கை எல்லோரும் அறிந்து உய்யும் வண்ணம் இனியமுறையில் எடுத்துரைக்கின்றார்.

அறம் ஒன்றே தரும் மெய்யின்பம் என்ற நல்
அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்
பிற விரும்பி உலகினில் யான் பட்ட
பிழை எத்தனை கோடி! நினைக்கவும்
திறன் அழிந்து என்மனம் உடை வெய்துமால்
தேசத்துள்ள இளைஞர் அறிமினோ!
அறம் ஒன்றே தரும் மெய்யின்பம்; ஆதலால்
அதனையே துணை என்றுகொண் டுய்திரால்

என்று வள்ளுவப் பயனை வாயார வாழ்த்துகின்றார் பாரதியார்.

6. வள்ளுவர் பொதுநெறி

[வித்துவான் திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள்
எம், ஏ., பி. ஓ. எல்., எல்., டி]

கடவுள் திருமுன் அனைவரும் ஒன்றே என்னும் பொது நோக்கம் நம் நாட்டில் பேசப்பட்டு, நகரங்களில் மட்டுமன்றி மூலை முடுக்கிலுள்ள சிற்றூர்களிலும், காட்டுத் தீயேபோல் பரவி, மக்களிடையே உணர்ச்சியையும் பரபரப்பையும் உண்டுபண்ணி வரும் இக்காலத்தில் "பொதுமறை"யாகிய திருக்குறளில், இந்நோக்கம் அமைந்திருக்கும் வகையை, நூல் முழுவதும் பொதுவாக நோக்கிக் கண்டறிவது சாலவும் பொருத்தமுடையதேயாம்.

இருவகைச் சுவைகள் ஏற்ற அளவிற் கலந்து ஒத்து இயங்குங்கால் ஒருவித புதுநலம் தோன்றிச் சுவைப்போர்க்கு மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும். அஃதேபோன்று ஒரு நாட்டில் பல மக்கட் டொகுதிகளும் இனப் பிரிவுகளும் இருப்பினும், அவற்றிடையே ஒத்த உணர்ச்சியும், பொது நோக்கமும், அன்பும் நிலவி ஒற்றுமை மிகுமாயின், அந்நாடு முன்னேற்றமடைந்து சிறப்புறும். பிறப்பினாலேயே உயர்வு தாழ்வு ஏற்படுகிறது என்றும், இனத்தால் உயர்ந்தோர் எனப்படுபவரே உயர்ந்தோர் என்றும், நினைக்கின்ற போலிக் கொள்கைகள் பொது நோக்காளிக்கில்லை. ஆதலினால் ஒப்புணர்வு மிகுந்த நாட்டில் இனத்தாலுயர்ந்தோர்,

தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் என்ற வேற்றுமைகள் இருக்க இடமிராது.

பொது நோக்கத்தை மக்களுக்குப் புகட்டவந்த உலகத்துச் சான்றோர்கள் பலரும், அவ்வுணர்ச்சி மக்களுக்குச் சொல்லளவில் மட்டுமன்றி, வாழ்க்கைச் செயல்களிலும் உண்டாகும்படியான பல வழிகளைத் தங்கள் வாழ்க்கை மூலம் காட்டிச் சென்றுள்ளார்கள். ரஸ்கின், டால்ஸ்டாய், தாயுமான முனிவர், இராமலிங்க அடிகள் போன்ற பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்போர் இதனுண்மையைக் கண்டறிவர். உலகம் போற்றும் கவியரசராம் இரவீந்தரரும், காந்தியடிகளும் இவ்வழியிலே மக்களைப் பயிலுவித்து, தம் அன்புச் சமயத்தால் உலக முழுவதையும் ஒன்றுபடுத்தி வந்தனர். பிறப்பு வேற்றுமைகளை அறவே ஒழித்து, எவ்வுயிரையும் தம்முயிர்போல் கருதி, நிலை உயர்வு, பொருளீட்டம் முதலிய அழிதன்மாலையவாம் போலிப் பொருள்களில் மனம் வையாது, பிறருக் குழைக்கும் பெருமை ஒன்றனையே ஒவ்வொருவரும் தங்கள் உலக வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாகக் கொள்ளவேண்டுமென்பதே இப்பெரியார்கள் நமக்குக் காட்டும் வழியாகும். சுருங்கக் கூறின், பிறர் குற்றமே பார்த்தல், புறங்கூறல் முதலியன இன்றி, மனத்துக்கண் மாசிலராகித் தம்மினும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தம்மாற் கூடிய வரையில் முன்னேற்ற முயற்சி செய்தலே பொது நோக்கத்தின் அடிப்படையான கொள்கையாம்.

இத்துறையில் இறங்குபவர்களுக்கு இடையூறுகள் பல நேரலாம். அவற்றையெல்லாம் பொருட்படுத்

தாது தங்கள் கொள்கையைக் கொண்டு செலுத்த வேண்டும், மேலும், வெளிக்குப் பொது நோக்காளி போல் நடித்து, பொது நோக்கத்தின் பெருமையைப் பிறர்க்குப் புலப்படும்படி மேடைகளிற் பேசித் திரிந்து, தமது வாழ்க்கையில் அதற்கேற்ப ஒன்றும் செய்யாது வாழும் போலித் தொண்டர்க்கு, ஈங்கு இடமில்லை. தாம் செய்யும் தொண்டிற்கு மாறாகப் பயன் யாதொன்றையும் எதிர்பார்ப்பாரும் இதற்கு அருக ரல்லர். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கருதிய ஆளுடைய அரசரது தூய உள்ளமே வேண்டற் பாலது. எனவே இந்நிலைக்குத் தேவையாவன பிறர்க் கென வாழும் பெற்றிமையும், 'தனக்கென வாழாத் தகைமையும், அவற்றை நடத்திக் காட்டுவதற்குரிய மனத் திட்பமும், இடுக்கண் அழியாமையுமாம் இவற்றை எல்லாம் ஊடுருவிச் செல்லும் அன்புடை மையும் வேண்டற்பாலதே "அன்பின் வழியது உயிர் நிலை" யாகலின், எல்லா வுயிர்களிடத்தும் அன்பில்லை யாயின், அவற்றிற்காகத் தாம் செய்யும் நற்செயலு மில்லையாம்.

இன்னும், பொது நோக்கமும் ஒழுக்கமுடைமையும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பைப் பெற்றிருக்கின்றன. ஒன்றையொன்று எப்பொழுதும் தழுவியே நிற்கும். சிறந்த ஒழுக்கச் சீலர்கள் சிறந்த பொது நோக்காளிக ளாகவும், சிறந்த பொது நோக்காளிகள் உயர்ந்த குணமேன்மையும் ஒழுக்கமும் உடையவர்களாகவும் இருந்திருப்பதை நாம் அறிவோம். ஒழுக்கமுடைமையே உயிரினும் பெரிதாக ஒவ்வொருவராலும் போற்றப் படுவது. தக்கார் தகவிலர் என்பது ஒருவரது பிறப்பி

ஞலன்றி, ஒழுக்கத்தினுலேயே அறியப்படுமாதலின், நாம் வாழ்க்கையில் செய்யும் செயல்களனைத்தும் நம் ஒழுக்க முடைமையின் மூலமாகவே ஆராயப்பட்டு தகுதி உடையன, தகுதி அற்றன என்று மதிக்கப் படும், ஒழுக்க மேம்பாட்டையும் குணநலத்தையும் தவிர்த்து மக்களுக்கு உயர்ந்த அணிகலன்கள் வேறில்லை. இல்லறத்தில் நின்று அன்பு ஒப்புரவுக்ளைச் செய்யும் பொது நோக்காளிக்கும், மனத்துக்கண் மாசிலராகி, அகப்பற்றுப் புறப்பற்றுகளைக் கைவிட்டு, மெய்யுணர்வு விழைந்து, எவ்வுயிரையும் இரக்கக் கண்கொண்டு பார்த்து, முதிர்ந்த அருள்நெறியில் நிற்கும் ஞானியாகிய பொது நோக்காளிக்கும் பிறருக்கும் ஒழுக்கம் இன்றி யமையாததாகும்.

பொது நோக்கத்தின் தன்மையையும், நடைமுறை யையும், பயனையும் தம் வாழ்க்கையில் உணர்ந்து நடத் திக்காட்டிய "நுண்மாண் நுழைபுலம்" உடைய ஒத்துணரும் ஞானியாகிய திருவள்ளுவரும் தம் பெரு நூலில் தலை சிறந்த பொதுமுறையை விதந்தோது கின்றனர். மேற்கூறிய பொது விதிகளின் இன்றியமை யாமையை வற்புறுத்தி, ஒழுக்கத்தின் விழுப்பத்தை எடுத்துக் காட்டி, இல்லறத்துறவுற இயல்களில் அன்பு அருள் நெறிகளை அமைத்துள்ளார், இவ் வியல்களை முறையே படிப்போர் அன்பும் அருளும் இல்லறத் துறவறங்களில் வளர்ந்துகொண்டே போய்ப் பயன் செய்வதை அறியாமற்போகார். முடிவில் சமய வாழ்க்கை களிலும் பொது நோக்கம் அமைந்துள்ள பான்மையை யும் தாமே யறிவர்.

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர், உலகத்தோர்க்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்து எண்ணப்படுகிறார். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப்போந்த ஒழுக்க முறை இன்னார் இனியார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுவதற் குரியதாய், பொதுநோக்கப் பார்வையொடு அருளிச் செய்யப்பட்டுள்ளது. ஒழுக்கமுடையோர் விழுப்ப மடைவர் என்பதைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டி, "கூடா வொழுக்க"த்திற் கண்டிக்கப்பட்ட போலித் துற வொழுக்கம் உலகத்தாரை ஏமாற்றுவதற்கே உரியது என்பதனையும் உலகத்துக்குப் போதித்து, "மனத்துக் கண் மாசில" ராகிக், "குணமென்னும் குன்று ஏறி நின்ற" திருவள்ளுவர், அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுவதற்குரிய ஒழுக்கமுறை வகுத்தது ஒரு வியப்பன்று. தம் வாழ்க்கையிற் கண்டதையே "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்று சுரந் தெழும் அருள் மிகுதியினால், திருவள்ளுவர், அனைவரும் உய்யுமாறு, ஒப்பற்ற ஒழுக்க முறையாகத் திருக்குறள் மூலமாக நமக்கு அருளிச் செய்தார் என்பதிற்படும் இழுக்கொன்றுமில்லை. சிறந்த ஒழுக்கமுறை வகுத்த இக்காரணத்தால் இவரைத் தமிழ் நாட்டுச் சாக்ரடிஸ் என்று கொள்வாருமுண்டு.

தெய்வப் புலவர் அருளிய பொதுமறை, உலகத் தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றிலும் தலை சிறந்து விளங்குகிறது. உயரிய கொள்கைகளையும், இவர் தாம் கையாளுவதென்ற வரையறையின்றி உலகத்து மக்கள் எல்லோருமே ஒருங்கே ஏற்றுக்கொண்டு

ஒழுகும் முறையையும், கொண்டுள்ள ஒரு நூல் எம் மொழியில் எழுதப்படினும் அது அனைவராலும் போற்றிப் படிக்கப்பட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படுகிறது. இனம், சமயம், காலம், நாடு என்னும் பிரிவுகளைப் பொருட்படுத்தாது, சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக் கூறிச் செல்வதே இதற்குரிய காரணமாகும். இக் காரணம் பற்றியே திருக்குறள் உலகோர் அனைவராலும் போற்றப்படுகிறது.

பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் அமைந்த நம்மாசிரியர், கைம்மாறு கருதாது தமக்கெனவும் வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த திருவள்ளுவர், தம் வாழ்க்கை அடைவுகளையும், நினைத்த எண்ணங்களையும், கருத்துக்களையும், பேசிய ஞான உரையாடல்களையும், அறிவுரைகளையுமே பிறரும் அறிந்துகொள்வான் வேண்டித் திருக்குறளில் பெய்து வைத்துள்ளாராதலின் இந்நூல் முழுவதும் பொது மணம் வீசிக் கொண்டிருக்கிறது. நூல்தொடக்கத்திலிருந்து முடிவு வரையிலும் இம்மணமே உள்ளது. **இல்லறம் நடத்தும் முறையும், தூய துறவறமாகிய சமய நெறியும், மக்களின் ஒழுக்க முறையும், இல்லறத்துக்கு முன்பு தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகிய களவுமுறையும், அரசனும், அவனது அமைச்சர்களும் பிற உறுப்புக்களும் மேற்கொள்ளவேண்டிய அரசியல் முறைகளும், இன்னோரன்ன பிறவும்,** சுருங்கக் கூறின், மக்கள் வாழ்க்கையின் ஒப்பற்ற முழுக் குறிக்கோளுமே ஆசிரியரால் பொதுநோக்கங்கொண்டே புகலப்படுகின்றன.

தமது கால நிலையை ஒட்டியே, தாம் கூறவந்த செய்தியைத், திருவள்ளுவர் தமிழ்நாட்டார் மட்டு மன்றி உலகோ ரனைவரும் ஒப்புக்கொள்ளுமாறு, பொது நெறி ததும்பி ஊற்றெடுத்தோடி அனைவரும் அள்ளிப் பருகி உய்யப், பொதுமறை எழுதியுள்ளார். அவர் வகுத்த ஒழுக்கமுறை தமிழ்நாட்டோடு மட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக்கொள்ளாமல் உலகு முழு வதும் ஒரு தனிச் செங்கோல் ஓச்சி வருவது நம்மொழிக் குள்ள ஒரு பெருஞ் சிறப்பாகும். தமிழ் உலகில் தோன்றிய எத்தனையோ நூல்கள் அழிந்தும் உருத் தெரியாமல் மாறுபட்டும் போக, தன்னகத்தே கொண் டுள்ள பொதுநோக்கப் பெருமையால், திருக்குறள் மட்டும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக, நாள்தோறும் பெருமை குறையாது, வளர்பிறையே போன்று, மேன் மேலும் வளர்ந்து கொண்டே வந்து உலகத்தினர் அனைவர்க்கும் பயனைச் செய்துவருகிறது. லத்தீன் போன்ற பண்டைக் கால ஐரோப்பிய உயர் தனிச் செம்மொழிகளிலும், ஜர்மன், பிரஞ்சு போன்ற தற்கால ஐரோப்பிய மொழிகளிற் சிறந்தவற்றிலும், சிறப்பாக ஆங்கில மொழியிலும், தென்னாட்டு மொழி களிலும், இந்தியிலும் இந்நூல் பெயர்த் தெழுதப் படுமாயின் இதன் பெருமையை யாரே கணித்தறிய வல்லார்? வடமொழியிலும் இதன் மொழிபெயர்ப் பிருப்பதாகக் கூறுகிறார்கள்.

"எல்லாப் பொருளும் இதன்பா லுள; இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்"

என்னும் திருவள்ளுவமாலையடிகள் இதன் பெருமை யைத் தொகுத்துக் கூறுவன.

இச் சீரிய நூல் எவ்வினத்தாருக்கும். எந் நாட்டினருக்கும், எச்சமயத்தாருக்கும், எக்காலத்தாருக்கும், பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாக இருக்கிறது. சில நூல்கள் தாம் எழுந்த காலத்து வாழும் மக்களின் கருத்தைக் கவரும் பொருள்பற்றிக் கூறிச் செல்கின்றன. அந்தத் தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே, படிப்பாரின்றி அவைகளும் மறைகின்றன. பிற்காலத்துத் தோன்றுவோரின் கருத்துக்களும் குறிக்கோள்களும் மாறி விடுகின்றன. ஆனால் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிவிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும். பிறவிப் பேறுகளாகிய அறம்பொருளின்பங்களையும், அவற்றின் மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து திருவள்ளுவர் செய்த நூல், "எக்காலத்திலும் மாறாப் பயன் தரும் மாண்புடை நூலாக விளங்குகிறது." இதைக் "காலங் கடந்த நூல்" என்றே கூறவேண்டும்.

இதைப்போன்றே திருக்குறள் எல்லா இனங்களுக்கும் பொதுநூலாயும் விளங்குகிறது. நான்கு வருணங்கள், என்ற இனப்பிரிவைப் பரிமேலழகர் தம் உரையிற் புகுத்திப் பலவிடங்களில் வலிந்து பொருள் கொள்ளினும், நான்கு வருணங்களைப்பற்றியாவது அவை தமிழ் நாட்டில் ஏற்றுக்கொள்ளத்தக்கவையென்றாவது, தம் நூலில் ஆசிரியர் யாண்டும் கூறினாரில்லை. "சமன் செய்து சீர்தூக்கும் கோல்" போலவே நீதிகளை வகுத்து அனைவரையும் ஒத்த கண்கொண்டு பார்க்கின்றார். உரையாசிரியராம் பரிமேலழகரும், "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து, எல்லோர்க்கும்

பொதுப்படக் கூறுதல் இவருக்கு இயல்பு" என்கின்றார். இந்நூலுக்கு எல்லோரும் உரியர்.

இனி, இதன் சமயப் பொதுத் தன்மைக்கு ஒன்றிரண்டு புறச் சான்றுகள் தருதும். அக்காலத்துத் தமிழ்நாட்டுச் சமயங்கள் பலவும் திருவள்ளுவரைத் தம் சமயத்தவர் என்று உரிமை கொண்டாடின. திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும் இடங்கொடுத்தது, அனைவருக்கும் இது உரியது என்பதைக் காட்டுகின்றதன்றோ!

கல்லாடமுடையார்,

> "சமயக் கணக்கர்தம் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருளிது வென்ற
> வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்"

என்றும்,

கல்லாடர் திருவள்ளுவ மாலையில்,

> "ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
> அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
> எப்பா வலரு மியைபவே வள்ளுவனார்
> முப்பால் மொழிந்த மொழி"

என்றும், இதன் பொதுநோக்கை எடுத்துக் காட்டுகின்றனர்.

கிறித்தவரும் வரவர இதன் பெருமையை அறியத் தொடங்கினர். தமிழ்க் கடலின் எல்லை கண்டவரும், திருக்குறளை ஆங்கில யாப்பில் மொழி பெயர்த்தவருமாகிய டாக்டர் ஜி. யு. போப் பாதிரியார் "எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த நல்லுரையின் எதிரொலியாகும் இத் திருக்குறள்" என்பர். இதில் எவ்வளவு

உண்மை உளது என்ற ஆராய்ச்சிக்குட் புகாமல், இதனின்றும் அறிவதுதானென்ன என்று பார்ப்பின், திருக்குறளின் பொதுநோக்கம் நமக்குப் புலப்படும். "இவ்வாறு பல்வகைச் சமயத்தினரும் திருக்குறளைத் தம் நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையால், அவ் விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளை எல்லாம் தன்னகத்தே அடக்கித் தனக்கு உறுப்புக்களாய் அமைத்துக்கொண்டு, அவை யனைத்திற்கும் தலைமையாய் நிறகும் தகுதிவாய்ந்த ஒரு தனி நூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது."

திருவள்ளுவர் காலத்துக்கு முன்னும், அக்காலத்தும், ஒப்புணர்வு தமிழ்நாட்டில் மலிந்து, மக்களை உயர் நிலையில் வைத்திருந்தது. திருவள்ளுவருக்குப் பிறகும் நாளது வரையில் நம் நாட்டில் பல சமயங்களுக்கிடையே சமய குரவர்களும் பிறரும் தத்தம் சமய நெறியில் நின்றுகொண்டே, ஒப்புணர்வைப் புகட்டியுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் திருவள்ளுவர் வழி காட்டியாய் இருந்து வருகிறார்.

திருவள்ளுவர் கருத்தூக்களையும் தொடர்மொழிகளையும், "முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்பதற்கிணங்க, பொன்னேபோற் போற்றித் தம் நூல்களில் தழுவிக் கொள்ளாத புலவர்களும் உண்டோ நம் நாட்டில்? சைவ வைணவ சமய குரவர்களும், சித்தாந்த ஆசிரியர்களும் பிறரும் குறள்கள் பலவற்றைத் தம் நூல்களில் அமைத்திருப்பதற்குக் கணக்கற்ற காட்டுக்கள் நாம் கூறலாம். 'அவருடைய விழுமிய பொது

நெறிக் கொள்கைகளைப் பின் வந்தோர் தழுவிக்கொண்டு மக்களுக்கு அறிவுறுத்தினர் என்றும், பின் வந்தோர் கூறும் கொள்கைகளை எல்லாம் வருமுன் காணும் வல்லமையால் திருவள்ளுவர் கண்டுவைத்தார் என்றும், நாம் ஐயமறக் கொள்ளலாம். இதற்குச் சான்றாக ஆழ்வார்கள், சைவ சமய குரவர்களுடைய பாடல்களையும் அவர்களின் பிற்கால முனிவர்களான தாயுமானவர் இராமலிங்க அடிகளின் பாடல்களையும் நாம் காட்டலாம்.

' பொது நோக்கமெனும் செல்வம் நிறைந்துள்ள களஞ்சியமாகிய அத் திருக்குறள் என்னும் தெய்வப் பனுவலைப் படிப்போரும், படிக்கக் கேட்போரும், மன மாற்றம் அடைந்து, தனக்கெனவே வாழும் தன்மையினின்றும் நீங்கி, பிறர்க்கென வாழும் பெற்றியுற்று, உயர்ந்த பொது நோக்காளி யாவரேல் நம் நாடு எவ்வளவு மேன்மையுறும்? ஆனால் இதைப் படிப்போர் எத்துணைபேர் உளர்? திருக்குறள் என்றால் என்ன?, திருவள்ளுவர் யார்? என்று உணராத தமிழ் மக்கள் பல்லாயிரவர் நம் நாட்டில் இன்றும் உளர் என்பது யாருமறிந்த தொன்றாம். நமது மொழியில் சிறந்த பெறலரும் மணிகள்போன்ற நூல்களிருப்பதையும அறியாராய், தாழ்ந்த, பிழை மலிந்த, பொய்க் கதைகளையும் சிற்றின்ப நூல்களையும், புனைந்தெழுதப்பட்ட பலப்பல புன்னூல்களையும் படித்துப் படித்துப் போலி மகிழ்வெய்திப் பொதுமக்கள் காலத்தை வீணாக்குகின்றனரே! இங்ஙனம் அறியாமை யிருளில் தடுமாறியும், அழுக்குச் சேற்றில் புதைந்தும் கிடந்துழலும் நம் நாட்டு மக்களிடைக் கல்வியைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்

திற்குரிய நூல்களிற் சிறப்பாகத் திருக்குறளின் அறவுரையை எடுத்துக் கூறச் சில பல அன்பர்கள் முன் வருவரேல், அவர்கள் செயல் பேருதவி யாகுமன்றோ? நம்மனோர் நாள்தோறும் ஒரு குறளாவது கற்றுணர்ந்து அதன்படி ஒழுகினால் அது வாழ்க்கையில் மிகவும் பயன் படுமல்லவா?

இங்கு, ஒரு தமிழறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய சில வரிகளின் கருத்தை உன்னிப்பாருங்கள். அவற்றின்படி நடப்பது நாம் மேல் நிலை எய்துவதற்கு எவ்வளவு சிறந்த வழியாகும்!

"காலையில் ஒரு குறளைப் படித்தல், பகலில் பல வேலைகளுக்கிடையிடையே அதனைச் சிந்தித்தல், இரவின் அமைதியிலே அதனை உயிரோடு ஒன்ற வைத்துக் கொள்ளல் எவ்வுளவு பெரிய நன்மையாகும்! படித்தவனாய் விடவேண்டும், படித்தவன் என்று பிறர் கருத வேண்டும் என்பதற்காக, இக்காலத்திய விரைவான போக்கிலே பல முழு நூல்களை ஓட்டமாகப் படிப்பதனால் பெறக்கூடிய நன்மையைக் காட்டிலும் உண்மையிலேயே மிகப் பெரிய நன்மையாகும் அது."

திருக்குறள் அறிவைப் பொது மக்களிடைப் பரப்புவது சிறப்பாக இக்காலத்து நம் நாட்டுக்கு வேண்டப்படுவதொன்றாம். இத்தொண்டு இப்போது நாட்டுக்கு நல்ல பயனைச் செய்யும். தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தீண்டாதோர் என்றெல்லாம் சமயத்தின் பெயரால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவர்களும் முன்னேறி மேனிலை யெய்த வேண்டுமென்று மேடைகளிற் பேசும் இக்காலத்தில், வேறுபாடின்றிக் கலந்து

வாழ்ந்து காட்டவேண்டும் என்ற இந்நாளில், திருக்குறளின் பொதுநெறிக் கருத்துக்கள் அதற்குச் சாலவும் உதவுமென்று கூறவும் வேண்டுமோ?

திருக்குறளை அனைவரும் படித்துப் பயனெய்தியும், படிக்காதோரும், படிக்கத் தெரியாதோரும் பிறரும், அதைப் படித்தோர் கூறிப் புகட்ட அறிந்து அதன்படி நடந்து பயனெய்தியும், நம் நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் இதன் சிறப்பு சென்றடையுமாறு பிற மொழிகளிலும் இதன் கருத்தையும் கொள்கைகளையும் எடுத்தெழுதியும், இதைப்பற்றிப் பலபட ஆராய்ந்து ஆராய்ந்து, புதுக் கருத்துக்களைக் கண்டு பிடித்தும், இதன் மணம் உலகெங்கும் பரவும்படி செய்தல் நம்மனோர் கடமையாகும். இதன் பயனாகச் பொதுநெறி உலகெங்கும் தழைத்தோங்கி அதன் தண்ணிழற்கீழ் மக்கள்சென் றின்புறுவதே திருவள்ளுவருக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும். ஆனால், "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு, மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்று அறிவுறுத்தும் ஆசிரியர், கைம்மாறு கருதியோ திருக்குறளை உலகுக்கு வழங்கினர்?

7. வள்ளுவரின் பொன்னுரைகள்

[டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் எம். ஏ.]

அணியும் நலனும்

திருவள்ளுவரால் சிறப்பாகக் கருதப்பட்ட அணியும் நலனும் எவை எனக் காண்போம். அணி என்ற உடனே பொன்னாலும் மணியாலுஞ் செய்யப்பட்ட பலவகைக் கலன்களையே நினைத்தல் இயல்பு. வள்ளுவனார் கருத்துப்படி நோக்குவோமாயின் அக்கலன்களை யன்றி வேறுபல கலன்கள் சிறந்தனவுள என்பது புலப்படும். என்னை?

''பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற''

என்னுங் குறளில் குறிக்கப்படும் நலன்கள் பணிவுடைமையும் இன்சொல்லுடைமையுமாம். பணியத்தக்காரைக் கண்டுழிப் பணிதல் என்பது மாந்தர்க்கு ஏற்ற அணியாகும்; பணியாது செருக்கித் தருக்கித் திரிவோர் எத்துணைக் கலன்களைப் பூண்டிருப்பாராயினும் அணியுடையராகமாட்டார். பணியத் தக்கார் இன்னார் என்பது மாந்தர் தம்முள் ஆராய்ந்து முடிவு செய்து கொள்ள வேண்டியதொன்று. தாய், தந்தை, அரசன், ஆசிரியன், குரு எனப்படுவார் வணங்கற்குரியர் எனக் கூறப்படுதலும் உண்டு. ஆனால், இன்சொல், கூறத் தக்காரையே கண்டு கூறவேண்டும் என்பது நியதி

யன்று. இன்சொல் யாவர்மாட்டும் வழங்கற்குரியது. எனவே, பணியத் தக்கார்மாட்டுப் பணிவுடையரா யிருத்தலும், யாவர்மாட்டுங் கூறுமட இன்சொல்லுடைய ராயிருத்தலும் மாந்தர்க்குச் சிறந்த அணிகள் என்ற வள்ளுவர் கருத்தைக் காண்க.

இனி, கண்ணிலா மாந்தர் நலனிலராயின். கண்ணோட்டமில்லாத கண்கள் அணிகல மற்றவையாகும். இவ்வழியே நோக்கின், கண்ணோட்டமில்லாத மாந்தர் எத்துணைப் பூணாரம் பூட்டினும் அணியுடையராக மாட்டார் என்பது பெறப்படும். அதுபற்றியே, வள்ளுவனார் "கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்" எனக் கூறிப் போந்தார். தம்மொடு பழகினவர் கண்முன் நின்று, கூறும் மொழிகளை மறுக்க மாட்டாமையே கண்ணோட்டம் எனப்படும். அக்கண்ணோட்டம் என்பது ஒன்று இருப்பதால்தான் உலகம் நடைபெறுகின்றது. ஆயினும், அது அளவோடு இசைந்ததாக இருக்க வேண்டும், கருமங் கெட்டுப் போகாதவாறு அளவோடு செலுத்தப்படுங் கண்ணோட்டமே மாந்தர்க்குரிய சிறந்த அணிகளுள் ஒன்றாகத் திருவள்ளுவரால் கருதப் பட்டது.

கண்ணோட்ட மில்லாதவர் அணியுடையராகார் என்பது போலவே, நாணுடைய ரல்லாரும் அணி யுடைய ரல்லர் என்க. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐம்பெருஞ் சால்புக் குணங்களை உடையவர் எவரோ, அவரே சான்றோர் எனப்படுவர். அச்சான்றோர்க்குச் சிறப்பாக அணி செய்வன கண்ணோட்டமும் நாணுடைமையும் எனப் படும். "அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு"

என்ற குறட்பகுதியை நோக்குக. இழிந்த கருமங் காரணமாகப், பழி பாவங் காரணமாகப் பிறக்கும் நாணே சான்றோர்க்கு அழகு செய்தலின், அதனையும் அணி என்றார் திருவள்ளுவர். உயிர் உடம்போடு கூடியல்லாமல் பயனடைய மாட்டாதவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லாமற் பயனடையாது என்பவாகலின், நாணுடைமையின் சிறப்புப் பெறப்படும். அந்நாணுடைமையே மாந்தர்க்குச் சிறந்த அணிகலனாக வள்ளுவப் பெருந்தகையாரால் கருதப்பட்டது. 'டை' 'காலர்' முதலானவற்றால் தம்மை அழகு படுத்திக் கொள்வாரிடம் நாணுடைமை யின்றேல், அவையெல்லாம் பிணிகளாமே யன்றி அணிகளாகா என்பது இதனால் அறியப்படும், இதுபற்றியே,

> "குணநலஞ் சான்றோர் நலனே; பிறநலம்
> எந்நலத் துள்ள தூஉ மன்று"

என்றார் வள்ளுவனார். நல்லனவாய குணங்களின் அழகே சான்றோரது அழகு; அஃதில் வழி, அவர்தம் உடலழகும் உடையழகும் அழகெனற் பாலனவல்ல என்க. நல்ல குணங்களெனற்பால எவையெவை உளவோ அவையவை யெல்லாம் சான்றோரிடத்து ஒருதலையாக இருக்க வேண்டுமென்பது "கடனென்ப நல்லவையெல்லாம்" என்னுங் குறட்பகுதியான் அறியப்படும். அக்குணங்களெல்லாம் பொருந்தியிருந்தால்தான் சான்றோர் அழகுடையவர் எனப்படுவர். மாந்தரெல்லாருஞ்சான்றோர் ஆதற்கு உரியராகலானும், சான்றோராக முயறல் அவர்தம் கடமை யாகலானும், எல்லா மாந்தரும் குண நலன்களை நலன்களாகப் பெறமுயலுதல் வேண்டும். குண நலம் இல்லாதவிடத்து எழினலம்

சிறக்காது என்க. 'உருவின் மிக்கதோர் உடம்பு பெறுதலுமரிதே'' என்பது உண்மையே யாயினும், அதனினும் அரிது குணநலன் எல்லாம் வாய்த்தல். அரியவற்றுள் அரிதாயிருக்கும் ஒன்றே மிகச் சிறந்த அணியெனப் படுமாகலின், குணநலம் மாந்தர்க்கு மிகச் சிறந்த அணியாதல் பெறப்படும்.

இக்கருத்தினை உட்கொண்டே பிறிதோரிடத்தும் வள்ளுவர்,

''நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று''

எனக் கூறியுள்ளார். பொருள்களை விரைவிற்கண்டு அவற்றை மறவாதிருக்கக் கூடிய நுண்ணிய நூலறிவு இல்லாத மாந்தர் எவ்வளவு வனப்பும் எழிலும் உடையவரே யாயினும், உண்மையில் நலனுடையராகார் என்பது ஈண்டுச் சொல்லப்பட்டமை யுணர்க. மாட்சிமைப்பட்ட மண்ணாற் செய்யப்பட்ட பதுமையினது எழில் வனப்பு உண்மையின்பத்தை அளிக்கமாட்டாத வாறுபோல, உறுப்பு நலனே பெற்று நுழைபுலம் அற்றிருக்கின்றாருடைய நலன் மெய்யாகவே இன்பமளிக்க மாட்டாது என்று வள்ளுவனார் வைத்துரைத்தது காண்க.

எனவே, பணிவுடைமை, இன்சொலுடைமை, கண்ணோட்டமுடைமை, நாணுடைமை, குணநலமுடைமை, நுண்மா ணுழைபுலமுடைமை ஆகிய இவையும் இவை போல்வனவுமே அணிநலன் எனத் தக்கன என்பதும், பொன்னாலும் மணியாலும் ஆய அணிகள் அணிகளாகா என்பதும், உறுப்பு நலன் நலன்

எனத்தக்கது அன்று என்பதும், வள்ளுவர் வாய்மொழி கொண்டு அறியப்படும்.

வாழ்வாங்கு வாழ்தல்

உண்டுடுத்து உறங்குவதோடு வாழ்க்கை முற்றுவ தில்லையென்றும், இச்சை செயலறிவால் வாழ்க்கை உறுதி செய்யப்படும் என்றும் உலகிற் பல பெரியார் கூறிப்போயுள்ளனர். காட்டாக, பெயிலி (Bailey) என்னும் ஒரு புலவர் உரைத்திருப்பதைக் கீழே தருவாம். அவ்வுறுதி மொழி; "செயலால் வாழ்கிறோம், ஆண்டி ஞால் அன்று; உள்ளத்தால் வாழ்கிறோம், உயிர்ப்பினுல் அன்று; உணர்ச்சியால் வாழ்கிறோம், நாழிகையில் அன்று" என்பதாகும். இதனுல் எவன் அரும்பெருந் தகைமையை உணர்கிருனே, எவன் உள்ளத்தால் உயர் பொருளை உள்ளுகின்றுனே, எவன் சிறந்தவை செய்கின் றுனே அவனே வாழ்கிறுன் எனற்கு உரியான் என்பது தேற்றம். இவ்வுண்மையினை நம் தமிழகத்துக் கவிஞர் திருவள்ளுவர் தமது நூலில் அழகுடன் திகழுமாறு அமைத்துத் தந்துள்ளார். உணர்ச்சி, சிந்தை, செயல் ஆகியவற்றுல் வாழ்க்கை நோக்கப்படும் என்னும் அவரது கருத்து பல, இயல்களிற் பரந்து வருவதைக் காணலாம்.

அன்பென்னும் யாக்கை யகத்துறுப் பில்லாத வர்க்குப் புறத்துறுப்பாகிய மெய் வாய் கண் மூக்கு செவியும், பொன் வெள்ளி முதலியவையும், யாது பயனைத் தரும் என வினவுகின்றுர் வள்ளுவனுர். தாய் தந்தை, மனைவி மக்கள் முதலாய தொடர்புடையார் மாட்டு நிகழுங் காதலின்றேல், நட்பேது, நாட்டுப்

பற்றேது, மொழிப்பற்றேது? மன்பதைக்குத் தர வேண்டிய அருளாகிய பொருள்தான் ஏது? உயிர்க்கு உறுதிதான் ஏது? அன்பு என்னும் நெகிழ்ச்சி உண்டாயின், ஒருவர் வாழ்கிறார்; அஃது இன்றேல் வாழ்கின்றார் அல்லர் என்பதே வள்ளுவனார் கருத்தென்பதை,

"புறத்துறுப்பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
யகத்துறுப்பு அன்பி லவர்க்கு"

என்ற அவர் தம் உரை துணையாக அறிக. அன்பென்னும் உணர்ச்சியோடு கண்ணோட்டமென்பதும் ஒருவர் பால் இருத்தல்வேண்டும். பழகினவர்கள் குற்றஞ் செய்த வழியும், துன்புற்றவிடத்தும் இயல்பாக அவர்கள்பால் கண்ணோடிக் குற்றத்தைப் பொறுத்தலும் துன்பத்தைக் களைதலும் வாழ்கின்றார் இயல்பு. கண்ணிற்கு அணிகலமாகக் கண்ணோட்டமில்லாதவர் கண்ணுடையார் எனப்படார். அவர்தங் கண்ணுக்கும் மரக் கணுவுக்கும் பெரியதோர் வேற்றுமையில்லை. மரம் துன்புறுவோரைக் கண்டு இளகுதலில்லாதவாறு போல, ஒருவர் வருந்துவோரது துயரைக் கண்டு இரங்காராயினர். அவர் பெயருக்கே கண் பெற்றிருக்கின்றார். மரம் பெயருக்கே கண் (கணு) பெற்றிருப்பது போல என்றும், கண்ணின் தொழிலைக் கண் செய்யாததால் அவர் கண்ணிருந்தும் குருடரே என்றும், பிறவிக் குருடரல்லா இக்குருடர் மனிதராக வாழ்கின்றார் என்றல் வாய்மையாகாது என்றும், அன்னார் மரத்தையே யொத்தாரென்றும் வள்ளுவனார் கருதினாரென்பதை,

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்"

என்னும் வாய்மொழியானுணர்க. அன்புங் கண்ணோட்டமும் உடைய ஒருவர். நாணுடையராகவும் இருத்தல் வேண்டும். நாண் என்றவுடன் மகளிர்தம் நாற்குணங்களுள் ஒன்றை நினைத்தலியல்பு. ஆனால், ஈண்டுச் சுட்டப்படும் நாண், பழிபாவத்திற்கு அஞ்சுவதால் ஏற்படும் ஒருணர்ச்சியேயாம். அஃது இருபாலர்க்கும் வேண்டியதொன்றே. பழியொடு வருவதானால் உலகு கையகப்படுதலாயிருப்பினும் வேண்டா என்று விளம்பத்தக்க விழுமிய விறல் படைத்தவர்க்கே வாழ்வதாகச் சொல்லிக்கொள்ள ஒருரிமை உண்டு. அஃதில்லாதவருக்கும் மரப்பாவைக்கும் பெரிதும் வேற்றுமையில்லை. உயிரில்லா மரப்பாவை ஆட்டப்பட்டு ஆடி, உயிருடையதென நினைக்குமாறு மக்களை எவ்வாறு மருட்டுகின்றதோ அவ்வாறே நாண் என்னும் அருங்குணமில்லாதவர் நடமாடுவதுபோல் நடமாடி உயிருள்ளவர்போலப் பிறரைமயக்குகின்றார். நாணுணர்ச்சியற்ற இவர் வாழ்கின்றாரல்லர். இக்கருத்தை,

"நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட் டியற்று"

என்ற அருங்குறளால் அறிக. எனவே, அன்பு கண்ணோட்டம், நாண் என்றிவ்வுணர்ச்சிகளான் வள்ளுவனாரும் வாழ்க்கையை அளவிடுதலைக் காண்க.

இனி, ஒருவரது சிந்தையினாலும் வாழ்க்கை அளந்தறியப்படும் என்பதற்குரிய குறட்பாக்களைக் கண்டறிவாம். ஊக்கமும், உயர்வுள்ளலும், ஒப்புரவறியும்

ஆற்றலும் உள்ளவரே வாழ்கின்றார் எனத் தக்கார் என்பது வள்ளுவனார் கருத்தென்பதை,

"உரமொருவற் குள்ள வெறுக்கை; அஃதிலார்
மரம் மக்க ளாதலே வேறு"

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து",

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்னும் குறளடிகளால் உணரலாம். ஆக்கம் தரும் ஊக்கம் ஒருவரிடத்து இல்லையானால் அவர் மரத்தோடு பொதுத் தன்மை பொருந்தியவரேயன்றி, மக்கட் பண்புடையர் ஆகார். மரமேனும் பழ முதலியன வழங்குகின்றது; வீடு, படகு, மேசை, வண்டி அமைக்கப் பயன்படுகிறது. ஊக்கமிலா ஒருவரோ அம்மரம் தரும் பயனும் தாராராயின், மரத்தினும் இழிந்தார் அல்லரோ? மரம், மரவடிவுடையதாயிருத்தலும், இவர் மனிதத்தோல் போர்த்திருத்தலுமன்றி வேறு என்னே இவர் தம்முள் வேற்றுமை?

அங்ஙனம் ஊக்கமுடையார் ஊக்குவ தெல்லாம் உயர் பொருள்களின் பொருட்டாயின், அஃது ஓர் ஏருடைத்து. தமது நிலையினும் மேன்மேலுயர்ந்து நிற்க விழையும் ஒவ்வொருவரும் குறிக்கோளை உயரியதாக அமைத்துக் கொள்வதால் வருவது பெருமையேயொழிய வேறன்று. சுண்டெலியைப் பிடித்திடுவதினும், ஆளியொடு பொருது அடலின்றி மீளல் தாழ்ந்ததேயோ! கைகூடுவது சிறியதே யாயினும் கைகூடாப் பெரியதினும் சிறந்ததே யன்றோ என

வினவுவாரிருப்பர் என்பது அறிவாம். ஒவ்வொரு வரது முயற்சியும், நினைப்பும், செயலும் எல்லாம் ஒன்று சேர்த்து வெற்றி அறியப்படுமேயன்றிச் செய லொன்றினால் அன்று என்பதை மனத்தில் முதற்கண் வைத்தல் வேண்டும். எதை வென்றார் என்ற வினா எழுமுன், எத்துணை இடுக்கணைப் பொடியாக்கி வென் றார் என்றும், எத்தகைய முயற்சியால் வென்றார் என்றும் கேட்டல் பெரியோரியல்பு.

"முயல்க, நன்றாக முயல்க; சிறந்ததில் முயல்க; மிகச் சிறந்ததில்—மிகமிகச் சிறந்ததில் முயல்க. வெற்றியென்பது ஒரு பொருளன்று; முயற்சியே எப்பொருளும்" என்று இராபர்ட்டு பிரௌனிங்கு என்ற பெரியார் உரைத்திருக்கும் உயர்மொழியை வள்ளுவர்தம் திருக்குறள் மொழியோடு ஒப்பிட்டு நோக்கி, திருக்குறள் மொழியைப் பொன்னெழுத்துக் களால் வெள்ளித் தகட்டிற் பொறித்து வைத்தல் எவ்வளவு நல்லது!

எவ்வது உலகம் உறைவதோ அவ்வதே உலகத் தோடு அறிவுடையார் உறைவர், உலகம் எங்ஙனம் நிகழ்கிறது என்றறிந்து அங்ஙனம் நடத்தலை மேற் கொள்ளாதவருக்கும் செத்தாருக்கும் பெரியதோர் வேறுபாடில்லை. செத்தவர் அறிதலுமில்லை, செயல் புரிதலுமில்லை. இவரும் அறிவிருந்தும் அறிகின்றா ரில்லை. செயல்புரியும் ஆற்றலிருந்தும் அவிந்தாருள் வைத்து எண்ணப்படுவரேயன்றி வாழ்வோர் எனப் படார்.

மேல், செயல் கொண்டு உயிர் வாழ்தல் உய்த் துணரப்படுகின்றது என்ற உரைக்குப் பொருந்திய

வள்ளுவர் கூற்றினை நோக்குவோம், கல்வி கேள்வி கற்றவற்றைச் சொல்லுந்திறன் ஆகிய இவற்றை யுடையவரே வாழ்கின்றவராவர்; அல்லாதார் இருந்தும் உலகிற்கு யாதொரு பயனுமின்மையின் இல்லாதவரே என்று இயம்புகின்றார் திருவள்ளுவர். கல்லாதவனுக்கும் களர் நிலத்துக்கும் ஒப்புமை காட்டுகின்றார் அவர். களர் நிலத்தைப் போற்றுவார் இல்லாதவாறே போலக் கல்லாதவரை நன்கு மதிப்பாரும் இல்லை. களர் நிலம் பிறர்க்கு உணவு முதலாயவற்றை உத வாதவாறே போலக் கல்லாத மாக்களும் பிறர்க்கு அறிவு முதலானவற்றை உதவமாட்டுவாரல்லர். பின் என் பயன் உலகுக்கு அவராலே? ஒரு சிறிது பய னுளதெனினும், அப்பயன் விலங்கினால் விளைவதினும் வேறன்றே? அன்றாயின், கல்லாத நல்லாரை மக்கட் குழுவில் வைத்து எண்ணுவதெங்ஙனமாம்?. மகனு யாதல் மகளாயாதல் வாழாத ஒருவரை வாழ்வதாகச் சொல்லுவதெப்படி?

அவிச்சுவையன்றிக் கவிச்சுவை அறியா வாயினை யும் நல்ல பொருள்களைக் கேட்டுக் கேட்டுத் துளைபடா இரண்டு ஓட்டைச் செவிகளையும் உடையவர் இருந் தால் உலகத்தார் பெறுவதும், இறந்தால் இழப் பதும் இல்லையெனச் சற்றுக் கடுமையாகவே திரு வள்ளுவர் உரைத்திருக்கின்றார். அதனை,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

என்னும் அவர் மொழியான் அறிக. அங்ஙனமே பயனில சொல்வானையும் அச்சொல்லைப் பாராட்டு

வானையும் வாழ்கின்றாராகத் திருவள்ளுவர் மதிக்கின்றாரில்லை.

> "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
> மக்கட் பதடி எனல்"

என்னும் குறளான் பயனில்லாச் சொல்லைப் பெரிதும் மேற்கொள்வானை மகனென்று சொல்லற்க, மக்களுட் பதரென்றே சொல்லுக என்று அவர் உரைத்ததன் காரணம், அறிவிருப்பின் அங்ஙனம் செய்யாரென்பதும், அறிவிலார் வாழ்கிறார் என்றால் ஏலாது என்றும் அவர் கருதியமையேயாம். கல்வி கேள்விகளையுடையார் வாளா இருப்பின் பெரியதோர் பயனைத் தருகின்றாரில்லை. அவர் கற்றார்முன் தாம் கற்றவற்றைச் செல்லும் வகையில் சொல்லவல்லார் ஆகவேண்டும். அன்றேல், தாம்புரிந்த கல்வி கேள்விகளாற் பயன் பெறாது பிறரைப் பயனெய்துவிப்பதுஞ் செய்யாது கழிகின்றாராவர். அங்ஙனம் கழிகின்றவர் கல்லாதவரினுங் கடையரே யாவர். "கல்லாதவர் பயவாக் களரனையர்" என்பது முன்னரே காட்டப்பட்டதாகலின் அவரினுங் கடையார் களரினுங் கடையார் அல்லரோ? இவற்றை யெல்லாம் உன்னியே திருவள்ளுவர்

> "உளரென்னு மாத்திரைய ரல்லார் பயவாக்
> களரனையர் கல்லா தவர்"

என்று கல்லாமை என்னும் அதிகாரத்தின்கண்ணும்

> "கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
> நல்லா ரவைஅஞ்சு வார்"
>
> "உளரெனினும் இல்லாரோடு ஒப்பர் களனஞ்சிக்
> கற்ற செலச் சொல்லா தார்"

என்று அவையஞ்சாமை என்னும் அதிகாரத்தின் கண்ணும் உரைத்தார் என்றுணர்க. எனவே, கற்றலும் கேட்டலும் கற்றவற்றைச் சொல்லலும் ஆகிய செயல்புரிவாரே வாழ்கின்றவராகின்றனர் என்பது வெளிப்படை. அறவினையைச் செல்லும் வாயெல்லாம் ஒல்லும் வகையான் ஓவாது செய்தல் வேண்டும் என்று வள்ளுவனுர் வற்புறுத்துகின்றூர் ஆகலானும், அறத்தின் மிக்கதோர் ஆக்கமும் அதனை மறத்தலின் பெரியதோர் கேடும் மக்கட்கில்லை என்று அவரே அறைகின்றூராகலானும், கேடு என்பது அழிவு என்னும் பொருட்டு என்ப ஆகலானும், அறவினை செய்யார் அழிந்தாரேயன்றி உள்ளார் எனப்படார் என்பது ஊகித்தறியப்படும்.

இத்துணைச் சிறந்த பொன்னுரைகளைத் தமிழுலகிற்கு அளித்த பெருமை திருவள்ளுவருடையது என அறிந்து மகிழ்கிறோம்.

8. *வள்ளுவர் அறம்

[வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்]

இச்சொற்கு இது தான் பொருள் என யாரும் வரையறுக்க முடியாது. அறவியலை அறிவிக்கும் நூல்களாவது, அறத்தை முற்ற வகுத்தனவோ எனின், அதுவும் இல்லையெனவே துணிந்து கூறலாம். அறம் மிகப் பரந்தது. அதனை அறிவிக்கப் புகுந்த பலர் விதிவகையான் விளக்கிப்போந்து முடியாமை யின், விலக்குவகையானும் (எதிர்மறையானும்) விளக் கினர்கள். அப்படியும் அதனிலக்கணம் முற்றிய பாடில்லை. அது அறு+அம் அறம் என இயைந்து விதியானும் விலக்கானும் செய்வன தவிர்வனவற்றை வரையறுப்பது எனப் பொருள்படும், அம்—வினை முதற் பொருளில் வந்த விகுதி. ஆதலால் மனிதவாழ் வில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இவை யென வரையறுப்பது அறம் எனலாம். உலகில் உள்ள நல்லன எல்லாம். தகுதியாயின எல்லாம், புண்ணிய மெல்லாம், நோன்பெல்லாம். ஞானமெல்லாம் அறம். எச்செயல் யாவரானும் பாராட்டப் பெறுகின்றதோ அது அறமாகும். விலக்கத்தக்கது ஒன்றும், உலகத்துப்

---

* தருமபுர ஆதீன வெளியீடாக வந்துள்ள ஆசிரியர் அவர்களது 'திருக்குறள் உரைவளம் - காமத்துப்பால்' நூலில், அவர்கள் மிகஅருமையாக எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரையிலிருந்து தொகுத்தது.

பலராலும் பாராட்டப்பெறுமாயின் அறமாகலாம் என்கிறது சுக்கிர நீதி. (அத். 5. சு. 35)

இத்தகைய அறத்திற்கு - சிறந்தாரும் வரைவிலக் கணங் கூறமுடியாத அறத்திற்கு வள்ளுவர் சில சொற்களால் மிகச் சீரிய முறையில் இலக்கணங் கூறி முடித்தார். சுக்ரன் முதலாயினுர்கூட நல்லன செய் தல் அறம் என்ருர்கள். வள்ளுவர், செயல் சிந்தையின் வழியது ஆகலின் அறம் அங்கேயே அமைதல் வேண் டும் என்கிருர். செயற்கண் வெளிப்படின் சிந்தித்துச் செயலுக்கு வருவதற்குள் அறமல்லாதன உள்ளத்தை யும், உணர்ச்சியையும், ஏன்? உடலையுங்கூடக் கெடுத்து விடுகின்றன. ஆதலால் அதனை அகத்திலேயே அமைக்கவேண்டும் என்று கருதிய வள்ளுவர் அறமா வது 'மனத்துக்கண் மாசிலனுதல்' என்ருர். மனமாசு இவையென அவரே உணர்த்தாவழி நாம் உணர்வது எப்படி? அதற்காக 'அழுக்காறு அவா வெகுளி' இவை மனக்குற்றம் என்ருர்; இவற்ருலும், மொழிக் குற்றமாகிய கடுஞ்சொற் கூறலானும் அறம் தவறும். இந்நான்கினும் தவருததே அறம் என வரையறுத் தார். சொல்லால் நேரும் அறவழுவைக் காத்த அவர் மீட்டும் வற்புறுத்த 'இன்சொலினதே யறம்' என உடன்பாட்டுமுகத்தானும் ஓதினுர். இங்ஙனம் அற மாவது மன மொழி மெய்கள் தூயனுதல் என வரை யறுத்தோதியது வேறு எந்த நீதி நூலாரும் சொல்ல இயலாத பெருமையது. இந்த அறம் என்ற சொல் லுக்கு ஒத்த சொல் வடமொழியில்தான் உண்டு. அது தருமம் என்பது. ஆங்கிலத்தில் இதற்கொத்த - இதன் பொருள் முழுமையும் அடக்கிக் காட்டக்கூடிய சொல்

ஒன்றுமில்லை எனப் பாராட்டியிருக்கிறார்கள் கனம் ராஜாஜி அவர்கள். (C. R மொழிபெயர்ப்பு பக். 2)

இத்தகைய அறத்தை இல்லறம் துறவறம் என இரண்டாகப் பிரித்தார் வள்ளுவர். பிரமசரியம் முதலிய நால்வகை நிலையுள் இரண்டனையே சிறப்புப்பற்றி எடுத்தனர். பிரமசரியம் விரதங்காத்துக் கல்வி முற்றிய பின்னர் இல்லறத்தில் முடிவெய்துவதாதலின் அதனை இல்லறத்திலும், வானப்பிரத்தம் துறவிற்கு முதற்படியாதலின் அதனை அதிலும் அடக்கி இரண்டென்றார் என்பர் சிலர். பிரமசரியத்தைப் புதல்வர்ப் பேற்றிலடக்கினர் என்பர் சிலர். பரிமேலழகர் 'நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இரண்டாகக் கூறப்பட்டது' என்பர்.

ஊழைத்தனியே ஓரியலாக ஆண்டார். அவ்வூழ் அறத்தின் பயனாய் விளைந்து, பின்வரும் பொருளுக்கும் இன்பத்திற்கும் வழியாதலின் அறத்துப்பாலினிறுதியில் காரண காரிய இயைபுபற்றி வைக்கப்பெற்றது. ஊழ்காரணமாகப் பின்வரும் பொருளும் இன்பமும் விளைவது உறுதியாதலின் பொருளுக்கு முகற்கண் அமைத்தார். ஊழ் ஓரேயதிகாரமாக இருந்தமையின் ஊழியல் எனக்குறியாது விட்டனர்போலும்.

இல்லறம்: இல்லறவியல் இல்வாழ்க்கை தொடங்கிப் புகழ் ஈருக இருபது அதிகாரங்களையுடையது. அதில் இல்வாழ்க்கையே நல்ல வாழ்க்கை; இல்வாழ்

வானுக்குரிய 'இன்றியமையாத கடமைகள் எல்லார்க்கும் துணையாதலும், உழைப்பின்வந்த ஊதியத்தைப் பகுத்துண்டலும் முதலாயின. இல்வாழ்க்கைக்குப் பண்பு அன்பு. பயன் அறம், இவ்வண்ணம் அன்பின் பயனாக அறம் அமைதலை 'அறத்திற்கே அன்புசார்பு என்ப' என்ற பகுதியாலும் பின்னர் வற்புறுத்தல் காண்க. இல்வாழ்க்கையைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை; அமரவாழ்வெய்தலே அதன் பயன், இத் தகைய இல்வாழ்க்கைக்குத் துணை யின்றியமையாதது. துணையும், நல்ல குணமும் நல்ல செய்கையும் உடைய தாக இருத்தல் வேண்டும். வருவாய் அறிந்து வழங்கி வாழும் இயல்பினதாக இருத்தல் வேண்டும். துணை நல்லதுணையாக இல்லாவிட்டால் எல்லாம் இருந்தும் பயனில்லை. துணைக்குக் கற்பே யணி எனப் பெண் ணியல்பு பேசப்படுகின்றது. இங்ஙனம் இல்வாழ் வார்க்கு 'இவனைப்பெற இவன் தந்தை என்ன தவஞ் செய்தானோ' என்ற சொல்லை உலகில் நிலைநாட்டும் மக்களைப் பெறுதல் இன்றியமையாதது. மக்களில்லா வாழ்வு எக்களிப்பில்லாதது. மக்கள் குழப்பிய உணவையுண்டலும், மக்கள் மேனியைத் தீண்டலும், அவர் உரை கேட்டலும், மிக இனிமை பயப்பன. தந்தையின் கடமை சிறந்த முறையில் கல்வியளித்தல். படித்த மகனைக் கண்டால் தாய்க்கும் பெருமகிழ்ச்சி. மகன் கடமை தனது நெறியாலும் ஒழுக்கத்தாலும் எல்லாரும் தன் தந்தையைப் பாராட்டச் செய்தல்.

இவ்வண்ணம் நன்மக்களைப்பெற்ற இல்வாழ் வார்க்கு அமையவேண்டிய இன்றியமையாத குணம் அன்பு, அந்த அன்பு தமக்கு உரிமையுடையார் துன்

பங்கண்ட காலத்து வெளிப்படும். எல்லார்க்கும் உபகாரியாக்கும் இயல்பு அன்பால் விளைவதே, அன்பாலே உலகில் நண்பு வளர்கிறது. அன்பு அகத்துறுப்பு. அன்பில்லாத வாழ்வு வற்றியமரம் தளிர்த்ததுபோலத்தான், அன்பு உடையார், தம்மைப்போல அனைவர்க்கும் பசியுண்டு தாகமுண்டு துன்பமுண்டு என எண்ணுவார்கள். அதனால் புதியராய் வந்தவர்களையும் தமர்போலப் பேணத் தலைப்படுவர், அவர்களே உண்மையில் இல்வாழ்வார் ஆவார். என்ன இடையூறு நிகழினும். எவ்வளவு பஞ்சகாலமாயினும், எவ்வளவு உயர்ந்த உணவாயினும் விருந்துபசரியாது உண்டல் கூடாது. விருந்து உபசரிப்பவர்க்கு விளையுள் பெருகும். செல்வம் வளரும். மறுமையில் வானவர் விருந்தாக வரவேற்பர். விருந்துபேணாச் செல்வர் மடையர். விருந்து பேணுமுறையோ இன்பமுகத்தோடு வரவேற்று இன்சொல் சொல்லுதல். இன்சொல்லே இல்வாழ்விற்கு அணி. இன்சொல்லே புண்ணியம் பெருக்கும்.

மக்களுக்குச் செய்ந்நன்றியறிதல் இன்றியமையாதது. அது காலத்திற்செய்ததும், மாற்றுப்பயன் கருதாது செய்ததும், யாதொரு தொடர்புமின்றியே செய்ததும் என மூவகைப்படும். நன்றிக்கு மதிப்பு, செய்யப்பட்டவர் தகுதிநோக்கியே அமைகின்றது. செய்ந்நன்றி காரணமாகவும், அன்பு முதலிய காரணமாகவும் நடுவுநிலை தவறக்கூடாது. நடுவுநிலை தவறின் கேடுவரும் என்பது உறுதி. அதுவும் வாணிகர்க்கு நடுவு நிலை இன்றியமையாதது. தீயன மனம் மொழி மெய்களால் நிகழும், அங்ஙனம் நிகழாதவாறு அடங்கி

யிருத்தல் புகழையும், புண்ணியத்தையும், அமரவாழ்வையும் அளிக்கும். எவ்வளவிற்கெவ்வளவு செல்வத்தாலும் சீர்த்தியாலும் சிறப்பாலும உயர்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அடக்கம் இருத்தல் வேண்டும். நாவடக்கம் மிக நல்லது. நாவடங்காமையால் விளையும் தீமைகள் பல.

ஒழுக்கந்தான் ஒருவனுக்கு உயிர்: அதுதான் குடிப்பிறப்பு; அதுதான் உயர்வளிப்பது; அதுதான் நன்மைக்கெல்லாம் அடிப்படை. ஏட்டில் ஏழுதப்பெற்றதெல்லாம் ஒழுக்கமல்ல. உலகத்தோடு ஒத்ததே ஒழுக்கம். ஒழுக்கத்தவறு மெய்யுணர்ச்சியால் விளைவது. கண்டு கேட்டு உற்று உண்டு உயிர்த்து அறியும் ஐவகை இன்பங்களையும் தன் மனைவியிடமாகப் பெறுதல் ஒழுக்கம்; பிறனில்லாளை விரும்பியடைதல் ஒழுக்கக்கேடு. பிறர் மனைவியை விரும்புவார் அறம் பொருள் இவற்றையிழப்பர். அவர்களே பேதை. அவர்கள் இறந்தவர்களே. அவர்களே பழிகாரர்கள். பாவிகள். பிறர் மனைவியை ஏறெடுத்தும் பார்க்காதவர்களே வீரர்கள்; ஒழுக்கமுடையார்; தருமவான்கள். அவர்களே உலகில் எல்லா நல்ல காரியங்களுக்கும் தலைமைதாங்க உரியவர்கள்.

இங்ஙனம் இந்திரியங்களை வென்று விளங்குபவன் மனத்தையும் வென்றவன்தானே? அவனிடம் பொறுமையிருக்கும். பொறுமையாவது குறைசெய்பவர்களை மன்னித்து விடுவதுமட்டுமல்ல; மறந்தே விடுவதுதான். பொறுமை சால்புடைமையைத்தரும். அழியாப்புகழைத் தருவதும் அது. துறவிகளைக்

காட்டிலும் பெருமையைத் தருவதும் அதுவே. பொறு மைக்கு மறுதலே பொருமை. இது பிறர் செல்வம் புகழ் பதவி முதலியன கண்டவழி விளைவது, இது பகைவனைப்போலத் தன்னையுடையவனுக்கு அழிவுண்டு பண்ணும். பொருமை யுடையவனைப் புண்ணியம் பொருந்தாது. செல்வம் சேராது. சுற்றமுங் கெடும். உணவுக்கும் உடைக்குங்கூட வருந்துவான். ஒருபோதும் அவனுக்கு ஆக்கமில்லை. ஆதலால் மக்களனைவரும் அழுக்காறில்லாமையை ஒழுக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். பொருமைப்பட்டவன் பிறர்பொருளை கவரக் கருதுதல் இயல்பு. அங்ஙனம் விரும்பின் அவன் ஆக்கம் கெடுதலேயன்றி அவனும் கெடுவான். குலம் அழியும். குற்றமிகும். ஆதலால் பிறன்பொருளை விரும்பியாகும் செல்வத்தை விரும்பற்க.

சிலருக்கு வெஃகியபொருளை அடைய முடியா தாயினும்—இவன் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்காதாயினும் ஆக்கமுடைய பிறரைப்பற்றிப் புறங்கூற நேரும். அவ் வண்ணம் புறங்கூறுதல் பாவஞ் செய்தலைக் காட்டிலும் கொடிது. புறங்கூறி வாழ்வதைக் காட்டிலும் இறத்தல் நல்லது. மக்கள் அனைவரும் நண்போடு வாழப் பிறந்த வர்கள், அவர்கள் புறம்பேசி உறவினரைப் பிரித்தல் கூடாது. தன்னோடு உயிரொத்த சிநேகிதர் குறை களையும் தூற்றுவார். பிறரைப்பற்றிப் பேசுவதைச் சிந்திப்பானேன்? பிறரிடம் குறை காண்பதைப்போலத் தன்னிடமும் கண்டால் புறங்கூற வருமா? புறங் கூறத் தலைப்பட்டவன் வெற்றுரை பேசவும் பின் வாங்கான். பயனில பேசுபவர்களை எல்லாரும் இகழ்வர் பயனில பேசுதல் சிறப்பைக் கெடுக்கும், புகழைக்

கெடுக்கும். ஆதலால் நேர்மையற்ற பேச்சைப் பேசினும் பேசலாம். பயனற்றவைகளைப் பேசுதல் கூடாது.

இவ்வாறு புறங்கூறி வெற்றுரை பேசிக் காலங் கழிப்பவர்கள் தீவினைசெய்ய அஞ்சார். எப்போதும் தீயன நினைக்கத் தொடங்கியவர் சொல்லத் துணியாமலிரார். சொல்லத் துணிந்தவர்கள் செய்யாமலிரார். பலகால் சொல்லிச் சொல்லிப் பக்கபலம் சேர்த்தன, செயல்முறையில் நிகழ்ந்தே தீரும். ஆதலால் தீவினை நெருப்பைக் காட்டிலும் கொடிது. பகைவர்க்கும் தீமை செய்தல் கூடாது. பிறர்க்கு நாம் கேடெண்ணினுல் தெய்வம் நமக்குக் கேடு எண்ணும். பகைவர்க்குத் தப்பலாம்; தீவினைக்குத் தப்பமுடியாது. தன்னிழல் தன்னைவிட்டுப் பிரியாததுபோல, தான் செய்த வினை தன்னைவிட்டு நீங்காது. தன்னுயிரில் தனக்கு ஆசையிருக்குமானுல் பிறருயிர்க்குக் கெடுதி செய்தலாகாது. இவ்வாறு பிறர்க்குக் கேடு செய்யாதவன் செய்யக் கூடியது ஒன்றுண்டு, அதுதான் உலகம் நல்லன என்று ஒத்துக்கொள்ளக் கூடிய காரியங்களைச் செய்தல் இது ஏட்டிற் கண்டது அன்று; உலகியலில் அமைந்தது இவ்வண்ணம் உலகியற் கொத்தது உணர்பவனே வாழ்பவன்.

உழைத்த பொருளெல்லாம் உபகாரம் செய்வதற்கே, உதவுபவன் செல்வம், நீர்நிறைந்த ஊருணி போலவும், மருந்துமரம் போலவும், ஊர்நடுவே பழுத்த பொதுமரம் போலவும் எல்லார்க்கும் எக்காலத்தும் பயன்படும். அவனுக்கு வறுமையில்லை, துன்பமில்லை, ஆதலால் தன்னை விற்றுவது ஒப்புரவாற்றவேண்டும், இந்த ஒப்புரவு அனைவர்க்கும் செய்யப்படும் உதவி.

ஏழைகட்குச் செய்யப்படும் உதவி ஈகை எனப்படும். குறிப்பறிந்தீதலே கொடை. ஈகையும் துன்பந்தான், வாங்கியவன் மகிழும் வரையில். ஏழையின் பசியைப் போக்குதலே சேமநிதியைச் சேர்த்துவைக்குமிடம். பசி வேண்டாதவன் பகுத்துண்ண வேண்டும். கொடுப்பதில் ஓர் இன்பமுண்டு. அது உலோபிகட்குத் தெரியாது. நம்மாற் கொடுக்கமுடியாத காலத்துச் சாதலே நலம். கொடையால் விளைவது புகழ். உலகத்து அழியாதது புகழ் ஒன்றே. புகழில்லா உடலைச் சுமந்த நிலங்கூட வளங்குன்றும். இகழின்றிப் புகழ்பெற்று வாழ்வாரே வாழ்வார் என்பதும், இல்லறத்தின் இன்றியமையாத கடமை, தன்னடக்கமும், பகுத்துண்டலும், ஈகையுமே என்பதும், பயன் புகழ் என்பதும் வலியுறுத்தப் பெறுகின்றன.

துறவறம்: இல்வாழ்ந்து நுகர்வன நுகர்ந்து உவர்ப்புக்கண்ட காலத்து, உண்மை ஞானத்தால் உயர்வுற உயர்ந்த நலத்தை எய்த விரும்புதல் எவர்க்கும் இயல்பு. புகழ்பட வாழ்ந்த பேரறிவாளன் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றையும் அறுக்க முற்படுவன். பற்றறுத்தல், பற்றுச் செல்லுமிடத்திற் செல்லவிடாது தடுத்து நிறுத்தலும், இது செல்லுமிடம் இது செல்லாதவிடம் என்ற வேறுபாடின்றி உலகம் முழுவதையுமே உறவாகக்கொண்டு செலுத்துதலுமாகிய இருநெறியால் நிகழும். அவற்றுள் முன்னது ஓடுநீரை அணையிட்டதுபோல, முட்டவரும் மாட்டைக் கட்டிப்போட்டதுபோலத் தடுத்தலாகும். அணைமெலிந்தாலும், கயிறு அறுந்தாலும் நீரும் மாடும் பொருட்கேடு விளைத்தல்போலப் பற்

றறுதியும் தடைநீங்கியவரிடத்துப் பெருந்துன்பம் செய்யும். உலகம் முழுவதையுமே தம்பற்றின் நிலைக் களமாக்கிவிட்டால் சிறப்பன்பு செய்யப் பொறுமையால் தீமை நிகழவே நிகழாது.

அதனை எண்ணியே அருள் என்ற விரதம் துற வறத்தின் தலையாயமைந்தது. தன்மாடு தன்வீடு என்ற உரிமையாகிய செல்வம் பூரியார்கண் பொருந்து வது. அனைத்தையும் பொதுநோக்குடன் அன்புசெய்த லாகிய அருளுடைமை உயர்ந்தோர்களிடமே உண்டா வது. ஆதலால் அருளையே மேற்கொள்ள வேண்டும். அருளுடையார் உயிர்க்கு அச்சமில்லை; துன்பமில்லை. அருளிலார்க்கு மறுமை இன்பம் இல்லை. இவர்களுக்கு விடுதி என்றுமேயில்லை. அருணிலையில் நழுவுதல் நேர்ந்தகாலத்துத் தம்மின் வலியார்முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை நினைத்தால் தானே அருளுதிக்கும்.

மனிதன் வாய்க்கு அடிமையாகாதிருத்தல் முடி யாது. ஆதலால் புலாலுண்டாவது வாய்க்கு அடிமை யாவன். அது அருளுக்கு இழுக்காகும். ஆதலால் புலால் உண்டல் கூடாது. புலால் உண்பவனிடம் அருளிராது. அவன் மனம் எப்போதும் நல்லன எண்ணாது. இவர்களுக்கு நரகம் நிச்சயம். இவர்களை விழுங்கிய நரகம் மீட்டும் விடுதலை செய்யாது. நாம் கொல்லவில்லையானாலும், தின்பவர்களாகிய நாமில்லை யானால் கொல்பவர்களும் இல்லை. ஆதலால் புலா லுண்டல் கூடாது. புலால் பிறவுடம்பின் ஊன், புலா லுண்ணாமை ஆயிரம் யாகம் செய்தலினும் மேல். கொல்லாமலும் புலாலுண்ணாமலும் இருப்பவனை

எல்லாவுயிர்களும் தொழும். உணவு ஒழுக்கமுடை யார்க்கே தவம் நிலைக்கும்.

தவம் என்பது பொறிகளையடக்குதலும், நீர் பல கால் மூழ்கி நிலத்தசைஇ தோலுடீஇ சோர்சடை தாழச் சுடரோம்புதலும் அன்று. தனக்கு வந்த நோயைத் தாங்கிக்கொள்ளுதலும், பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமே. அத்தவமும் தவமுடை யார்க்கே சித்திக்கும். தவத்தால் பகைவரை வெல்ல லாம். அடுத்தவர்களை ஆக்கலாம். வேண்டியவற்றை வேண்டியபடி எய்தலாம். காலத்தை வெல்லலாம். ஆனால் தவம் தன்னலத்திற்காகச் செய்யப்படுவதல்ல காமியத்தவம் கூடாது. அத்தவத்தைக் கெடுப்பது ஒழுக்கக்கேடு, தவசிபோல வேடந்தாங்கித் தவிர்வன செய்தல். பசு புலித்தோல் போர்த்தி மேய்ந்தது போலாம். இத்தகையவர்களே கொடியவர்கள். இவர் களால் உண்டாகும் துன்பங்கள் பல. உருவத்தால் யாரையும் துணிதல் கூடாது. தொழிலால் துணிதல் வேண்டும்.

கடியத் தக்க பாவங்களுள் திருட்டும் ஒன்று, திருட்டு மக்கட் சமுதாயத்தில் மதிப்பை இழக்கச்செய் யும். ஆதலால் சிறிய திருட்டும் கூடாது. அதனை மனத்தாலும் எண்ணுதல் கூடாது. களவு ஒழியாத் துன்பத்தை உறுவிக்கும்; பொருளை அகற்றும்; அழி வை உண்டாக்கும், கள்வர்க்கு வானுலக வாழ்க்கை பொருந்தாது.

திருட்டு நிலைத்துநிற்பது பொய்யால்; பொய் யென்பது நடந்ததைக் கூறுமையும் நடவாததைக்

கூறுதலும் அன்று. ஒரு சிறிதும் யார்க்கும் தீமை இல்லாதவற்றைச் சொல்லுதலே வாய்மை என்பது வள்ளுவர் கருத்து. பிறர் யாரும் அறியாமையினாலே பொய்சொல்லலாம் என்பதில்லை, தன்னுடனிருக்கும் உள்ளமே வருத்தும். ஆதலால் மனச்சாட்சி அறிய, பொய்சொல்லுதல் கூடாது. வாய்மையைப் போன்ற தொரு அறமும் வணக்கமும் தூய்மைமிகுப்பதும் வேறொன்றில்லை.

பொய்மை திருட்டு கூடாஒழுக்கம் வெளிப்படினும் விரும்பியபொருள் கைகூடாவிடினும் அகங்காரத்தின் ஆதிக்கத்தால் கோபம் எழுதல் இயல்பு, அதிலும் ஆற்றலில் குறைந்தாரிடத்தேயே சினம் செல்லும். அங்கும் சினத்தைச் செலுத்துதல் ஆகாது. சினம் தீமைக்கு எல்லாம் பிறப்பிடம். சிரிப்பை அகற்றும்; மனமகிழ்ச்சியைக்கொல்லும். சுற்றத்தையும் சேர்த்துச் சுடும். ஆதலால், துறவிக்குக் கொஞ்சமும் பொருந்தாது அது. சினம் முற்றினால் பிறருக்குத் தீமைதான் செய்யத் தோன்றும். எவ்வளவு பெரிய செல்வம் பெற்றாலும் பிறருக்குத் துன்பம் செய்தல் கூடாது. அதுதான் அறிவுடைமை.

துன்பம் செய்தோர்க்கும் துன்பம் செய்தல் கூடாது. மக்களுக்கு மட்டுமல்ல பிறவுயிர்களுக்குங் கூட. பிறவுயிர் அனுபவிக்கும் துன்பத்தைத் தனக்கு வந்ததுபோல எண்ணுதல் வேண்டும். துன்பம் பிறர்க்கு முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் ஆதலால் அறிவுடையவன் துன்பம் செய்தார்க்கும் இன்பமே செய்தல் வேண்டும்.

பிறர்க்குத் துன்பம் செய்து பழகியவன் தனக் காகப் பிறவுயிர்களைக் கொல்லவும் தலைப்படுவான். இந்தக் கொலையின் வாயிலாகவே எல்லாப் பாவங்களும் விளைகின்றன. கொலையென்பது உயிரைப் பிரித்தல் மட்டுமன்று; தான்மட்டும் தொகுத்துண்டு, பிறரைப் பசியால் வாடவிடுதலும் கொலையேயாம். கொலைக்கு அஞ்சுபவனே துறவிகட்குத் தலைவன். தன்னுயிர் போனாலும் பிறவுயிர்களைக் கொல்லுதல் கூடாது. கொலை பூண்டவர் என்றும் பிறவித் துன்பத்திலேயே பேதுறுவர்.

இங்ஙனம் கொலை முதலியன செய்வார் தம் உடம்பை நித்தியம், இடம் பொருள் ஏவல் எல்லாம் நித்தியம் என்ற புத்தியினாலே இயற்றுகிறார்கள். இது மடமை. செல்வம் கூத்துமேடைக் கூட்டம்போலக் கூடி ஒரு சேர அழியும். நாளும் கோளுமோ நம்முடைய வாழ் நாளை அறுத்து வீழ்த்தும் வாளின்பல். போகத்துக் குரியதாக விளங்கும் உலகமோ அதில் வாழும் மனிதனோ இருந்தது அழிந்தது இருந்தான் இறந்தான் என்ற நிலையிலேயே இயங்கக் காண்கிறோம். தூக்கந் தான் இறப்பு, விழிப்புத்தான் பிறப்பு.

ஆகவே, உடல் பொருள் உலகு மூன்றும் நிலை யற்றன என்றறிந்து பற்றை அறத் துறத்தலே துறவு எனப்படுவது. உண்மைத் துறவால் உளதாகும் பயன் கள் பல. விடயசுகங்களை வெறுத்தலும் விருப்பத்தை ஒருசேர ஒழித்தலுமே துறவெனப்படுவது. பிறப்பு அறுப் பேனென்று உறுதிகொண்ட துறவிக்குத் தொடர்ச்சி எதற்காக? உடற்பற்றும் உடைமைப்பற்றும் அறுத்

தவனே உயர்ந்தவன். அவனுக்கே முத்தி. பற்று விடாதவனைத் துன்பங்களும் இறுகப்பற்றி விடமாட்டா.

ஆதலால் பற்றறுக்க ஒரேவழி உண்டு. அதுதான் சாவா மூவாப் பேரின்ப உருவினைப் பற்றுதல். அங்ஙனம் பற்றிய பற்று முறுகிப் பற்றுவானும் பற்றப்படும் பொருளும் பற்றும் வேறின்றி ஒன்ருன நிலையிலேதான் உண்மை ஞானம் சித்திக்கும். அப்போதுதான் இது பொருள், இது பொருளல்ல என்ற உண்மை ஞானம் உண்டாகும். அதனுல் பிறவியறும். காமவெகுளி மயக்கங்களே உண்மை ஞானத்தின் தடைகள். அவற்றின் பெயரும்கூடக் கெடுதல் வேண்டும். அப்பொழுதுதான் செம்பொருளைக் காணலாம். ஐயமின்றி உள்ளத்தால் நித்தியப்பொருளைத் தியானித்தால் மறு பிறவி இல்லை.

இங்ஙனம் உண்மை உணர்ந்தோர்க்கும் , அவா அறுது. அவா தான் பிறவிக்கு வித்து. அவா இன்மை தான் தூய்மை. அது உண்மையை அடிப்படையாகக் கொண்டது. ஆசையைத் துறந்தாரே துறந்தார். அவா அற்ருர்க்குத் துன்பமில்லை; இன்பம் இடையருது நீண்டும். அவர்களுக்கே பேரா இயற்கைப் பெருவாழ்வு சித்திக்கும்.

9. வள்ளுவரும் அயல்நாட்டவரும்

[திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் எம். ஏ.]

அயல்நாட்டவர்களில் பலர் தமிழ் மொழியைப் படித்திருக்கிறார்கள். அவர்களில், ஆட்சி செய்வதற்கு வந்த அலுவல் மேலவர்கள் பலர் ஆவர். தமிழில் எழுதிவரும் விண்ணப்பங்களையும், தமிழில் முறையிட்டுப் பெறும் குறைகளையும், வேண்டுகோள்களையும் அரைகுறையாக ஒருவாறு தெரிந்துகொள்வது மட்டுமே அத்தகையவருடைய நோக்கமாக இருந்தது. தமிழ் மொழியிலுள்ள இலக்கியச் செல்வங்களை அவர்கள் படித்து உணரப் புகுந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. தமிழைக் கற்ற அயலவர்களில் இன்னொரு சாரார், அவர்களது சமயக் கொள்கைகளைத் தமிழ் தெரிந்த மக்களுக்கு அறிவிப்பதற்காகவே படித்தவர்கள் ஆவர். இவ்வகையாரில் ஒரு சிலர், தமிழ்த்தாயின் அணிகலங்களான இலக்கிய இலக்கண நூல்களை ஊன்றி உளங்கொளக் கற்று ஆராயவும் முற்பட்டார்கள். பல மொழிகளைப் படித்து ஆராய்ந்து, அவற்றிலுள்ள கலை நலங்களையும், அவ்வம் மொழிகளைப் பேசும் மக்களுடைய பண்பாடுகளையும் பாராட்டி மகிழ்ந்து தத்தம் மொழிகளில் அவைபற்றிய கருத்துக்களை எழுதி வெளியிடுவதிலேயே இன்பங் கொள்ளும் பன்மொழிச் சுவைஞர்களும் அயல்நாட்டவர்களில் சிலர் இருந்திருக்கின்றனர். இவ்விருதிறத்

தவரும் தமிழுக்குச் செய்துள்ள பணி பெரும் பணி யாகும்.

தமிழை நுணுகி ஆராய்ந்த அத்தனை அயலவரது உள்ளங்களையும் திருக்குறள் கொள்ளை கொண்டிருக் கிறது. திருக்குறள் நூலை ஆங்கிலம், இலத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய அயல் மொழிகள் ஒவ் வொன்றிலும் பல அறிஞர்கள் மொழி பெயர்த்திருப் பதோடு, பல அயலவர்கள் அந்நூலின் அருமை பெருமை களைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து எழுதியுமிருக் கிறார்கள். அவர்களில் ஒரு சிலரது கருத்துக்களில் ஒரு சிலவற்றைத் தமிழ்ப்படுத்தி இங்கே தரலா கின்றேன்.

“வாழ்வின் மூன்று குறிக்கோள்களாகிய அறம் பொருள் இன்பம்பற்றிய 1330 சிறு சொற்றொடர் களாலான திருவள்ளுவர் குறள், உலக இலக்கிய மாணிக் கங்களில் ஒன்றாகும்.”

“அவர் (வள்ளுவர்) நாடுகள், இனங்கள், வகுப்புக் கள் யாவற்றையும் கடந்து நிற்பவர். அவர் கற்பிப்பது மக்கட் பொது ஒழுக்கமும் அறிவுமேயாகும். தோன்றிய நாட்டில் குறள் பெரிதும் படித்து, ஆய்ந்து, உயர்வாகப் போற்றப் பெறுவது மட்டும் அல்லாமல் மேல் நாடுகளில் அது தெரியத் தொடங்கியது முதல், அங்கும் அதனைப் போற்றுபவர்கள் பலரைப் பெற்றிருக்கின்றது என்பதில் வியப்பேதுமில்லை.”

“1730-ஆம் ஆண்டிலேயே முதல் இரு பால்களும் சி. ஜோசப் பெஸ்கி பாதிரியாரால் இலத்தீனில் மொழி

பெயர்க்கப்பட்டன. பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்து வெளியாயின''

—பேராசிரியர் எம். வின்டர்னிட்ஜ்

''உச்சநிலைக் கருத்துக்கள் ஒப்புயர்வற்ற ஒழுக்க விதிகள், இவற்றை எண்ணவும் எழுதவும் ஒத்த ஆற்றல், ஆகிய இவை பொதிந்திருக்கின்றன என்பதற்குச் சான்ருக விளங்குவதால், குறள் மகிழ்ச்சியோடே படிக்கப்பெறும்.''

''ஆசிரியர் தம் மெய்யறிவுரைகளைத் திட்பநுட்பமாக ஈரடிப்பாக்களில் எடுத்தியம்புகின்ருர். அவற்றில் காணும் உறுதிக்கும் செறிவுக்கும் வேறு எந்த மொழியிலும் ஒப்பில்லை என்பது திண்ணம்''.

—ரெவரெண்டு பெர்ஸிவல்,

''மக்களுடைய உள்ளங்களையும் உணர்வுகளையும் கொள்ளைகொண்ட இருநூல்கள் இந்தியாவில் இருக்கின்றன, அவற்றில் முதலது துளசிதாசர் இராமாயணம்; வட இந்தியாவில் ஒவ்வொரு குரிசிலும் குடியானவனும் அறிந்திருப்பது. மற்ருென்று திருவள்ளுவரது குறள்; அதைப்போன்றே இந்தியத் தீவகத்தின் தென்பகுதி முழுவதும் மிக நன்ருகத் தெரிந்திருப்பது.''

''அவை இரண்டில் குறள் மிகப் பழமையது. தமிழ் இலக்கியத்தின் தலை சிறந்த நூலாகிய இதனைப் படித்து உணர்ந்தாலல்லது, எவரும் தமிழில் புலமை பெற்றுவிட்டதாகக் கூறிக்கொள்ள முடியாது என்பதில் ஐயமில்லை.''.

—ஃப்ரெடெரிக் பின்காட்.

"திருவள்ளுவர் பறையரென்று புனைந்துரைக்கப் பட்டார். எனினும், தமிழ் நூல் ஆசிரியர்களில் தெய்வத்தன்மை வாய்ந்த மன்னராக ஒப்புக்கொள்ளப் பெற்றார்"

—ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல்,
டி. டி., எல். எல். டி.,

"தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்தது குறள், எண்ணங்களை எடுத்துரைக்கும் சிறப்பிலும் தூய்மையிலும் ஈடும் எடுப்பும் அற்ற நூல்களில் ஒன்று."

"எல்லாவற்றைக் காட்டிலும் குறளில் காணும் வியப்பு என்னவென்றால்; இனப்பிரிவுகள், மக்கட் பிரிவுகள், கொள்கைப் பிரிவுகள் இவற்றைப் பொருட் படுத்தாமல், உலக மக்கள் அனைவருக்குமே அதன் ஆசிரியர் கூறிச் செல்வது; தலைமையான ஒழுக்கம், தனிமையான அறிவு இவற்றை வகுத்துச் சொல்வது; அறம் வாய்மை இவற்றின் நிலையான பண்பினையும் உண்மையான உள்ளீட்டையும் எடுத்து விளம்புவது; இல்லியல் குடியியலின் ஒப்புயர்வற்ற சட்டங்களை ஒரு தொகுப்பிலே வைத்துக் காட்டுவது; உள்ளத்தின் கனிவுமிக்க உணர்ச்சிகளை எளிதாகவும் அழகாகவும் பகுத்தாய்வது போலவே, எண்ணம், மொழி, பாநலம், இவற்றிலும் இயற்கை அன்னையின் இயம்பொணாத பெருமையை அவாவற்ற மனத்தொடு ஆழ்ந்தகன்று நுணுகி உன்னுவதிலும், ஒத்த நிறைவாற்றலுடையதாய் விளங்குவதுமாகும்.

—எம். ஏரியல்.

"எந்த மொழி பெயர்ப்பும் இதன் (குறளின்) கவர்ச்சித் தன்மையை ஓரளவுகூட எடுத்தியம்ப

முடியாது, உண்மையாகவே, இது இடை மிடைந்த வெள்ளியில் இட்ட தங்க இலந்தை, (ஆப்பில்) ஆகும்''

—டாக்டர் கிரேளல்

''உலகத்தின் பெருந்தனித் திறமையாளர்களிலே மயிலாப்பூர் நெசவாளியும் ஒருவர் என்பதில் ஐயமில்லை.''

''மதிப்பிலே அது (குறள்) மற்ற எல்லாத் தமிழ் இலக்கியங்களையும் விஞ்சுகிறது. ஒரு நாட்டின் எல்லா மக்களது உணர்ச்சியையும் ஊடுருவி, என்றும் மாயாது நிலவும் ஒரு சில பெரு நூல்களிலே அதுவும் ஒன்றாகும்.''

''அவை (குறள் பாக்கள்) மிகச் சிறந்த ஒழுக்கத்தைத் திட்டமிடும் உரைகளாகும்'',

—ரெவரெண்ட் ஜி. யு. போப், எம்.ஏ., டி.டி

''கிரேக்கர்களுக்கு ஹோமர் எப்படி என்றும் சிறந்தவரோ, அப்படியே, குறள் தமிழ் மக்களுக்கு இன்றியமையாத இலக்கியப் புதையல், எடுத்துரைக்க ஏற்ற கவி, ஒப்புயர்வற்ற வகையான சொல்லின் பெருஞ் சிறப்பு, ஒழுக்கத்தின் மேதகவு.

''மனைவியர் கணவன்மாரைக் காதலிக்கவும், மக்கள் உண்மை, ஈகை, அமைதி கூடவும் கூறி, ஆளுநர் தண்ணளியும் நுண்ணறிவும் பூணவும், ஆளப்பட்டோர் பணிவும் உதவி மனமும் நிறையவும் வற்புறுத்தும் கவியை (வள்ளுவரை) எந்த மதகுருவும் வெளிப்படையாகக் கண்டிக்க முடியாது.''

—சார்லஸ் இ. கவர்

"எந்த மதகுருவையும் கண்டித்து வள்ளுவர் ஒரு சொல்லும் சொல்லவில்லை யென்று திரு. கவர் கூறுவது சரியாகலாம். சமய குருவகையினரை வெளிப்படை யாக அவர் தாக்கவில்லை யென்பது உண்மையே. ஆனால் இத்தகையதொரு நூலில், ஏதும் கூறாமல் இருப்பதில் ஏதோ கருத்திருக்க வேண்டும்."

"சமயத்தின் பேரால் செய்யும் போலித்தனம், ஏமாற்றல் கொடுமை இவற்றை நூல் முழுவதிலும் எதிர்ப்பதாகத் தோன்றுகிறது."

—ரெவரெண்ட் இ. ஜெ. ராபின்சன்

'(குறளில்) சொல்லியவற்றில் சில, பழைய ஏற்பாட்டில் (Old Testament) முதல் முதலில் எழுதப் பெற்றவற்றைக் காட்டிலும் பழமையானவையாக இருக்கலாம்."

"திருவள்ளுவரது குறள் மிக உயர்ந்த ஒழுக்க நெறியைப்பற்றிய செய்யுள் நூலாகும்."

—ரெவரெண்டு எலி ஜஹால்

"கருத்திலும் மொழியிலும் இவற்றினும் மேம் பட்டன இல்லையென்று கூறவல்ல நூல்களில் தலை யாயதான குறள், நாட்டின் இலக்கியத்தில் ஒரு பகுதி யாகின்றது; தன்னளவிலேயே மிக மேம்பட்ட நூலா கிறது. எனவே, நமது பார்வையை ஈர்க்கும் வல்லமை யுடையதாகின்றது."

—ரெவ்ரண்டு டபுள்யூ. ஏர். ட்ரு

"குறள் என்பது தமிழ் மொழியில் வியக்கத்தக்க செய்யுள் தொகுப்பு; தூய்மை மிக்கதும், மிக உயரியதுமான சமய உணர்ச்சி இயல்பாக அமைந்தது."

—டாக்டர் பார்த்

"மிகத்தூய தமிழின் இயற்றப்பட்டது குறள். ஆசிரியர் தம் எண்ணங்களை அறிவிக்க எடுத்தாளும் ஏறத்தாழ 1200 சொற்களிலே ஐம்பதுகூட வட சொற்கள் அல்ல, நாம் அறிந்த தமிழ் நூற்களிலே எதுவும் தூய்மையில் குறளை அணுகவும் முடியாது. இன்றைய தமிழை அது என்றும் கண்டனம் செய்வது போலிருக்கிறது. தம் தாய்மொழியின் செழுமை, இனிமை, ஆற்றல் இவற்றை வள்ளுவர் தெளிவாக விளக்கிவிட்டார்."

"குறளை மேலும் வளமாக்க முடியாது, அதன் அமைப்பு முறையை மேலும் செம்மை செய்ய இயலாது. அது தன்னளவிலேயே ஒரு குறைவற்ற இழைப்போவியம். ஒரு கல்லின் அளவை, உருவத்தை, நிறத்தை சிறிதளவு மாற்றினாலும் முழு நிலையின் அழகும் கேட்டுவிடும்.

"இவ்வளவு உயர்ந்த ஒருவரை, இத்துணை ஒப்பற்ற ஒரு நூலை, அளித்த ஒரு நாடு, உருப்படாத இழிவான நாடாக இருக்கமுடியாது என்ற எண்ணம் எழுச்சி தருவதாகின்றது. அவர் அறிவுறுத்திய ஒழுக்கம், என்றும் மாறாத ஒழுக்கப் பண்புடைய மண்ணில் அன்றி, வேறு இடத்தில் வளர்ந்திருக்க இயலாது. தமிழ் மக்களின் மீட்சிக்காகப் பணி செய்வோர்க்கு, குறள் தனி வகையான, ஏன்? செறிந்து ஆர்வமளிக்கும் ஒரு நூலாகவேண்டும்."

—டாக்டர் ஜெ. லாசரஸ்

அயல் நாட்டவர்கள் நமது திருக்குறளை எவ்வளவு ஆழ்ந்து படித்து உணர்ந்து போற்றுகிறார்கள் என்று

அறியும்போது, நாம் இதுவரை எத்தனை குறளை எந்த அளவுக்குப் படித்திருக்கிறோம் என்று சிந்திக்காமல் இருக்கமுடியாது, உலகம் பாராட்டும் நமது நாட்டு மாபெரு நூலைக்கல்லாது நாள்பல கடத்திவிட்டோமே என்று இரங்காமல் இருக்கவுமியலாது, இனியாவது படிக்க வேண்டாமா என்ற எண்ணம் செறிந்தால்; சென்ற காலத்தில் நேர்ந்துவிட்ட குறையை எதிர் காலத்திலாவது களைந்து நிறைவு எய்தி மகிழலாம்.

10. *வள்ளுவர் வாய்மொழி

[நாவலர். பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.]

வள்ளுவர் வாய்மொழி என்னும் தொடர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் என்னும் பொருளதாகும். திருவள்ளுவ மாலையில் வள்ளுவர் வாய்மொழி மாண்பு, 'வள்ளுவர் வாய்மொழி மாட்டு' என வருதலுங் காண்க. வாய்மொழி என்பது மெய்யுரை என்னும் பொருளதுமாம், திருவள்ளுவரைப் **பொய்யில் புலவர்** என்றும், அவரியற்றிய திருக்குறளைப் **பொய்யாமொழி** என்றும் சான்றோர்கள் போற்றி வந்திருக்கின்றனர். 'திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழி' என்னுந் தொடர் திருவள்ளுவ மாலையில் உள்ளது. நல்லிசைப் புலவராகிய கூலவாணிகன் சாத்தனுர் தாம் இயற்றிய மணி மேகலைக் காப்பியத்தில்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்

எனத் திருவள்ளுவரைப் பொய்யில் புலவன் என்றும், திருக்குறளைப் பொருளுரை யென்றும் கூறியிருத்தலுங் காண்க. பொருள் என்பது மெய்ம்மை என்னும் பொருளதாதலை, 'பொருள்சேர் புகழ்' என்பதற்குப்

* ஆசிரியர் அவர்களது கட்டுரைத்திரட்டு பகுதி I-லிருந்து தொகுத்தது,

பரிமேலழகர் எழுதிய உரையாலறிக. இத்தகைய மெய்ந்நூலை இயற்றிய ஆசிரியரது வரலாறு இப்பொழுது நாம் அறியக்கிடப்பது ஒன்றுமில்லையென்றே சொல்லலாகும். இவரைப்பற்றி வழங்கும் கதைகள், பலரும் அறிந்தனவாகலின் அவற்றை இங்கெடுத்துக் கூறுகின்றிலேம். அவையெல்லாம் வள்ளுவனார் காலத்துடன் தொடர்புற்றெழுந்த சான்றுகளுடன் கூடியனவல்ல, அவை எங்ஙனமாயினும், அவரது நெய்தற்றொழில் மனையறமாண்பு என்பனவற்றைக் குறிக்கும் கதைகள் சிறந்த நீதியை அறிவுறுத்துவன 'வாகலின், அவற்றைப் போற்றிக் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை,

இனி, ஆராய்ச்சி முறையிலே, அவருடைய காலம், இடம், பிறப்பு, மதம் என்பன குறித்து எமக்குத் தோன்றுவனவற்றைச் சுருக்கமாகக் கூறுதும். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோட்டஞ் சமைத்து வழிபட்ட நாளில் அங்கு வந்திருந்த மன்னர்களில், 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்' ஒருவனுதல் கொண்டு, சிலப்பதிகார மணிமேகலைகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்று துணியப்படுகின்றது. மணிமேகலை ஆசிரியர் திருக்குறளை மேற்கோளாக எடுத்தாண்டது முன்பே காட்டப் பெற்றது. இவ்வாற்றால் வள்ளுவனார் கி. பி. முதல் நூற்றாண்டில் விளங்கினராவரெனக் கருதுதல் பொருந்தும். வேறு தடையில்வழி இன்னும் ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் முன்னாகக் கூறுதலும் இழுக்கின்றாம்,

இவர் பிறந்த இடம் திருமயிலாப்பூர் என்பது வழக்கு. 'செந்நாப்போதார் புனற்கூடற்கச்சு' என்பது

கொண்டு, இவர் மதுரையிற் பிறந்தா ராவர் எனக் கருதுவாருமுளர். இவர் மதுரையிற் பிறந்தமை யாலோ, அன்றி அங்குச் சிலகாலம் வதிந்தமையாலோ, அங்கிருந்து திருக்குறளை அரங்கேற்றினமையாலோ கூடற்கு அச்சு என்று கூறப்பெற்ருராதல் வேண்டும்.

இனி, இவர் பிறப்புப் பற்றிப் பலர் பலவாறு கூறுவர், வள்ளுவர் என்பது தமிழ்நாட்டு மக்களுள்ளே ஓர் குடியினரைக் குறிக்கும் பெயராதலை இருவகை வழக்கினும் அறியலாகும். பழைய தமிழ்ப் பெரியார் பலர் குடிப்பெயரால் வழங்கப் பெறுதலும் பலரும் அறிந்ததே. இவ்வாற்ருல் இவர் வள்ளுவக் குடியிற் பிறந்தாரென்று கொள்ளுதல் பொருந்தும். வள்ளுவர் என்ற பெயர்க்கு வண்மையுடையோர் என்று சிலர் பொருள் கூறுகின்றனர். அது வள்ளுவக்குடியிற் பிறந்தவர் அத்துணை மேன்மை யுடையராதல் சாலாது என்னும் கருத்துடன் கூறப்படுவதே யாகும். பழைய இலக்கியங்களில் வண்மையுடையோன் என்ற பொருளில் வள்ளல், வள்ளியோன் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. வள்ளுவன் என்பது குடிப்பெயராகவே வழங்குகின்றது. வள்ளுவக்குடி என்பது தமிழ்நாட்டிலுள்ள பழங்குடிகளில் ஒன்ருகும். பழம் பெருங்காப்பியமாகிய மணிமேகலை முதலியவற்றில் முதுகுடி என்று கூறப்படுவது அதன் பழமைக்கு உறு சான்ருகும். வள்ளுவர் என்பார் அரச காரியங்களை நகரமாந்தர்க்கு அறிவிக்கும் கருமத் தலைமை யுடையார் என்றும், அன்னோர் தானைகள் சூழ யானை மீதிவர்ந்து சென்று முரசறைந்து தெரி

விப்பர் என்றும் தொன்னூல்களால் அறியப் படுகின்றது. பெருங்கதை என்ற பழங் காப்பியத்தில் தமிழ் வழக்கை யொட்டி, வள்ளுவரைப் பற்றிய செய்திகள் பலவிடத்துக் கூறப்பட்டுள்ளன,

அரசருடைய பிறந்த நாள், படையெழுச்சி நாள், மண நாள் இப் பெரு நாட்களிலேயே அச் செய்திகளை வள்ளுவர் முரசெறிந்து தெரிவிப்பர் என்று கூறியிருப்பது, பொதுவாகப் பறை யறையும் ஏனேரின் இவருக்குள்ள வேறுபாட்டையும், இவர் தம் மதிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. இக் குடியினர் பண்டு தொட்டே நிமித்தம் அல்லது சோதிடம் எனப்படும் குறி நூலில் வல்லுநராக இருந்து வருகின்றனர். இவ் வாற்ருல் வள்ளுவக்குடி என்பது அறிவு முதலிய தகுதி யமைந்த ஒரு முதுகுடி என்பது பெறப்படும்.

திருவள்ளுவமாலை என்னும் பெயரால் வழங்குகின்ற வெண்பாக்களின் தொகுதி திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம் போல்வ தொன்ருகும். சிறப்புப் பாயிர இலக்கணங்கள் அதில் நன்கமைந்துள்ளன. திருக்குறள் அரங்கேறியபொழுது, அதனைச் செவிமடுத்தின்புற்ற சங்கப் புலவர் ஒவ்வொருவரும் தனித் தனியாக அதனைப் புகழ்ந்து பாடிய பாக்களின் தொகுதியே திருவள்ளுவமாலை என்பதில், இற்றைநாள் ஆராய்ச்சியாளர் சிலர்க்குக் கருத்தொருப்பாடு இன்றெனினும், அத்தொகுதி ஓர் ஆயிரம் ஆண்டுகளின் முன்பே நிலைபெற்றிருந்த தென்பதனை யாரும் மறுக்க வியலாது,

வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்

என்னும் கல்லாடச் செய்யுளடிகள் அப்பாக்களின் பழமையைப் புலப்படுத்துவதோடு, இறையனூர் பாடியதை முதற்கவி என்று கூறுதலின் அப்பொழுதே அப்பாக்கள் ஒருமுறைப்படத் தொகுக்கப்பட்டிருந்தன என்பதையும் தெரிவிக்கின்றன. நாமகள் பாடியதென்பது பின்பு முன்னர்ச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். இறையனூர் முதலாக ஐம்பத்தொருவர் பாடிய திருவள்ளுவ மாலைச் செய்யுட்களுள் நாற்பத்து நான்கில், ஆக்கியோன் பெயராக 'வள்ளுவர்' என்னும் பெயர் வந்துளது. அவற்றுள், மாமூலனூர் பாடிய செய்யுளிலுள்ள 'வள்ளுவனென்பானேர் பேதை யவன் வாய்ச் சொற் கொள்ளா ரறிவுடையார்' என்பது அவர் வள்ளுவக்குடியிற் பிறந்தவர் என்பதனைக் குறிப்பால் வலியுறுத்தலுஞ் செய்கின்றது. மற்று, முதற்பாவலர், செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் பெயர்கள் ஒவ்வொரு பாவில் வந்துள்ளன. எனவே, திருவள்ளுவர் என்னும் பெயரே ஆசிரியர்க்குப் பயில வழங்கியதென்பது போதரும். இவ்வாற்றால் வள்ளுவக் குடியிற் பிறந்த காரணத்தாலேயே தெய்வப் புலவர் வள்ளுவர் என வழங்கப்பெற்றார் என்பதில் எத்துணையும் ஐயமில்லை. அது குடிபற்றிய பெயராயினும், அதுவே அவர்க்கு இயற்பெயர் போல் ஆகிவிட்டமையின்,

சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில், சேனாவரையர், கல்விபற்றிய சிறப்புப் பெயர் முன்னும்,

இயற்பெயர் பின்னும் வருவதற்கு, 'தெய்வப் புலவன் திருவள்ளுவன், என்று உதாரணங் காட்டினர்.

இவரது சமயங் குறித்தும் பல்வேறு கொள்கைகள் உண்டு. கடவுள் வாழ்த்திலே. 'மலர் மிசையேகினான்; 'அறவாழி யந்தணன்' என்று கூறியிருக்கும் கடவுட் பெயர்களும், வேறு சில ஏதுக்களும் திருவள்ளுவர் சமணரென்பதனைக் காட்டுமென்றும், பௌத்த ரென்பதனைக் காட்டுமென்றும் ஒவ்வொரு சாரார் கூறுவர். வள்ளுவனார் உலகிற்கு முதலாகக் கடவுளுண்டென்பது, வேள்வியை ஒத்துக்கொள்வது, முதலிய காரணங்களால் அக்கொள்கைகள் மறுக்கப் படுகின்றன. இவர் இப்பொழுது இந்து மதம் என்னும் பெயரால் வழங்கும் சமயத்தொகுதியுட் பட்டவரென் பதே ஒரு தலையாகத் துணியற் பாலதாகின்றது. இச் சமயங்களுள்ளும், இவரைச் சைவரென்று கூறுதற்கு அடிப்பட்ட ஆட்சி வலியுடைத்தாய் நிற்கின்றது. இவரியற்றிய நூலொன்று கொண்டே இவரை வைணவ ரல்ல ரென்று மறுத்தற் கிடனில்லை யென்பது உண்மையே. சைவ சமய நெறித் தலைவர் சிலர், திருக் குறளைத் தங்கள் சமய நூற் பொருண்மைக்கும் மேற் கோளாக எடுத்துக் காட்டுதலும், சைவ தவ வடிவ மாகத் திருவுரு நிறுவி இவர் வழிபடப் பெறுதலும், நாயனார் என்று பெயர் தந்து தமிழ் மக்களால் வழங்கப் பெறுதலும் போல்வன சைவரென்னும் ஆட்சியின் பாலவாம். எனினும், இவரியற்றிய நூலானது உலகத்தா ரனைவர்க்கும் பொதுவாகிய தொன்றென்பது பலரும் இதனைப் பொது மறையெனப் போற்றுதலானே அறியலாகும்.

இனி, ஆசிரியர் வரலாற்றை இவ்வளவில் நிறுத்தித் திருக்குறளின் மாண்புகளில் ஈண்டைக்கு இயலுமளவு கூறுதும், திருக்குறளின் மாண்பெல்லாம ஆசிரியர் மாண்பா மென்பதும் கடைப்பிடிக்க. திருவள்ளுவர்க்குப் பின்றேன்றிய ஆசிரியர்களில் இந்நூலைப் போற்றுதார் யாருமிலர். பெருங் காப்பியங்களியற்றிய புலவர் பெருமக்களும், இறைவன் அருட்கடலிற் றிளைத்து நின்று பதிகங்கள் பாடிய பேரருளாளர்களும், கடவுள், உயிர், உலகம் என்பவற்றின் இயல்பினைத் தெரிவிக்கும் உண்மை நூல்களியற்றிய ஆசிரியர்களும், மற்றுள்ள புலவர்களும் திருக்குறட் பாக்களையும் தொடர்களையும் தங்கள் செய்யுட்களில் எடுத்தமைத்து அழகுபடுத்தி யிருக்கின்றனர். அதன் ஆணை வழியில் நின்று அதனை மேற்கோளாக எடுத்துக்காட்டி யிருக்கின்றனர்; திருவள்ளுவரையும் திருக்குறளையும் எல்லையின்றிப் புகழ்ந்து பாராட்டி யிருக்கின்றனர். ஒப்புயர்வற்ற பெருங்காப்பியமியற்றிய கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் தமது இராமாயணத்தில் எத்தனை யிடத்தில், எத்தனை திருக்குறட்பாக்களை, எத்தனை முறையாக அமைத்திருக்கின்றனர் என்பதனை நோக்குவார்க்குத் திருக்குறளானது கவியுலகத்தை எங்ஙனம் ஆட்கொண்டிருக்கின்ற தென்பது புலனுதும். இற்றை நாளிலோ, ஆங்கிலம் முதலிய மேனுட்டு மொழிகள் பலவற்றிலும், வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலியவற்றிலும் திருக்குறளை மொழி பெயர்த்துப் படித்துப் பயனெய்தி வருகின்றனர். பண்டை நாளிலேயிருந்த தண்டமிழ்ப் புலவர் புலரும் இதனை ஒப்புயர்வற்ற நூலாகப் பாராட்டியதே யன்றி, இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த

மேனாட்டுப் புலவரொருவரும் 'திருக்குறள் போன்ற தொரு நூல் வேறெந்நாட்டு மக்களிடத்தும் காணப்படுவ தின்று' என்று மனமுவந்து கூறுமாறுபடி, இதன் புகழ் யாண்டும் விஞ்சிப் பரப்பதாயிற்று. இவ்வாறெல்லாம் பலரும் ஒரு படித்தாய் இந்நூலைப் பாராட்டுதற்கு இதன் கட் காணப்படும் சிறப்பியல்புகள் என்னை? இவ்வினா விற்குச் சில மொழிகளில் விடையிறுத்து விடுவதென்பது எளியதொன்றன்று. பன்னாற் பயிற்சியுடையராய் இந் நூலைப் பல்காலும் பயின்றுவரும் மதிநல முடையார்க்கு இதன் ஈடு மெடுப்புமில்லாத சிறப்பியல்புகள் விளங்கா நிற்கும். ஈண்டு எம் சிற்றறிவிற் கியைந்தவாறு ஒன்றி ரண்டு காட்டுதும். 'எல்லாப் புலவர்க்கும் வெண்பாப்புலி என்றோதப்படும் வெண்பா யாப்பினுள்ளும், அளவிற் சிறியதொரு குறட்பாவைக் கருவியாகக்கொண்டு, கூறக் கருதிய பொருட் பரப்பையெல்லாம் எவ்வகைக் குற்றமு மின்றி, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல் முதலிய அழகெல்லாம் பொருந்தக் கூறி வைத்திருப்பதொன்றே ஆசிரியரது தெய்வப் புலமையின் பெற்றியைத் தெரி விக்கப் போதியதாகும். மற்று, இந் நூலின்கண், ஒன் றுக்கொன்று சேய்மையவாகிய உலகியற்றுறைகளனைத் தையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளத் தெளிய வுணர்த்தும் உலகியலுணர்வின் நிறைவு காணப் படுகின்றது.

இனி, வீடடையும் நெறியினை இவ்வாசிரியர் கூறி யிருக்கும் முறை போற்றற் பாலதாகும். கல்வியறி வும், குணநலங்களும் சான்ற கணவனும் மனைவியும் தலைசிறந்த அன்பினை யுடையவராய், கடியற் பால

வாய குற்றங்களைக் கடிந்து, விருந்தோம்பல், ஈகை ஒப்புரவு முதலிய அறங்களைப் புரிந்து வாழ வேண்டு மென்பதும், இல்லறம் முற்றுப்பெற்ற வழி அன்பின் முதிர்ச்சியாகிய அருளினை யுடையராய்த் தவஞ்செய்ய வேண்டுமென்பதும் இவர் கருத்தாகின்றன. துறவின் முதற்படியாகிய தவவொழுக்கம் அல்லது நோன்புகளில் உறைத்து நிற்றலால் உளத்தூய்மை யுண்டாக்கி, பின்னர் நித்த அநித்தப் பொருள்களின் வேறுபாட் டுணர்வு தோன்றும் என்பதும், வீடடைதற் குரியார் இருவகைப் பற்றுக்களையும் அறவே துறக்க வேண்டும் என்பதும், பற்றுக்களை விடுத்து மனம் அடங்கிய வழியும், மெய்யுணர்வில்லாவிடின் அதனாற் பயனின் றென்பதும், மெய்ந்நூற் பொருள்களைக் கற்றும் ஆராய்ந் தும், உண்மையை யுணர்ந்து மெய்ப்பொருளை இடை யறாது சிந்திக்க வேண்டுமென்பதும், அச்சிந்தனையுள் அழுந்தி நிற்றலால், பிறவிக்குக் காரணமாய வினைப் பகுதிகள் ஒழிய, பேரா வியற்கைத்தாகிய பேரின்ப வாழ்வு கிடைக்குமென்பதும் தெய்வப் புலவரின் திரு வுள்ளக் கிடைகளாகின்றன.